வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 12.09.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 281 | பக்கங்கள் : 20






03
பஞ்ஷீரில் தலிபான் வெல்வதற்கு ட்ரோன் அனுப்பியதா பாகிஸ்தான்?



08
தமிழ் அரசியல் தரப்புகளின் போலித்தனமான நகர்வுகள்!



09
நிலையான ஆட்சி அமைப்பார்களா தலிபான்கள்?



13
பதின்மங்களின் போர்!

# அரசு உடனே பதவி விலகி தேர்தலை நடத்தவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

கொழும்பு, செப். 12

"நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கின்றது. எனவே, ஒருவர் மீது ஒருவர் குற்றஞ் சாட்டுவதை விடுத்து, உடனடியாக அரசு பதவி விலகி தேர்தலொன்றை நடத்த வேண்டும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வலியுறுத்தினார்.

19



# கொரோனா தொற்றால் மேலும் 157 பேர் மரணம்

## 11 ஆயிரத்தைத் தாண்டியது மொத்தக் காவு எண்ணிக்கை

கொழும்பு, செப். 12

நாட்டில் மேலும் 157 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்

19

# நேற்று 2,796 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, செப். 12

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 2 ஆயிரத்து 796 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயி

19

# பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்க சகல நாடுகளும் ஒன்றிணையவேண்டும்

## இலங்கை அரசு அழைப்பு

கொழும்பு, செப். 12

பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் மற்றும் வெளிப்பாடுகளிலும் ஒழிப்பதற்காக அனைத்து நாடுகளும் ஒன்றிணைவதற்கான தேவையை இலங்கை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்த விரும்புவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் செப்ரெம்பர் 11 பயங்

19

# யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இருவருக்கு கொரோனா உறுதி!

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு தொற்று உறுதி

19

## திருமணத்துக்கு சென்றவேளை

# மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த பெண் மரணம்!

யாழ்ப்பாணம், செப். 12

மந்துவில் பகுதியில் திருமண நிகழ்வு ஒன்றுக்காக மோட்டார் சைக்கிளில் சென்றபோது தவறி வீழ்ந்து காயமடைந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும்

19

# மக்களும் வாகனங்களும் வீதிகளில் ஊரடங்கை நீடிப்பதால் பயனில்லை

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் விசனம்

கொழும்பு, செப். 12

"இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கை முறையாகச் செயற்படுத்தாமல் நீடிப்பதில் பயனில்லை."

- இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த

19

# யாழ். பல்கலை மருத்துவபீட மாணவி வீட்டிலிருந்து நேற்று சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 12

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட முதலாமாண்டு மாணவி நேற்று அவருடைய வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கற்றல் சுமை காரணமாக அவர் உயிரிழந்

19

# சர்வதேச சந்தையிலிருந்து இலங்கை 50,000 கோடி ரூபா கடன் பெறுகிறது!

கொழும்பு, செப். 12

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொள்ளும் கடுமையான நிதி நெருக்கடியை சமாளிக்க சர்வதேச சந்தையில் இருந்து 250 கோடி அமெரிக்க டொலர் (கிட்டத்தட்ட 50,000 கோடி ரூபாய்) கடனை அவசரமாகப் பெற எரிசக்தி அமைச்சு முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவை

19




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு பெரிய நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டி ருந்த ஒருவர் நோய்வாய்ப்பட் டார்.

பெரிய பெரிய மருத்துவர்களிடம் காண்பித்தும் பயனில்லை.

என்னசெய்வது என்று யோசித்துக்கொண்டிருந்த வரிடம் அவர் மனைவி, "நீங்கள் ஏன் ஒரு வெட்னரி டாக்டரிடம் போகக்கூடாது?" என்றார்.

அதிர்ச்சி அடைந்த கணவன், "உனக்கு என்ன மூளை கெட்டுப் போச்சா?" என்றார்.

மனைவி சொன்னாள்:

"எனக்கொன்றும் இல்லை. உங்களுக்குத் தான் எல்லாம் கெட்டுப்போச்சு.

"காலங்காத்தால கோழி மாதிரி எந்திரிச்சு, அப்புறம் காக்கா மாதிரி குளிச்சிட்டு, குரங்கு மாதிரி லபக் லபக்குன்னு தின்னுட்டு, பந்தயக் குதிரை மாதிரி வேக வேகமாக அலுவலகத்துக்கு ஓடி, அங்க மாடு மாதிரி உழைக்கிறீங்க.

"அப்புறம், உங்களுக்குக் கீழே உள்ளவங்ககிட்ட கரடி மாதிரி கத்துறீங்க. மாலையானதும் வீட்டுக்கு வந்ததும் எங்கிட்ட நாய் மாதிரிக் குலைக்கிறீங்க.

"அப்புறம் முதலை மாதிரி ராத்திரி சாப்பாட்டை சரக் சரக்னு முழுங்கிட்டு, எருமை மாடு மாதிரி தூங்கறீங்க.

"அதனால தான் சொல்றேன், இப்படி இருக்கிற உங்களை கால்நடை டாக்டர்தான் குணப்படுத்த முடியும்."

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்து ஐக்கிய நாடுகள் சபைக்கு தமிழ் அரசுக் கட்சி கடிதம் எழுதியுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மைக்குப் புறம்பானது என்றும், அது விசமனத்தனமான பொய்ப் பிரச்சாரம் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் மதியாபரணம் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருக்கிறார்.

இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லைத்தான், ஆனால், அதே நாளான்று அதேநேரம் என்றும்கூட சொல்லலாம், கிளிநொச்சியில் வைத்து மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனோ, இருதரப்பும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், அதுபற்றி ஆராயவேண்டும் என்று தெரிவித்திருந்தோம் என்று தெரிவித்திருக்கிறார்.

இந்த விவகாரம் தொடர்பாக இந்தப் பத்தியில் முன்னர் ஒருதடவை எழுதியபோது, தருஸ்மன் அறிக்கையை மேற்கோள் காட்டி சுமந்திரன் கடிதம் எழுதும்போது, அதனைக்குறிப்பிடத்தான் வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியிருந்தோம். அந்தப்பத்தியில் சுமந்திரன் இரண்டு முகங்களுடன் அரசியல் செய்யமுடியாது என்பதையும் குறிப்பிட்டிருந்தோம்.

நாம் குறிப்பிட்டதுபோலவே சுமந்திரன் இங்கு அவசரஅவசரமாக தனது மற்றையை முகத்தை யாழ்ப்பாணத்தில் காட்டவேண்டிவந்தது.

அவர், யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்ததி லும் தவறு இருக்கும் என்று நாம் குறிப்பிடப் போவதில்லை.

ஏனெனில் அவர் குறிப்பிட்டது, புலிகளுக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்தவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதுதான். அது உண்மையே. ஆனால், சிறிதரன் சொல்வதும் உண்மையே.

புலிகள் குற்றம் இழைத்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகவே அவர் குற்றம் சாட்டுகிறாரே தவிர, புலிகள் மீது விசாணை நடாத்த கோரியிருப்பதாக அவர் எங்கும் சொன்னதாக இல்லை.

சுமந்திரனுக்கு ஏன் இந்த தடுமாற்றம் என்பது மட்டும் புரியவில்லை. நேரடியாக அந்தக் கடிதத்தையே ஊடகவியலாளர்களுக்கு கொடுத்தி ருக்கலாமே. அது என்ன இரகசிய ஆவணமா, என்ன?

தமிழரசுக்குள் ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சிக்கலைத் தீர்க்க வைத்தியம் இருக்கும்போலத் தெரியவில்லை.

**- ஊர்க்குருவி**

# அரசியல் சார்பு நியமனங்கள் மத்திய வங்கியை சீரழிக்கும்

### சுட்டிக்காட்டுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, செப். 12

மத்திய வங்கி அரசியல் சார்பு, தொடர்புகள் இல்லாது சுயாதீனமாக செயற்பட வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் விதிமுறைகள் ஒரு



பாராளுமன்ற உறுப்பினர் அதன் ஆளுநராக செயல்பட அனுமதிக் காது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்போது மத்திய வங்கி அரச திணைக்களமொன்றைப் போல மாறியிருக்கின்றது என்று பலரும் விமர்சிக்கின்றார்கள். அரசியல்வாதி யொருவரை, அதிலும் அமைச்சுப் பதவி வகித்த ஒருவரை உடனடியா கவே மத்திய வங்கியின் ஆளுநராக நியமிப்பதென்பது அக்கட்டமைப் பின் சுயாதீனத்தன்மையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்-என் றார். (அ)

## சிவாஜிலிங்கத்துக்கு கொரோனா தொற்று!



யாழ்ப்பாணம், செப். 12

முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு கொரோனாத் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

நேற்று கொரோனா அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் வல்வெட் டித்துறை ஊறணி வைத்தியசாலைக் குச் சென்றிருந்தார்.

அங்கு அவருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட தில் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

அதனை அடுத்து நோயாளர் காவு வண்டிமூலம் அவர் கோப்பாய் கொரோனா வைத்தியாசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## தபாலகங்கள் 7 நாள் திறப்பு

கொழும்பு, செப். 12

இலங்கையில் உள்ள அனைத்து தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்களும் நேற்று முதல் திறக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதி பர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

ஓய்வூதியம் உள்ளிட்ட கொடுப் பனவுகளை வழங்குவதற்காக தபால் நிலையங்கள் திறக்கப்படுவதாக அவர் கூறினார்.

அதன்படி, நேற்று முதல் 7 நாட் களுக்கு தபால் நிலையங்கள் திறந்தி ருக்கும்.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களின் செப் ரெம்பர் மாத ஓய்வூதியங்கள் நேற்று முதல் செலுத் தப்படும்.

அத்துடன் முதியோர் உதவித் தொகை, விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் மீனவர் ஓய்வூதியத்தை செலுத்துவதற் காகவும், தபால் மற் றும் உப தபால் நிலையங்கள் திறந்தி ருக்கும் என்றும் அவர் மேலும் தெரி வித்தார்.

### கல்வி TV CHANNEL-1

**12.09.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி TV CHANNEL - 2

**12.09.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
12.09.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# பனிபோரில் தமிழரசு கட்சி!

சம்பந்தன் மிகவும் தளர்ந்து செல்லும் நிலையில், தமிழசு கட்சியின் தலைமைத்துவம் ஊசலாடத் தொடங்குகின்றதா? சில தினங்களாக இடம் பெற்றுவரும் விடயங்களை உற்று நோக்கும்போது, இவ்வாறானதொரு கேள்வி தவிர்க்க முடியவில்லை. ஐ. நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பும் விடயத்தில் சுமந்திரன் அணி, சிறிதரன் அணி என்னும் அடிப்படையில் விவாதங்கள் இடம்பெறுகின்றன. சம்பந்தனது கையெழுத்துடன் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் தங்களுக்கு உடன்பாடில்லை என்று சிறிதரன் தெரிவித்திருக்கின்றார். ஒரு கட்சிக்குள் இருப்பவர்கள் மத்தியில் ஏன் இவ்வாறான முரண்பாடுகள் இடம்பெறுகின்றன?

இது தொடர்பில் இரு வேறு ஊடக சந்திப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. கடந்த பாராளுமன்ற தேர்தலில் சிறிதரன் - சுமந்திரன் ஆகியோர் ஒன்றாகவும், மாவை சேனாதிராசாவின் தலைமையில் பிறிதொரு தரப்பாகவும் தமிழரசு கட்சியினர் செயற்பட்டிருந்தனர். சுமந்திரன் பங்குகொள்ளும் தேர்தல் கூட்டங்களில் தாங்கள் பங்குகொள்ளக்கூடாது என்னுமடிப்படையில் செயற்பட்டிருந்தனர். அந்தளவிற்கு, தமிழரசு கட்சிக்குள் நிலவிய உள் முரண்பாடுகள் வீதிக்கு வந்திருந்தன. சுமந்திரனும் - சிறிதரனும் இணைந்து மேற்கொண்ட தேர்தல் வியூகத்தில் இருவருமே வெற்றி பெற்றிருந்தனர். சுமந்திரனை எதிர்த்து செயற்பட்ட தமிழரசு தரப்பில் எவருமே வெற்றிபெற்றிருக்கவில்லை. தன்னை எதிர்த்து செயற்பட்டவர்கள் தோல்வியடைந்திருப்பதாக சுமந்திரன் ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்தார். ஆனாலும், சுமந்திரனை அடிப்படையாகக்கொண்டு தமிழரசு கட்சிக்குள் மூண்ட தீ முழுமையாக அணைந்துவிடவில்லை. அது, புகைந்துகொண்டே இருந்தது. தற்போது மீண்டுமொரு சந்தர்ப்பம் கிடைத்தவுடன் எரிந்து கொண்டது.

சம்பந்தன், அவரது அரசியல் வாழ்வில் இறுதிக் காலத்தை எட்டியிருப்பதால், சம்பந்தன் தொடர்பில் கடசிக்குள் எவரிடமும் பதட்டங்கள் இல்லை. ஏனெனில், இனி சம்பந்தனின் தயவு எவருக்குமே தேவையில்லை. இந்த நிலையில் சம்பந்தனை வெளிப்படையாக எதிர்ப்பதுகூட, இப்போது பிரச்னைக்குரிய விடயமல்ல. இந்த அடிப்படையில்தான் சம்பந்தனின் கடிதத்தில் தங்களுக்கு உடன்பாடில்லை என்று சிறிதரனால் சாதாரணமாக கூறமுடிகின்றது. ஆனால் மறுபுறம் சுமந்திரனோ, இப்போதும் சம்பந்தனை புகழ்ந்துகொண்டிருப்பதை காணமுடிகின்றது. சம்பந்தனின் ஆளுமை தொடர்பில் அண்மையில் ஒரு நேர்காணலின்போது, சுமந்திரன் சிலாகித்திருந்தார். அந்த ஆளுமையுடன் தங்களுக்கு உடன்பாடில்லை என்றுதான் சிறிதரன் கூறுகின்றார்.

உண்மையில், தற்போது தமிழரசு கட்சிக்குள் இடம்பெற்றுவரும் உள் முரண்பாடுகள் கொள்கை சார்ந்த பிரச்னையல்ல. மாறாக, அது கட்சியின் அடுத்த தலைமைத்துவம் தொடர்பானது. சம்பந்தனின் ஆதரவை பெற்றவராக சுமந்திரன் இருப்பதால், சுமந்திரன் வேறு எவருக்கும் பொறுப்புச் சொல்லும் ஒருவராக இல்லை. அதனை சுமந்திரன் மிகவும் வெளிப்படையகாகவே மேற்கொண்டு வருகின்றார். விடயம் நடந்து முடிந்த பின்னர்தான் சுமந்திரனின் விளக்கங்கள் வெளிவருகின்றன. அதேவேளை, சம்பந்தன் இல்லாவிட்டால் அடுத்து யாரோடு பேசுவது என்னும் கேள்விக்கு முன்னால் எப்போதுமே சுமந்திரன் மட்டுமே விடையாக இருக்கின்றார்.

சம்பந்தன் வழங்கிய இடத்தை சுமந்திரன் மிகவும் கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டுவிட்டார். இந்த நிலையில், சம்பந்தனுக்கு பின்னர் தமிழரசு கட்சியின் தலைமை தங்களிடம் வந்து சேரவேண்டுமென்று எண்ணுபவர்களுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் ஒரு பனிப் போர் இடம்பெற்றுவருகின்றது. கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது ஆரம்பித்த இந்த போர், மெதுவாக உள்ளுக்குள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. தங்களுக்கான சிப்பாய்களை சேகரித்து, ஒன்றிணைக்கும் முயற்சியிலும் சிலர் ஈடுபட்டுவருகின்றனர். இதன் விளைவாகவே இவ்வாறான முரண்பாடுகள் அரங்கேறுகின்றன. எவரது அணியில் அதிகளவான சிப்பாய்கள் இருக்கின்றார்களோ அவர்கள் மற்றவர்களை வீழ்த்துவதற்கான வாய்ப்பை தேடிக் கொண்டிருக்கலாம். ஆனால், சில வேளைகளில் சிப்பாய்களின் எண்ணிக்கையை, ஒரு சிறந்த வியூகம் தோற்கடித்துவிடலாம். அப்படியொரு வியூகம் எவரிடம் இருக்கின்றது?

# பஞ்ஷீரில் தலிபான் வெல்வதற்கு ட்ரோன் அனுப்பியதா பாகிஸ்தான்?

*ஆப்கானிஸ்தான் பஞ்ஷீர் பள்ளத்தாக்கில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போரில் தலிபான்களுக்கு உதவி செய்வதற்காக பாகிஸ்தான் ட்ரோன்களை அனுப்பியதாக கூறப்படுகிறது. தலிபான் போராளிகள் காபூலின் வடகிழக்கில் உள்ள பஞ்ஷீர் மாகாணத்தை வெல்ல போராடி வருகின்றனர், தலிபான்களை எதிர்க்கும் ஆப்கன் நாட்டின் கடைசி பகுதியாக இருந்து வருகிறது பஞ்ஷீர்.*



*தலிபான்களுக்கு உதவும் வகையில், தாலிபன்களுக்கு எதிரான படைகள் மற்றும் நிலைகளின் மீது இலக்கு வைக்க, பாகிஸ்தானின் ட்ரோன்கள் பயன்படுத்தப்படுவதாக சமீபத்தில் சில குற்றச்சாட்டுகள் வெளிவந்துள்ளன. "பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் உள்ள பஞ்ஷீர் பள்ளத்தாக்கை ட்ரோன்களால் குண்டுவீசி தாக்கியது" என பஞ்ஷீர் மாகாண ஆளுநர் கமாலுதீன் நிஜாமி கூறியதாக ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் தாஜ/தீன் சொரூஷ் கூறியுள்ளார்.*

*தாலிபன்களுக்கு எதிரான சில இலக்குகள் வானிலிருந்து தாக்கி அழிக்கப்பட்டதாகவும், அது போன்ற தாக்குதல் திறன்கள் பாகிஸ்தானிடம் மட்டுமே இருப்பதாகவும் சில செய்திகள் வெளியாகியுள்ளன. இது போன்ற சில செய்திகள், ஆப்கானிஸ்தான் விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவதற்கு இதுவே சாட்சி என்கிற ரீதியில் சமூக வலைதளங்களில் அதிகமாக பரவி வருகின்றன.*

*ஆப்கனின் உள்விவகாரங்களில் பாகிஸ்தானின் தலையீடு இருப்பதாக குற்றம்சாட்டி ஈரானிய மற்றும் இந்திய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட சில செய்திகளில் பாகிஸ்தான் ராணுவ தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் என தவறான படங்கள் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன.*

*"இவை அனைத்து பொய். இது இந்திய தரப்பிலிருந்து பரப்பப்படும் பகுத்தறிவற்ற பிரசாரம்" என பாகிஸ்தான் ஆயுதப் படையின் செய்தித் தொடர்பாளர் ஜெனரல் பாபர் இஃப்திகர் கூறியுள்ளார். "ஆப்கனில் நடக்கும் எந்த ஒரு சம்பவத்துக்கும், பாகிஸ்தானுக்கும் எந்த தொடர்பும் இல்லை. அது பஞ்ஷீர் விவகாரமோ அல்லது மற்ற எந்த விவகாரமாகவோ இருக்கலாம்"*

*தாலிபன்களுக்கு பாகிஸ்தான் உதவி வருவதாக அமெரிக்கா உட்பட பலரும் குற்றம்சாட்டினர். ஆனால் அதை பாகிஸ்தான் தொடர்ந்து மறுத்து வந்திருக்கிறது. ஆனால் பாகிஸ்தானின் ராணுவ மற்றும் உளவு அமைப்புகள் ஆப்கானிஸ்தானில் இருக்கும் தாலிபன் போன்ற குழுக்களோடு இன்னும் தொடர்பில்தான் இருக்கின்றன.*

*பாகிஸ்தானிடம் ட்ரோன்கள் இருக்கின்றன. கடந்த **2015** மார்ச்சில், உள்நாட்டில் வடக்கு வசீரிஸ்தான் பகுதியில் போராளி குழுக்களுக்கு எதிராக ராணுவ நடவடிக்கைகளை எடுக்க ட்ரோன்களைப் பயன்படுத்துவதாக பாகிஸ்தானே ஒப்புக் கொண்டது. பாகிஸ்தான் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட புராக் என்கிற ட்ரோனை பயன்படுத்தியது. அது வானிலிருந்து தரையில் இருக்கும் இலக்கை தாக்கும், லேசர் உதவியோடு செயல்படும், ஏவுகனைகளை ஏவக் கூடிய திறன் படைத்தது.*

*துருக்கி அல்லது சீனா அல்லது இருநாடுகளிடமிருந்து தொலை தூரம் பறக்கும் ட்ரோன்களை பாகிஸ்தான் பெற்றுள்ளதாகவும் சில செய்திகள் வெளியாகி இருக்கின்றன. கடந்த ஆண்டு பாகிஸ்தான் சீனாவின் விங் லூங் II ரக ட்ரோன்களை வாங்கியதாகவும் சில செய்திகள் வெளியாயின. அதே போல சீனாவின் CH - 4 ரக உளவு மற்றும் தாக்குதல் நடத்த பயன்படும் ட்ரோன்களை பாகிஸ்தான் வாங்கி இருப்பதாகவும் செய்திகள் வெளியாயின.*

*CH-4A ரக ட்ரோன்களை உளவுப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும், அது தொடர்ந்து வானில் சுமார் **30** மணி நேரம் பறக்கும் என்றும், CH-4B ரக ட்ரோன் **345** கிலோ வெடி பொருட்களோடு சுமார் **14** மணி நேரம் வானில் பறக்கும் என்றும் "ஜேன்ஸ் டிஃபென்ஸ் வீக்லி" என்கிற பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான சஞ்சிகை கூறுகிறது.*


*இதில் எந்த ரகத்தை பாகிஸ்தான் வைத்திருக்கிறது, அது செயல்பாட்டில் இருக்கிறதா இல்லையா என எதற்கும் தெளிவான விடை தெரியவில்லை. ஆனால் பாக் தரப்பு நீண்ட தூர ட்ரோன்கள் தங்களிடம் இல்லை என தொடர்ந்து மறுத்து வருகிறது.*

*இப்போதைக்கு பாகிஸ்தான் ஆப்கானில் ட்ரோன்களைப் பயன்படுத்தியதற்கு எந்த வித வலுவான ஆதாரங்களும் இல்லை. oryxspioenkop.com என்கிற வலைதளமோ பாகிஸ்தான் CH-4 ட்ரோன்கள் வைத்திருப்பதாகக் கூறுகிறது. கடந்த ஜூலை **12**ஆம் தேதி, பாகிஸ்தானின் பவால்பூர் விமானப் படை தளத்துக்கு அருகில் நான்கு ட்ரோன்கள் நிற்பதாக கூகுள் எர்த் புகைப்படங்களில் பார்க்க முடிகிறது.*

*லண்டனில் இருக்கும் ராயல் யுனைடெட் சர்வீசஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஜஸ்டின் ப்ராங்க் சில சந்தேகங்களை முன் வைக்கிறார். சீனாவில் தயாரிக்கப்பட்ட CH-4 ட்ரோன்கள், சீன இயக்கத்தின் கீழ் இருக்கும் செயற்கை கோள்களின் உதவியோடு தான் தொலைதூர இலக்குகளை குறி வைக்கின்றன. "பாகிஸ்தானின் எல்லை மீறலுக்கு உதவ சீனர்கள் தயக்கம் காட்டி இருக்கலாம்" என்கிறார் அவர்.*

(19ஆம் பக்கம் பார்க்க)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்-12 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - ஆவணி 27
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : சஷ்டி




12.09.2021

**மேடம்**
பேச்சிலும் செயலிலும் கவனமாக இருந்தால் கவலை இருக்காது. தாமதித்த விஷயங்கள் தடையின்றி நடைபெறும் நாள். அலுவலகத்தில் பிறருடைய தலையீடின்றி இயங்க விரும்புவீர்கள்.

**இடபம்**
நிதி விஷயங்கள் திருப்தி தரும். பெருமிதம் அதிகரிக்கும். மனக்குழப்பம் அகன்று நிம்மதி றெ நண்பர்கள் வழிகாட்டுவர். அலைபேசி வழியில் அனுகூலமான செய்தி கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் ஒன்று அகலும். விலகிச்சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். திட்டம் ஒன்று நன்மை தரும். உறவினர் ஒத்துழைப்பர்.

**கடகம்**
பணத்தேவை சற்று அதிகமானாலும் கவலை அளிக்காது. பிறரிடம் பக்குவமாகப் பேசி அனுசரித்து நன்மை பெறுவீர்கள். நண்பர்கள் நல்ல செய்தியை கொண்டு வந்து சேர்ப்பர்.

**சிம்மம்**
தடைப்பட்ட செயல் தானாக நடைபெறும் நாள். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்பு கிடைக்கும். தொலை தூரத்திலிருந்து அனுகூலச் செய்தி ஒன்று வரும்.

**கன்னி**
சுபநிகழ்ச்சி காரணமாக குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பதற்றம், அவசரமின்றி யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். செலவு சற்று அதிகரிக்கக்கூடும். பரபரப்பு கூடும்.

**துலாம்**
இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா என்று குழம்புவீர்கள். முயற்சிகளில் தாமதம் ஏற்பட்டாலும் சாதகமாக இருக்கும். அருகில் உள்ளவர்களின் ஆதரவு முன்பைவிடக்கூடும்.

**விருட்சிகம்**
நினைத்தது நிறைவேறும் நாள். பொருள் ஒன்றை வாங்குவீர்கள். நிகழ்காலத் தேவைகளில் ஒன்று நிறைவேறும். தொழில் வளர்ச்சிக்கு எதிர்பாலினத்தினரின் ஒத்துழைப்பு உண்டு.

**தனுசு**
சுயதேவைகளை நிறைவேற்றிக் கொள்வதால் மனநிறைவு ஏற்படும். சமீபத்தில் சந்தித்த ஒருவரின் செயலால் சந்தோஷம் கிட்டும். திட்டம் ஒன்றின் பலன் எதிர்பார்த்தபடியே அமையும்.

**மகரம்**
வருங்கால கனவுகளை நனவாக்க புதுமுயற்சி எடுப்பீர்கள். விலகிச் சென்ற ஒருவரால் திடீர் நன்மை ஏற்படும். உங்களின் புகழ் அதிகரிக்கும். பேச்சினால் நன்மை வரும்.

**கும்பம்**
விலகிய பணியிலிருந்து மீண்டும் அழைப்பு வரக்கூடும். மறதியால் செய்யத் தவறிய விஷயத்தை இன்று செய்து முடிப்பீர்கள். வேண்டிய ஒருவரால் சமீபத்தில் வந்த பிரச்னை விலகும்.

**மீனம்**
வாழ்வில் முன்னேறுவதற்கு இருந்த போட்டி அகலும். செலவு ஏற்பட்டாலும் அதன் மூலம் சந்தோஷம் கூடும். பரபரப்பாக செயலாற்ற வேண்டி வரும். கவனமாக இருங்கள்.

# தவறான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க...

## செப்ரெம்பர் 10: தற்கொலை முயற்சி தடுப்பு தினம்

**சூ.ம.ஜெயசீலன்**

உலகில் நிகழும் 100 இறப்புகளுள் ஒன்று தற்கொலையால் நிகழ்கிறது. அதிலும் 77% ஏழை மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில்தான் நடக்கிறது. இலங்கையிலும் தற்கொலை கவனத்துக்குரிய ஒரு பிரச்சினையாக உருவாகியுள்ளது.

ஒருவர் தன் உயிரைத் தானே எடுத்துக் கொள்வதற்கு இதுதான் காரணம் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. வறுமை, காதல் தோல்வி, போதைப் பழக்கம், திருமணம் தொடர்பான சிக்கல்கள், பணமிழப்பு, தேர்வில் தோல்வி, வேலையின்மை, தொழில் பிரச் னைகள், நெருங்கிய உறவினர்களின் இறப்பு, குழந்தை பெற இயலாமை, சுய கௌரவம் உள் ளிட்ட பல்வேறு காரணிகள் தூண்டுதலாக இருக்கின்றன.

உளவியலர் விக்டர் ஃபிராங்கிள், எதிர்பார்த்தது நடக்காமல் போவது அல்லது காலம் தாழ்த்துவது, தோல்வி, சலிப்பு, விபத்து, இயலாமை, மிரட்டல்கள் போன்றவை நம் மனதில் ஒரு வெற்றிடத்தை உருவாக்குகின்றன. அவ்வெற்றிடத்தை நாம் எதைக் கொண்டு நிரப்புகிறோம் என்பது மிகவும் முக்கியம் எனச் சொல்கிறார். வாழ்வின் எல்லா நிகழ்வுகளிலும் அர்த்தம் பொதிந்திருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கும் ஆற்றலும் எல்லா மனிதருக்கும் இருக்கிறது. அர்த்தத்தைக் கண்டுபிடித்து, அவ்வெற்றிடத்தை நிரப்ப வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். ஆனால், போதைப் பொருட்களால், எதிர்மறை எண்ணங்கள் மற்றும் நடவடிக்கைகளால், மனச்சோர்வு, தனிமை, குற்றவுணர்வினால் அவ்வெற்றிடத்தைச் சிலர் நிரப்புகிறார்கள். இது தற்கொலைக்கு இட்டுச் செல்கிறது என மேலும் விளக்குகிறார்.

மற்றவர்களுடன் ஒப்பிடுகையில், மனச்சோர்வு உள்ளவர்கள் தற்கொலை செய்துகொள்வதற்கான வாய்ப்பு 20 மடங்கு கூடுதலாக உள்ளதாகவும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. எனவே, தற்கொலை என்பது மனநோய் அல்ல. குணப்படுத்தக்கூடிய மனஅழுத்தம், மனச்சோர்வு, அதீத மகிழ்ச்சி அல்லது அதீத மனச்சோர்வு எனப்படும் இருமுனைக் கோளாறு, உணவு உண்ணுதல் கோளாறு போன்ற பலவற்றைக் கவனிக்காமல் விட்டதன் தீவிர விளைவே, தற்கொலைக்கு இட்டுச்செல்கிறது.

தற்கொலை என்பது நம்மளவில் நின்றுவிடுவதல்ல. குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் உடல், மன, பொருளாதார அளவில் பாதிக்கிறது. சமூகத்தின் முன் குற்றவுணர்வோடு வாழ வைக்கிறது. மேலும், மரபணு வழியாக நம் அடுத்தடுத்த தலைமுறையையும் தற்கொலையை நோக்கித் தள்ளுவதாக எண்ணற்ற ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

எனவேதான், தற்கொலை எண்ணம் உள்ளவர்கள், மனநல ஆலோசனைக்கு வரும்போது "இதற்கு முன்பு, உங்கள் குடும்பத்தில் யாராவது தற்கொலை செய்துகொண்டுள்ளார்களா?" என மனநல மருத்துவர்கள் கேட்கிறார்கள்.

பொதுவாக, தற்கொலை நடவடிக்கைகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

(1) எல்லாருக்கும் சுமையாக இருப்பதாகவும், தம்மை மற்றவர்கள் ஏமாற்றிவிட்டதாகவும் நினைத்து, தன் வாழ்வை முடித்துக்கொள்ள நினைப்பது;


(2) எந்தெந்த வழிகளிலெல்லாம் நிறைவேற்றுவது எனத் திட்டமிடுவது, வழிகளைத் தேர்ந்தெடுப்பது;

(3) தற்கொலைக்கு முயல்வது. இதில் எந்த நிலையில் நாம் இருந்தாலும் நண்பர்கள் அல்லது நம்மீது அக்கறையும் அன்பும் உள்ளவர்களிடம் பகிர்ந்துகொண்டு மனதை இலகுவாக்க அச்சப்படக் கூடாது. தனியறையில் முடங்கக் கூடாது.

நமக்குத் தெரிந்தவர்கள் அதீத பதற்றத்துடன் இருந்தாலோ, பேசுவதையும் பழகுவதையும் குறைத்துத் தனிமையை அதிகம் நாடினாலோ அவரோடு பேச எல்லா வழிகளிலும் முயற்சி செய்ய வேண்டும். கைபேசியில் அழைப்பவரின் குரலில் ஆழ்ந்த சோகம் அல்லது பதற்றத்தை உணர்ந்தால், எவ்வளவு முக்கியமான வேலையில் நாம் இருந்தாலும், அதை ஒதுக்கிவிட்டு, அழைத்தவருடன் பேச வேண்டும். தான் பேசுவதைக் கேட்க ஒருவர் இருக்கிறார் என்பதே அவர் மீதும், அவரின் எதிர்காலம் மீதும், மற்றவர்களின் மீதான அவரது நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும். இதனை, "சிறு வயதில் குறைவான தன்மதிப்பு உடையவனாகவே இருந்தேன். தற்கொலை எண்ணமெல்லாம் இருந்தன. ஆனால், ஆன்மிகத்தில் என்னை ஈடுபடுத்தியது, ரோஜா படம் வெற்றி பெற்றது, மற்றும் அன்பெல்லாம் கிடைத்தவுடன் அதெல்லாம் போய்விட்டது" எனும் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் கூறியதிலிருந்து புரிந்துகொள்ள முடியும்.

எனக்கென்று யாருமே இல்லை. நான் நல்லவனாக இருந்து என்ன பயன்? யாரையுமே நம்பக் கூடாது என்னும் எதிர்மறைக் கருத்து வலுப்படுகிறபோது, நண்பர்களையோ நல்ல உறவுகளையோ தேடிச் சிலர் போக மாட்டார்கள். நண்பர்களே அழைத்துப் பேசினாலும் தவிர்ப்பார்கள். வாழ்வதற்குப் பதிலாகச் செத்துவிடலாம் எனவும் சொல்வார்கள். ஆற்றுப்படுத்தும் அமர்வுக்கு வந்த ஒருவர், "எனக்குப் பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன. எனக்கு வாழவே பிடிக்கவில்லை" என்றார். அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருந்த ஆற்றுப்படுத்துநர், "உங்களைப் பொறுத்தவரையில் 'பெரிய' என்பதன் வரையறை என்ன?" என்று கேட்டார். வந்தவருக்குப் புரியவில்லை. கேள்வியை மீண்டும் கேட்ட ஆற்றுப்படுத்துநர் "பெரிய என்றால் கிரிக்கெட் பந்து அளவா? கால்பந்து அளவா? பூமிப்பந்து அளவு பெரியதா?" வந்தவர் யோசிக்கத் தொடங்கினார்.

அடுத்தடுத்த அமர்வுகளில் எதிர்மறை எண்ணங்களை நேர்மறை எண்ணங்களாகச் சீரமைக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. "நான் தகுதியற்றவன், பிரச்சினையைத் தீர்க்கும் அளவு ஆற்றலற்றவன்" எனத் தொடக்கத்தில் சொன்னவர், "எவ்வளவோ சிக்கல்களை நான் சரிசெய்திருக்கிறேன். இதையும் என்னால் சரிசெய்ய முடியும்" என்றார். "யாருக்குமே நான் முக்கியமல்ல" என்றவர், "என் மீது அக்கறை கொண்டுள்ள பலர் உடன் இருக்கிறார்கள்" என்றார். இப்போது அவர் நலமுடன் வாழ்கிறார். சரியான நேரத்தில் உதவி நாடுவதும், உடனிருப்பை நல்குவதும் நம்மையும் அயலாரையும் காப்பாற்றும்.



# கறுப்பு பணத்தை கையாள்வதற்காகவே மத்திய வங்கி ஆளுநராகின்றார் கப்ரால்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 12

**கறுப்புப் பணத்தை சட்ட பூர்வமாக்குவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்படவுள்ளார் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடு கையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் ஹர்ஷன ராஜகருண, இவ்வாறு குற்றஞ்சாட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

கறுப்புப் பணத்தை சட்ட பூர்வமாக்குவதற்கு பாராளுமன் றத்தில் சட்ட ஏற்பாடுகள் நிறை வேற்றப்பட்ட பின்னர், அடுத்த கட்ட நடவடிக்கைகள் மத்திய வங்கி ஊடாகவே இடம்பெறும். பாராளுமன்றில் தற்போது சட்ட ஏற்பாடு நிறைவேற்றப் பட்டுள்ளது. அடுத்தது மத்திய வங்கி, அங்கு தனக்கு தேவை யான விடயங்களை செய்வதற் காகவே அஜித் நிவாட் கப் ராலை மத்திய வங்கி ஆளுநராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. இது தொடர்பில் மக்கள் மத்தியிலும் சந்தேகம் உள்ளது.

தற்போது மத்திய வங்கி ஆளுநராக உள்ள பேராசிரியர் லக்ஷ்மனைவிடவும் எந்த விதத் தில் அஜித் நிவாட் கப்ரால் உயர்ந்தவர்? எனவே, நியமனத் தின் நோக்கம் தெளிவாகின் றது. கறுப்பு பணத்தை வெள் ளையாக்கும் நடவடிக்கையில் பகுதி 2 ஐ முன்னெடுக்கவே இந்த நியமனமாகும்.

மக்கள் மனம் அறிந்த தலை வரான பஸில் ராஜபக்ஷ வந்தால் மாற்றம் நடக்கும் என பிரசாரம் முன்னெடுத்தனர். பஸிலும் நிதி அமைச்சரானார். நடந்துள்ள மாற்றம் என்ன? இருந்தவையும் இல்லாமல் போயுள்ளன. உள்ளாடைகளும் இல்லாமல்போகப்போகின்றது. எனவே, பொருளாதார கொள் கையில் மாற்றத்தை ஏற்படுத்தா மல், மாற்றத்தை எதிர்ப்பார்க்க முடியாது - என்றார்.

# ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு கோரி கோட்டாபயவுக்கு சந்திரிகா கடிதம்

கொழும்பு, செப். 12

சிறைத்தண்டனை அனுப வித்துவரும் ரஞ்சன் ராமநாயக் கவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குமாறு கோரி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவினால் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

சுமார் 08 மாதங்களாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க வேண்டும் என, நாட்டின் மூத்த பிரஜை மற்றும் முன்னாள் அரச தலைவர் என்ற ரீதியில் கேட் டுக்கொள்வதாக சந்திரிகா பண்டாரநாயக்க தனது கடி தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நடிகராக, ஒரு சமூக சேவையாளராக, ஒரு அரசியல் வாதியாக ரஞ்சன் ராமநாயக்க, பொது மக்களுக்கான சேவை களை ஆற்றிவந்த ஒருவர் என வும் முன்னாள் ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட் டுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றத் துக்காக முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம நாயக்கவுக்கு 4 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெடிபொருள்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, செப். 12

ரத்கம ரணபனாதெனிய பகு தியில் அனுமதிப்பத்திர மின்றி வெடிபொருட்களை வைத்தி ருந்த குற்றச்சாட்டில் நபரொரு வர் நேற்று முன்தினம் பிற்பகல் ரத்கம பொலிஸ் விசேட அதிர டிப்படையினரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

36 வயதுடைய நபரொரு வரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப் பட்ட நபரிடமிருந்து 38 ஜெலிக்நைட் குச்சிகள் மற்றும் 300 டெட்டனேட்டர்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

# நெல்லின் விலை உயரும்

கொழும்பு, செப். 12

நாட்டில் எதிர்வரும் காலங் களில் நெல்லின் விலையை அதிகரிக்க எதிர்பார்ப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்தா னந்த அளுத்கமகே தெரிவித் தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், கோடிக் கணக்கில் லாபம் ஈட்டும் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு ஆதரவாக நிற்கவேண்டாம் என்று விவசாயிகளை வலியு றுத்தினார்.

இருப்பினும், அரிசி வியாபாரிகளிடம் இருந்து அரிசி கையிருப்புகளை கட்டுப்பாட்டு விலையில் கொள்முதல் செய்வதால், தமது விளைச்சல்களை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட் டுள்ளதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

நாடு நெல் கிலோவுக்கு அதிகபட்சமாக 50 ரூபா மற் றும் சம்பா நெல்லுக்கு 52 ரூபா என அரசாங்கம் அதிகபட்ச விலையை நிர்ணயித்தமையே இதற்கு காரணம் என விவசா யிகள் இதன்போது தெரிவித்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விசேட அதிகாரங்களுடன் 16 ஆம் திகதி ஆளுநராக பதவியேற்கின்றார் கப்ரால்!

கொழும்பு, செப். 12

நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், எதிர் வரும் 16 ஆம் திகதி மத்திய வங்கி ஆளுநராக பதவியேற் பார் என நம்பகரமான வட்டா ரங்களில் இருந்து அறியமுடி கின்றது.

இதற்காக மத்திய வங்கி ஆளுநராக பதவி வகித்த பேராசி ரியர் டபிள்யூ.டி லக்ஷ்மன் நேற்று முன் தினம் பதவி துறந் தார். அத்துடன், அஜித் நிவாட் கப்ராலும் நிதி இராஜாங்க அமைச்சு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை விரை வில் துறக்கவுள்ளார்.

மத்திய வங்கி ஆளுநராக பதவியேற்கவுள்ள அஜித் நிவாட் கப்ராலுக்காக விசேட அமைச்சரவைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், கப்ராலால் முன்வைக்கப்பட்ட சில நிபந்தனைகளை நிறை வேற்றும் விதத்திலேயே குறித்த அமைச்சரவைப் பத்திரம் தயா



ரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அத்துடன், சில விசேட அதிகாரங்களும் மத்திய வங்கி ஆளுநருக்கு வழங்கப்படவுள் ளது. (அ)

# பாடசாலைகளை மீள திறப்பது குறித்து அடுத்த வாரம் பரிந்துரை முன்வைப்பு

கொழும்பு, செப். 12

பாடசாலைகளை மீள திறப் பது தொடர்பிலான பரிந்துரை களை எதிர்வரும் கொவிட் ஒழிப்பு விசேட குழுவில் முன் வைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை இரண்டு விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக



அமைச்சர் கூறியுள்ளார்.

அதற்கமைய, புத்திஜீவிகள் குழு, கல்வி அமைச்சு மற்றும் சுகாதார தரப்பினரின் ஆலோ சனைகளையும் பெற்று அவற் றையும் கொவிட் ஒழிப்பு விசேட குழுவில் சமர்ப்பிக்க வுள்ளதாக அமைச்சர் இதன் போது கூறினார்.

குறித்த புத்திஜீவிகள் குழுவின் கூட்டம் அடுத்த வார மளவில் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பாட சாலைகளை திறக்கவேண்டும் என்ற நோக்கில் செயற்படுவ தாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் 35 பேருக்கு டெல்டா வைரஸ் தொற்று!

வவுனியா, செப். 12

வவுனியாவில் 35 பேருக்கு டெல்டா தொற்று ஏற்பட்டுள் ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப் பட்ட கொரோனா நோயாளர் களுடன் தொடர்புகளைப் பேணியோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று முன் தினம் இரவு வெளியாகின.

அதில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 35 பேருக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

இந்நிலையில் தொற்றுக்கு உள்ளானவர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, டெல்டா வைரஸ் தொற்று பரவல் அடை வதால் மக்கள் விழிப்புணர்வு டன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# உயர்தரம், ஐந்தாம் தரப் பரீட்சைகள் உரிய திகதிகளில் நடப்பதில் சந்தேகம்?

கொழும்பு, செப். 12

க.பொ.த. உயர்தர பரீட்சை, 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான மாண வர்களின் விண்ணப்பங்களை, எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பாவிட்டால் பரீட்சைகளை உத்தேச திகதி களில் நடத்துவது சந்தேகம் என்று இலங்கை ஆசிரியர் சங் கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித் துள்ளார்.

அவ்வாறு 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பாவிட்டால், அதற்கான பொறுப்பை அதிபர்கள் ஏற்க வேண்டும் என்ற கல்வி அமைச் சின் அறிவிப்புக்கு அதிபர், ஆசி ரியர் தொழிற்சங்க ஒன்றியம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட் டுள்ளதாக ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதனால் குறித்த திகதிகளில் பரீட்சைகள் நடைபெறுமா என்பதில் தற்போது சந்தேகம் நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# கொழும்பில் சீனாவுக்கு காணி விற்பதற்கு எதிராக போர்க்கொடி

கொழும்பு, செப். 12

கொழும்பு துறைமுகத்தில் உள்ள 13 ஏக்கர் காணியை சீன நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்யும் முயற்சிக்கு எதிர்ப்புக் கள் வலுத்துள்ளன.

தெற்காசிய சேவைகள் விநி யோக மத்திய நிலையம் எனும் பெயரை கொண்ட கூட்டு முத லீட்டு வேலைத் திட்டத்துக் காக இந்த காணி விற்பனை செய்யப்படுவதாக குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.

குறித்த காணியை சீன நிறுவ னத்துக்கு வழங்க முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்தை உடனடியாக இரத்துச் செய்யு மாறு துறைமுக ஒன்றிய தொழிற்சங்க அமைப்பு அழுத் தம் கொடுத்துள்ளது.

இதுகுறித்து குறித்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு, ஜனாதிபதிக்கு கடிதமொன் றையும் அனுப்பியுள்ளது.

துறைமுக எதிர்கால அபிவி ருத்திக்கு வலு சேர்க்கும், மிகவும் பெறுமதியான காணிகளை வெளி யாருக்கு விற்கக் கூடாது என துறைமுக தொழிற் சங்கக் கூட்ட மைப்பு வலியுறுத்தியுள்ளது.

# சிறுபான்மையினருக்கு ஆப்பு வைக்கவா அவசரமான தேர்தல் முறைமை மாற்றம்?

## வேலுகுமார் எம்.பி. கேள்வி

கொழும்பு, செப். 12

முடக்க நிலைமைக்கு மத்தியிலும் அவசர அவசரமாக தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் ஆராயப்பட்டுவருவது ஏன்? நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி சிறுபான்மையின மக்களின் அரசியல் இருப்புக்கு ஆப்பு வைத்து, அவர்களை அடக்கி ஆள்வதற்கான நயவஞ்சக நடவடிக்கையில் மற்றுமொரு அங்கமாகக்கூட இது இருக்கலாம் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் சுட்டிக்காட்டினார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

நாடு முடக்கப்பட்டுள்ளது. மக்கள் வீடுகளுக்குள் அடைக்கப்பட்டுள்ளனர். வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நிவாரணம் வழங்கி மக்களை பாதுகாக்க வேண்டிய அரசாங்கம், மக்களை கைவிட்டுள்ளது. இதனால் எதிர்காலம் பற்றி மக்களுக்கு பெரும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பல பாதகமான தீர்மானங்களை இந்த அரசாங்கம் அவசர அவசரமாக மேற்கொண்டுவருகின்றது.

குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசித் திட்டத்தில் முன்னுரிமை வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டது. அதனை முறையாக - முழுமையாக செய்யாமல் 30 முதல் 59 வயது பிரிவினருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டது. கொரோனாவால் இன்று நாளாந்தம் உயிரிழப்பவர்களில் பெரும்பாலானவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். அவர்களில் பலர் தடுப்பூசி பெறாதவர்கள். எனவே, 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி முழுமையாக வழங்கப்பட்டிருந்தால் மரண வீதத்தை குறைத்திருக்கலாம். ஏனையோருக்கு தடுப்பூசி வழங்கப்படக்கூடாது என நான் குறிப்பிடவில்லை. எதையும் உரிய திட்டமிடலுடன் செய்ய வேண்டும்.

நுகர்வோர் அதிகார சபை சட்டம், அனர்த்த முகாமைத்துவ சட்டம் போன்றன கைவசம் இருக்கையில் அவசர கால சட்டத்தைக் கொண்டு வந்து, இராணுவ ஆட்சிக்கான ஒத்திகையையும் இந்த அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கின்றது.

இதற்கிடையில் கறுப்புப் பணத்தை சட்டபூர்வமாக்கும் நோக்கில் பாராளுமன்றத்தில் சட்டமூலமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் அடுத்த கட்ட நடவடிக் கையை மத்திய வங்கி ஊடாக மேற்கொள்வதற்கு மத்திய வங்கி ஆளுநராக தமது விசுவாசியை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்படி பல பாதகமான விடயங்களை செயற்படுத்தி வரும் அரசாங்கம் மறுபுறத்தில், சிறுபான்மையின மக்களை அடக்கி, ஆளும் நயவஞ்சக திட்டத்தையும் கைவிடவில்லை என்றுதான் தெரிகின்றது. கொரோனா வைரஸ் பரவலைத் தடுத்தல், மக்களுக்கு நிவாரணத் திட்டங்களை முன்னெடுத்தல் உட்பட பல திட்டங்களை அவசரமாக செய்ய வேண்டியுள்ள நிலையில், தேர்தல் முறை மாற்றத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதன் நோக்கம் என்னவென்று புரியவில்லை.



சிலவேளை சிறுபான்மை மக்களுக்கு அநீதி இழைக்கக்கூடிய விதத்திலான, அவர்களின் பிரதிநிதித்துவத்தை குறைத்து அரசியல் இருப்புக்கு வேட்டு வைக்கும் விதத்திலான நகர்வுகள்கூட முன்னெடுக்கப்படலாம். ஊடகங்களிலும் கொரோனா பற்றிய செய்திகளே அதிகம் வெளிவருகின்றன. மக்கள் பிரதிநிதிகளாகிய நாமும் மக்களின் சுகாதார பாதுகாப்பு பற்றியே முன்னுரிமை வழங்கிவருகின்றோம். எனவே, தேர்தல் முறைமை மாற்றம் பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படுவதில்லை. இதனை சாதகமாக பயன்படுத்தி தமது சதித்திட்டத்தை ஆளுந்தரப்பு நிறைவேற்றக்கூடும்.

தேர்தல் முறைமை மறுசீரமைப்பு தொடர்பான நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றுள்ள ஆளுங்கட்சியின் மலையக பிரதிநிதி, கூட்டங்களில் பங்கேற்பதில்லை. நகர்வுகள் பற்றி ஆராய்வதும் இல்லை. எனவே, தேர்தல் முறைமை மாற்றம் குறித்தும் விழிப்பாகவே இருப்போம். -என்றார்.

# யாழ். இந்திய துணை தூதரகத்தில் மகாகவி பாரதியார் நினைவு தினம்





யாழ்ப்பாணம், செப். 12

இந்தியாவின் தேசிய கவிஞர் சுப்ரமணிய பாரதியாரின் 100 ஆவது ஆண்டு நினைவு தினம்நேற்று காலை யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தில் மிக அமைதியாக இடம்பெற்றது.

யாழ் இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தூதுவர் மற்றும் அதிகாரிகள் சகிதம் மலர் மாலையிட்டு வணக்கம் செலுத்தினார்கள்.

கோவிட் -19 சூழ் நிலை காரணமாக. சுகாதார நடைமுறைகளை கருத்திற் கொண்டு மிக அமைதியாக இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ் மாநகர முதல்வர், மற்றும் யாழ் மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் பலரும் இணையவழி ஊடாக பங்குபற்றி பாரதியார் குறித்து சிறப்புரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பெரியமடுக் குளத்தில் இறால் குஞ்சுகள் விடப்பட்டன

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனமும் வடக்கு மாகாண சபையும் இணைந்து மன்னார் பெரியமடு குளத்தில் 4 லட்சம் இறால் குஞ்சுகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை விடப்பட்டன.

கொரோனா தொற்று காலத்தில் கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அதேவேளை நன்னீர் மீன்பிடி தொழிலை ஊக்குவிப்பதற்காகவும் இறால் குஞ்சுகள் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் மன்னார் மாவட்ட பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, மன்னார் அனர்த்த முகாமைத்துவ உதவி ஆணையாளர் கனகரத்தினம் திலீபன், வடக்கு மாகாண சபை உத்தியோகத்தர்கள், தேசிய நீர் உயரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் மன்னர் மெசிடோ நிறுவன ஊழியர்கள் மற்றும் பெரியமடு நன்னீர் மீன்பிடி சங்கத்தினர் போன்றவர்களும் கலந்து கொண்டனர்.

# யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் பொன்.சிவபாலனின் 23 ஆவது நினைவுதினம்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி பொன்.சிவபாலனின் 23 ஆவது நினைவுதினம் நேற்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

சித்தன்கேணியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில், அவரது உருவப்படத்துக்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் த.நடனேந்திரன், யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான தங்க முகுந்தன், எஸ்.அரவிந்தன் உட்பட குடும்ப உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

கடந்த 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி, யாழ்.மாநகரசபையில் மாநகர போக்குவரத்து சம்பந்தமான உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது, கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோர் குண்டு வெடித்ததில் பொன். 



சிவபாலன் கொல்லப்பட்டார்.

அவருடன் அப்போதைய யாழ்.நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரமோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ். தலைமையக பொலிஸ் அதிகாரி மோகனதாஸ், யாழ்.நகர பிரிகேட் மேஜர் கப்டன் ராமநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெராட், யாழ்.மாநகர சபை உதவி ஆணையாளர் பத்மநாதன், வேலைப்பகுதிப் பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டடவரைபடக் கலைஞர் திருமதி மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோர் அடங்கிய பன்னிரெண்டு பேர் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

# வெளிநாட்டு கப்பலொன்றில் பொலிஸார் திடீர்ச் சோதனை

## ஹெரோயினுடன் 9 பேர் கைது

கொழும்பு, செப். 12

ஒரு தொகை ஹெரோயின் போதைப்பொருளை நாட்டுக்கு கடத்திச் வந்த வெளிநாட்டு கப்பல் ஒன்று நேற்று முன்தினம் இரவு சுற்றிவளைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு தெற்கு கடலில் இலங்கை கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் குறித்த போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன்போது கப்பலில் பயணித்த 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இலங்கைக்கு நேரடி விமான சேவையை ஆரம்பிக்கும் எயார் பிரான்ஸ் நிறுவனம்

கொழும்பு, செப். 12

இலங்கைக்கான நேரடி விமான சேவையைத் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் எயார் பிரான்ஸ் ஆரம்பிக்கவுள்ளது.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் இதனைத் தெரிவித்துள்ளது.


இந்த விமான நிறுவனம் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, மத்திய அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா போன்ற பிராந்தியங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்து வர திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எயார் பிரான்ஸ் செயற்பாடுகள் நாட்டில் சுற்றுலாத் துறையில் ஒரு ஏற்றத்தை உருவாக்கும் என்று விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தெரிவித்துள்ளன.




# தமிழகத்தின் புதிய ஆளுநராக நாகாலாந்து ஆளுநர்

## முன்னாள் உளவுத்துறை அதிகாரியின் நியமனத்துக்கு பாக்கு நீரிணை கண்காணிப்பும் காரணமா?



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

தமிழக ஆளுநரான பன்வாரிலால் புரோஹித்தின் ஐந்தாண்டுகால பதவிக்காலம் ஒரு வருடம் குறைக்கப்பட்டிருக்கிறது. 81 வயதாகும் மூத்த பாஜக தலைவரான அவர், பஞ்சாப் மாநிலத்துக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கிறார். சண்டிகாரின் நிர்வாக அதிகாரியாகவும் அவர் கூடுதல் பொறுப்புகளை வகிப்பார். கடந்த இரு வாரங்களாக அவர் பஞ்சாப்பின் ஆளுநராகக் கூடுதல் பொறுப்பை ஏற்கனவே வகித்திருந்த நிலையில் இந்த மாற்றம் அறிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டுக்கு ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ் அதிகாரியான ஆர். என். ரவி ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். கிண்டியில் உள்ள ராஜ்பவனில் இருந்து இவர் நிர்வாகத்தை கவனிப்பார். நாகா பழங்குடியினருக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையே தொடர்ந்து பூசல்கள் வெடிக்கிற - கலகங்கள் நிறைந்த நாகாலாந்து மாநிலத்தின் ஆளுநராக இவர் பதவி வகித்துக்கொண்டிருந்தார். உளவுத்துறையின் முன்னாள் சிறப்பு இயக்குநர் என்ற முறையில் நாகாலாந்தில் இருந்தபோது திறமைமிக்க காவல்துறை அதிகாரியாக புகழ்பெற்ற ரவி, நாகாலாந்தின் கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்த சில கடினமான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியிருந்தது. இதுவரை அரசின் முயற்சிகள் வெற்றிபெறவில்லை. நாகாலாந்தின் கிளர்ச்சியாளர்கள் அரசுக்கு எதிராகப் போர் தொடுப்பதோடல்லாமல், வரி பெறுவதும் நீதிமன்றங்கள் நடத்துவதுமாக தனி அரசாங்கத்தையே நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அவர் தமிழ்நாட்டுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டபோது, நாகாலந்தில் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. நாகா கிளர்ச்சியாளர்கள் மக்களை வீதிக்கே வந்து கொண்டாட வைத்தனர். நாகாலாந்தை விட்டுச் சென்றபிறகு அமைதிப் பேச்சுவார்த்தையின் மத்தியஸ்தராக அவர் நீடிக்கக்கூடாது என்று அங்கு ஆதிக்கம் செலுத்தும் நாகாலாந்து தேசிய சோசியலிஸ்ட் கவுன்சில் (NSCN-IM) கோரிக்கை வைத்தது. நாகா பிரச்னையை ரவி கையாண்ட விதத்தில் அதிருப்தியடைந்த டெல்லி, கிளர்ச்சியாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அவரை இடமாற்றம் செய்தது என்று பொருள்கொள்ள முடியாது. இந்த பிரச்னை தேங்கிப் போய் நின்றுகொண்டிருப்பதால், தன் யுத்திகளையும் மத்தியஸ்தரையும் அரசு மாற்றிப் பார்க்கிறது என்றும் இதைச் சொல்லலாம்.

ஈழப் பிரச்னைக்கு நாகா பிரச்னைக்கும் பல ஒற்றுமைகள் உண்டு என்பதால் இன்னும் கொஞ்சம் அதைப் பற்றிப் பேச விரும்புகிறேன். தனித்துவமான இனக்குழு அடையாளம்கொண்ட மலைவாழ் மக்களான 25 லட்சம் நாகாக்கள், அஸ்ஸாமுக்கும் மியான்மாருக்கும் இடையில் உள்ள மலைப்பகுதியில் வசிக்கிறார்கள். இதில் 18 லட்சம் மக்கள் நாகாலாந்திலும், 6 லட்சம் பேர் மணிப்பூரிலும் ஒரு லட்சம் பேர் அருணாச்சலப் பிரதேசத்திலும் வசிக்கிறார்கள். மீதமிருப்பவர்கள் பர்மா உள்ளிட்ட அருகிலிருக்கும் பகுதிகளில் இருக்கிறார்கள். இவர்களில் 66-67 பழங்குடியின வகுப்புகள் உண்டு, தாங்கள் தனி தேசத்தவர் போன்றவர்கள் என்று அவர்கள் சொல்லிவருகிறார்கள். நாகாக்கள் வாழும் பகுதிகளை எல்லாம் 'பெரிய நாகாலிம்' என்ற பொதுப்பெயரால் குறிப்பிடுகிறார்கள். இதில் அஸ்ஸாம், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், பர்மா உள்ளிட்ட நிலப்பரப்புகளின் பல மாவட்டங்கள் அடங்கும். பெரிய நாகாலிம்மின் மொத்த பரப்பளவு 1,20,000 சதுர கிலோமீட்டர், நாகாலாந்து மாநிலத்தின் மொத்த பரப்பளவு 16,527 சதுர கிலொமீட்டர். நாகாக்களுக்குத் தனி இறையாண்மைக் கொள்கை, தனிப்பட்ட அரசியல் சட்டம், தனி தேசியக் கொடி என்பதையும் அவர்கள் கோரி வருகிறார்கள். பெரிய நாகாலிம்மை உருவாக்க நாகாலாந்தைத் தவிர, அண்டை மாநிலங்கள் மற்றும் மியான்மரின் சில பகுதிகளையும் பிரிக்க வேண்டியிருக்கும்.

ஈழப் பிரச்னையைப் போலவே பல இனக்குழு போர்களைப் பற்றிய விவரங்கள் இணையத்தில் காணக் கிடைக்கின்றன என்பதால் நாகாக்களைப் பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. நாகா மலைகள் 1881இல் பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தன. 1929 சைமன் கமிஷனில் "நாங்கள் முன்பு இருந்ததைப்



போலவே இப்போதும் இருந்துகொள்கிறோம், எங்களை விட்டுவிடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்கள். அதனால், ஒகஸ்ட் 14, 1947இல் நாகாலாந்தை புதிய மாநிலமாக கிளர்ச்சியாளர்களே பிரகடனம் செய்துகொண்டார்கள். மே 1951இல் நடத்தப்பட்ட ஒரு பொது வாக்கெடுப்பில் 99.9வீதம் நாகாக்கள் தனி நாடு வேண்டும் என்று கேட்டிருந்தனர். முக்கியமான நாகா கிளர்ச்சியாளரான அங்காமி ஸாப்பு பிஸோ நாகா ஒன்றிய அரசு (Naga Federal Government - NFG) ஒன்றையும் நாகா ஒன்றிய இராணுவத்தையும் 1952ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி உருவாக்கினார். அவர் இந்தியாவுடன் சமாதானமாகி, 1991இல் லண்டனில் இறந்தபிறகும் சீனாவிடமிருந்தும் பாகிஸ்தானிடமிருந்தும் உதவி பெறும் கிளர்ச்சியாளர்கள் இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போர்புரிகின்றனர். மக்களிடம் அதிக வரி வசூலித்து தனி அரசாங்கமே நடத்துகின்றனர். நாகாக்கள் தனி அரசு நடத்துவதாக ஆளுநர் ரவி நாகாலாந்து முதல்வருக்கு எழுதிய கடித்ததில் குறிப்பிடுகிறார். இந்தியா தொடர்ந்து அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடத்திய அதே நேரம், ஆயுதப்படையினருக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் (Armed Forces Special Powers Act -AFSPA) மூலம் இராணுவத்துக்கு அதிகாரத்தையும் அளித்தது. மலைகளிலும் காடுகளிலும் இருக்கும் நாகா கிளர்ச்சியாளர்களைத் தேடுவதான போர்வையில் அப்பாவிக் குடிமக்கள்மீது இந்திய இராணுவம் வன்முறை யைக் கட்டவிழ்த்து விடுவதாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

ஆகவே ஆளுநர் ரவி, தமிழ்நாட்டுக்கு மாற்றப்பட்டதில் நாகாக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். இந்த நாகாக்களின் கொண்டாட்டங்களும் ரவியின் வருகையோடு தமிழ்நாட்டு செய்தி ஊடகங்களிலும் அரசியல் வட்டாரங்களிலும் பரபரப்பாக பேசப்பட்டது. முதல்வர் மு. க. ஸ்டாலின் தனது அறிக்கையில் ஆளுநர் ரவியை வரவேற்று, அவரது வருகை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் என்று நம்புவதாகத் தெரிவித்திருக்கிறார். ஆனால், அவரது கூட்டணிக் கட்சியான காங்கிரஸின் தலைவர் கே. எஸ். அழகிரி, ஒரு முன்னாள் காவல்துறை அதிகாரியை ஆளுநராக அனுப்பி, ஸ்டாலினுக்கு மத்திய அரசு தொல்லை தர முயற்சி செய்வதாக சந்தேகம் எழுப்பியுள்ளார். அண்டை மாநிலமான பாண்டிச்சேரியில் என்ன நடந்தது என்பதை அழகிரி சுட்டிக்காட்டினார். வி. நாராயணசாமி தலைமையிலான காங்கிரஸ் அரசு அமைதியாக செயல்பட்டுக் கொண்டிருந்தபோது, ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரியான கிரண் பேடியை டெல்லி அனுப்பியது. இது, அரசுக்குப் பல தடைகளைக் கொண்டுவந்ததோடல்லாமல், கிரண் பேடி ஒரு தனி அரசாங்கத்தையே நடத்தினார் என்று அழகிரி நினைவுபடுத்துகிறார். சில காங்கிரஸ் பிரதிநிதிகள் பாஜகவுக்குத் தாவியதும், நாராயணசாமி அரசு கவிழ்ந்ததில் 6 ஏப்ரல் 2021 அன்று தேர்தல் நடந்தது. பாஜக ஆதரவோடு தேர்தலில் போட்டியிட்ட என்-ஆர் காங்கிரஸ் தலைவர் என். ரங்கசாமி வெற்றி பெற்றதில், பாஜக அவரின் அமைச்சரவைக்குள் நுழைந் தது. முன்னாள் காவல்துறை அதிகாரியான ரவியைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பியதில் டெல்லியில் உள்ள பாஜக தலைவர்களுக்கு இதேபோன்ற உள்நோக்கம் இருக்கலாம் என்று அழகிரி சந்தேகம் தெரிவித்தார்.

கடந்த சில தசாப்தங்களாக, மக்களுக்குத் தன்னலமின்றி சேவை செய்பவர்கள் என்ற இடத்திலிருந்து, தன்னலம் மட்டுமே முக்கியம் என்று சமூகத்தை ஏமாற்றுபவர்களாக உலகத்தின் பெரும்பாலான அரசியல்வாதிகள் மாறியிருக்கிறார்கள் என்பது நம் அனைவருக்கும் தெரியும். மக்களுக்குப் பக்குவம் இல்லை என்றும் மேடையில் என்ன பேசினாலும், நீளமான அறிக்கை விட்டாலும், அவர்கள் நம்பிவிடுவார்கள் என்றும், அரசியல்வாதிகள் தாங்களாகவே கற்பனை செய்துகொள்கிறார்கள். யூனியன் பிரதேசமான புதுச்சேரியும் மாநிலமான தமிழ்நாடும் ஒன்று என்று நினைக்கும் அளவுக்கு மக்கள் ஒன்றுமறியாதவர்கள் என்று காங்கிரஸின் அழகிரி நினைக்கிறார். அதை மன்னித்துவிடுவோம். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்றாலும் யூனியன் பிரதேசமான புதுச்சேரியின் நிர்வாகம் டெல்லியின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தமிழ்நாட்டிலோ, ஏப்ரல் தேர்தலில் தனிப்பெரும்பான்மை பெற்ற திமுக அரசு மாநில அரசை நிர்வகிக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356ஆவது பிரிவின்கீழ் குடியரசுத்தலைவரின் ஆட்சி வந்தால் எந்த மாநிலத்திலும் ஒன்றிய அரசு நேரடியாக ஆட்சி செய்யலாம். 'அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசால் செயல்பட முடியாவிட்டால்' இந்த நிலை அமலுக்கு வரும்.

இந்திய ஜனநாயகத்துக்கு இந்த 356ஆவது பிரிவு என்பது கடந்த காலங்களில் சிம்ம சொப்பனமாகவே இருந்திருக்கிறது. புதுச்சேரியில் நாராயணசாமி பெரும்பான்மையை இழந்தபோது, பெப்ரவரி 2021இல் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது. ஆனால், மூன்று மாதங்களுக்குள் தேர்தல்மூலம் ஆட்சி அமைக்கப்பட்டது.

1966ஆம் ஆண்டு முதல் 1977வரை 39 முறை மாநில அரசுகளைக் கலைத்து, குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவந்த கட்சித் தலைவி இந்திரா காந்தியின் 'புகழை' மனதில் வைத்து அழகிரி இதைப் பேசியிருக்கலாம்.

மே 7ஆம் திகதி ஆட்சிக்கு வந்தபிறகு திமுக எதிர்ப்பாளர்களாக இருந்தவர்களிடமிருந்தும் விசிறிகளைப் பெற்றிருக்கிறார் ஸ்டாலின். தனது நல்ல நிர்வாகத் திறமையாலும் முடிவுகளாலும் இந்தப் புகழை அடைந்திருக்கிறார். நன்றாக செயல்படும் ஸ்டாலினின் வளர்ச்சியைத் தடுக்க, உள்ளாட்சித் துறை அமைச்சர் அமித் ஷாவால் அனுப்பப்பட்டாரா அல்லது முன்ன் காவல்துறை அதிகாரி ரவிக்கென்று வேறு நோக்கங்கள் இருக்குமா என்பதெல்லாம் போகப்போகத்தான் தெரியும். ஆனால், இப்போதைக்கு ஸ்டாலினின் வரவேற்பு

(18ஆம் பக்கம் பார்க்க)



# 'தலைவி' திரைப்படம்: எம். ஜி. ஆர். அவமதிக்கப்படுகிறாரா?

# தமிழ் அரசியல் தரப்புகளின் போலித்தனமான நகர்வுகள்!

**பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்**



ஜெனிவா 48ஆவது கூட்டத்தொடர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை குழப்பத்துக்குள் தள்ளியதாக ஊடகப்பரப்பில் விவாதமொன்று நடைபெறுகிறது. அதனை நிராகரிக்கும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள இதர தமிழ் கட்சிகள், இவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்டுச் செயல்பாடென விமர்சித்துவருகின்றன.

மறுபக்கத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூவரடங்கிய குழு ஜெனிவா கூட்டத் தொடருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாகவும், அதனை அவர்களே தாம் மேற்கொள்ளவில்லையெனவும் சில ஊடகங்கள், முன்பின் முரணாக செய்தி வெளியிடட்டு வருகின்றன.

அதேநேரம் தமிழ் அரசுக் கட்சி ஏகமனதாக முடிவெடுத்து ஏனையவர்களை அவ்விடயம் பாதிக்காத வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கையொப்பமிட்டு ஒரு கடிதம் அனுப்பியுள்ளாரெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுமட்டுமன்றி இத்தகைய அனைத்து கோரிக்கைகளும் அடங்கிய கடிதம் காலங்கடந்ததென்றும் அவை எதுவும் ஜெனிவா கூட்டத்தொடர் அறிக்கையிடலுக்கு முன்னர் கிடைப்பதற்கான வாய்ப்பில்லை எனவும் அவை எத்தகைய விளைவையும் ஏற்படுத்தாது எனவும் ஜெனிவாவில் இயங்கும் மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்டுரையும் தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் தமிழ் அரசியல் தரப்பினர்களின் தூர நோக்கற்ற அரசியல் உத்திகளையும் போலித்தனமான நகர்வுகளையும் அடையாளப்படுத்துவதாக அமைய உள்ளது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல ஜெனிவா கூட்டத்தொடர்கள் இலங்கை தமிழர்களை மையப்படுத்தி இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது. அத்தகைய கூட்டத் தொடர்கள் ஒவ்வொன்றும் தமிழர் அரசியல் தலைமைகளால் தவறாகவே அணுகப்பட்டுள்ளது. மேற்கு நாடுகளின் நலன்களுக்காக இயக்கப்படும் ஜெனிவா கூட்டத்தொடரை தமிழர் அரசியல் தலைமைகள் தமிழருக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாதது மட்டுமன்றி தமிழ்த் தேசிய பரப்பில் பயணித்த ஒரு சில தலைவர்கள் இலங்கை அரசாங்கத்தின் நலனை அங்கீகரித்து செயல்படுவதனால் அத்தகைய கூட்டத்தொடர்கள் ஓர் ஆரோக்கியமான பயன்தரு விளைவை ஏற்படுத்தவில்லை.

ஏறக்குறைய 48ஆவது கூட்டத்தொடர் தமிழர்களுடைய பிரச்னை மிகப்பலவீனமான நிலைக்குள் உச்சரிக்கப்படுவதோடு வெளியிடப்படும் அறிக்கை இலங்கை அரசாங்கத்தின் செயல்பாடுகளை பாராட்டுவதும் அங்கீகரிப்பதுமாக அமைய வாய்ப்புள்ளதென ஜெனிவாவிலிருந்து இயங்கும் மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதனால், அடுத்துவரும் கூட்டத்தொடர்கள் தமிழர்களின் பிரச்னைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைவிட முஸ்லிம்கள் தொடர்பாகவும், இராணுவ ஆட்சி முறை தொடர்பாகவும் மற்றும் சர்வதேச விடயங்கள் தொடர்பாகவும் முக்கியத்துவம் கொடுக்கும் சூழல் ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு தமிழர் விவகாரம் உலக அரங்கிலிருந்து விடுபட்டு போவதற்கான சூழலை உருவாக்கியது தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் பெரும் பங்குண்டு. அதற்கான சூழலையும் அதனால் ஏற்படப்போகும் விளைவுகளையும் அவதானித்தல் அவசியமாகும்.

முதலாவது, தமிழ் அரசியல் தலைமைகளிடம் சமகாலத்தில் நிலவுவதுபோல் அவர்களின் கடந்த காலமும் அறிக்கையிடலுக்கான கால தாமதம் என்பது ஓர் அரசியலாகவே கருதப்பட்டுள்ளது. அதிலும் கட்சி அரசியல் நலன், தனிப்பட்ட அரசியல் நலன் முதன்மையானதாகக் காணப்படுகின்றது. தமிழ்த் தேசிய அரசியலை விடுத்து அனைத்து தமிழ்த் தரப்பும் தேர்தலையும், வாக்குகளையும், தமது அரசியல் எதிர்காலத் தையும் மாத்திரமே கருதி செயல்படுகின்றனர். அதனால், ஜெனிவா அரங்கை பரபரப்பு அரசியலுக்கான அரங்காகவும், பிரசாரத்துக்கான அரசியல் அரங்காகவும், அறிக்கையிடும் அரசியல் அரங்காகவும் பயன் படுத்திக் கொண்டனர். ஆனால், எந்தச் சந்தர்ப்பத்திலும் திட்டமிடலோடு, தகவல்களை திரட்டி, புள்ளி விவரங்களை அடிப்படையாக கொண்டு செயல்பாடு எதனையும் ஒரு தரப்பும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இரு பிரத்தியேக செயலாளருக்கான கொடுப்பனவுகளை அரசாங்கம் வழங்கு கின்றது. அத்தகைய செயலாளரூடாக கடந்த 12ஆண்டுகளில் எந்த தமிழ் பாராளுமன்ற உறுப் பினர்களும் தகவல் திரட்டினரெனவோ, ஜெனிவாவுக்கான அறிக்கையிடல் செய்தனரெனவோ, குரல்மூல அறிக்கைகளூடாக ஆதாரப்படுத்தியதாகவோ எவ்வித ஆதாரமும் இல்லை. எனவே, தமிழ்த் தேசிய அரசியலில் பணி புரியும் தமிழ் அரசியல் தரப்பினர் கடந்த காலத்தில் விட்டுச்சென்ற பலவீனங்களே எதிர்காலத்தில் தமிழ் மக்கள் சர்வதேச அரங்கில் நியாயாதிக்கம் பெறமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாவது, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் பயணிக்கும் கட்சிகளிடையே தமிழ் மக்கள் மீதான கரிசனையை விட தமக்கு இடையிலான மோதலும், அந்த மோதலினால் எதிரிக்கு சேவையாற்றும் மனோநிலையே அதிகமாக உள்ளது. இதனால், ஜெனிவா கூட்டத்தொடருக்கான நடவடிக்கைகளை கூட்டாக ஒன்றிணைந்து முன்வைக்காது, தனித்தோ, வேறுவேறுபட்ட தீர்மானங்களை முன்வைப்பதன் மூலமோ, சர்வதேசத்தின் மத்தியில் ஒற்றுமை இல்லாத தலைமைகளும் அவர்களின் செயல்பாடுகளும் எனும் எண்ணப்பாங்கை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய முரண்பாடான கருத்து நிலை தீர்வை வழங்கும் தரப்பு விலகி செல்வதுக்கு மட்டுமன்றி, சர்வதேச அரசுகள் தங்கள் நலன்களை இலகுவில் சாத்தியப்படுத்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

மூன்றாவது, சமகாலத்தில் எழுந்திருக்கும் அடிப்படை பிரச்னை கட்சிக்குள் நிலவும் முரண்பாடு மட்டுமன்றி ஏனைய கட்சிகளோடு கொண்டிருக்கின்ற ஜனநாயகமற்ற, தான்தோன்றித்தனமான, முன்பின் யோசனையற்ற உபாயங்கள் ஏதும் வகுக்காத நிலைமைகளே ஜெனிவா தொடர்பான இழுபறிக்கு அடிப்படையாகும். ஓர் அரசியல் கட்சி அடிப்படையில் ஜனநாயகப் பண்புகளை கொண்டிருப்பது மட்டுமன்றி கூட்டுத் தீர்மானங்களின் முடிவுகளிலேயே தங்கியிருக்க வேண்டும்.

ஆனால், தமிழர் அரசியல் தரப்பில் அத்தகைய ஆரோக்கியமானநிலை காணப்படுவதில்லை. தனிக்கட்சிகளுக்குள் கட்சிகளின் கூட்டை ஏற்படுத்துகின்றபோதும் அவ்வாறான விடயங்களை முன்னெடுப்பதில்லை. இதனால், தமிழ் மக்களின் தேசிய பிரச்னை வெவ்வேறு கோணத்தில் தனிக்கட்சி நலனுக்கும் விருப்புகளுக்குள்ளும் உட்படுத்தி அணுகுகின்ற போக்கு ஜெனிவா அரங்கை தோற்கடிக்க வைத்தமைக்கான காரணமாகக் கொள்ள முடியும்.


குறிப்பாக, சாட்சியங்கள் இன்மையால் இனப்படுகொலையை நிறுவ முடியாது என்று வாதிக்கும் தமிழ் மக்களின் அரசியல் தலைமை எவ்வாறு தமிழ் மக்களின் தீர்வை சாத்தியப்படுத்த முடியுமென்பது கேள்விக்குரியதாகும். ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமைக்கான பேரவையின் பணியாளர்கள் குறிப்பிடுவதுபோல் சாட்சியங்களை தேடிக் கண்டறிந்து அவற்றை ஆதாரப்படுத்தி சமர்பிக்க வேண்டிய தரப்பே ஆதாரங்கள் இல்லையென குறிப்பிடுவது தமிழ் அரசியல் தரப்பின் வங்குரோத்துத்தனமாகவே தெரிகின்றது. ஆதாரங்களைத் தேடுகின்ற தரப்பே அதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்கின்றது. இதுவே ஜெனிவா அரங்கின் நெருக்கீட்டுக்கு அடிப்படையான அம்சமாகும்.

நான்காவது, ஜெனிவாவிற்கு தமிழ் அரசியல் கட்சி முன்வைத்துள்ள உள்ளடக்கத்தின் சாராம்சம் 2010ஆம் ஆண்டு ஐ. நா. பொதுச்செயலாளர் பான்கி மூன் காலப்பகுதியில் நிகழ்ந்த விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டு அதனை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. ஆனால், இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சு ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு சமர்ப்பித் துள்ள அறிக்கையில் தேசிய ஒருமைப்பாட்டையும், நல்லிணக்கத்தையும், சமாதானத் தையும் எட்டுவதற்காக கடந்த 12ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட விடயங்களை 13பக்க அறிக்கை யில் சமர்ப்பித்துள்ளது. அதில் ஆதாரப்படுத்தும் விதத்தில் தகவல்களும், நிறுவனக் கட்ட மைப்புக்களும், புள்ளிவிபரங் களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன், எதிர் காலத்தில் சுமுகமான நிலை மையை ஏற்படுத்தும் விதத்தில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களோடும், முஸ்லிம்களோடும் இயைந்து பயணிக்கும் அதே வேளை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைத்து பயணிக்க தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளது.











உண்மையில் தமிழ்த் தேசிய பரப்பில் பயணிக்கின்ற கட்சிகள் அரசாங்கத்தில் அறிக்கையிலுள்ள அம்சங்களின் உண்மைத் தன்மையை ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு தெரியப்படுத்துவதே அவசியமான பணியாகும். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அநேக விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவோ அல்லது முழுமையாக பின்பற்றப்படவோ இல்லை என்பதை ஆதாரங்களுடன் பதிலறிக்கையிடுதலே அவசியமான அரசியலாகும். குறிப்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பில் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டதற்கு மாறான செய்முறைகளே நடை முறையில் காணப்படுகின்றன. அவ்வாறே ஏனைய விடயங்களையும் புள்ளிவிபரரீதியாக அடையாளம் கண்டு பதிலறிக்கை இடலே முக்கியமானது. அதைவிடுத்து இரண்டு பக்க கடிதத்தில் தமிழ் மக்களின் மத்தியில் பரபரப்பு அரசியலை உருவாக்கி ஜெனிவா அரங்கை வெறும் அரசியல் களமாக அடையாளப் படுத்துவது மிகமோசமான அரசியல் கலாசாரமாகும். இது மக்களை ஏமாற்றுவதோடு ஊடகங்கள் மத்தியில் தமது இயங்குதிறனை அடையாளப்படுத்துவதாக தெரிகிறது. இத்தகைய போலி நிகழ்வுகள் தமிழ் மக்களின் தேசிய பிரச்னைக்கான தீர்வுக்கான அணுகுமுறையாக கொள்ள முடியாது. இத்தகைய போலித்தனங்களே ஜெனிவா அரங்கின் தோல்விக்கு மூலாதாரமாகும்.

ஐந்தாவது, நல்லாட்சி அரசாங்கத்தோடு தமிழ்த் தேசிய அரசியல் சக்திகள் ஒருங்கிணைந்து பயணித்தபோது ஜெனிவா அரங்கில் காலநீடிப்புக்கான வாய்ப்புக்களை மீண்டும் மீண்டும் வழங்குவதில் எந்தவித தூர நோக்குமற்று அரசாங்கத்தின்மீது மாத்திரம் கரிசனை கொண்டு செயல்பட்டனர். இத்தகைய காலநீடிப்பே இன்றைய நெருக்கடிக்கு அடிப்படையாகும். 2012களில் இருந்த சூழலை 2015ஆண்டுக்கு பின்னரான சூழல் முற்றாகவே மாற்றியிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பான செய்முறை தமிழ் அரசியல் தலைமைகளின் ஒத்துழைப்புடன் காலநீடிப்புக்கு உள்ளானது. இத்தகைய காலநீடிப்பு படிப்படியாக தமிழருக்கு சாதகமான ஜெனிவா அரங்கு கைவிட்டுப் போக வழிவகுத்துள்ளது. நல்லாட்சிக்காலம் முழுவதும் தமிழர்களின் அரசியல் பிரயத்தனங்கள் அனைத்தும் தென்னிலங்கைக்கு சேவை செய்வதாகவும் பிராந்திய சர்வதேச நலன்களுக்கு இசைவு பெறுவதாகவும் அமைந்திருந்தது. இதனை சரியான முறையில் உத்திகளோடு பயன்படுத்தியிருந்தால் இன்றைய துயரகரமான நிலை ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை.

எனவே, பிராந்திய சர்வதேச அரசியல் சூழல் ஏற்படுத்தியிருந்த வாய்ப்புக்களை தமிழ் தரப்பு தனது போலித்தனத்தினால் இழந்துள்ளது. தமிழ் அரசியல் தரப்பு ஜெனிவாவை நோக்கிய நகர்வு என்பது கையறு நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதிலிருந்து மீள்வதென்பது தமிழ் அரசியல் தரப்புக்களால் இயலாதது மட்டுமன்றி பிராந்திய சர்வதேச சக்திகளின் எதிர்கால உத்திகளால் மட்டுமே சாத்தியப்படுத்த முடியும். அதற்கான வாய்ப்பை இலங்கை அரசாங்கம் வழங்குமா? என்பதே இன்றுள்ள கேள்வியாகும். சீனா, இந்தியா, அமெரிக்கா என்ற மூன்று சக்திகளுக்கு இடையிலான புரிதலை இலங்கை அரசாங்கம் சரியாக கையாளும் சூழல் நீடிக்குமாயின் தமிழர் விவகாரம் உலக அரங்கிலிருந்தோ, பிராந்திய அரசியல் களத்திலிருந்தோ விலகுவதற்கான வாய்ப்பை எதிர்காலத்தில் எதிர்நோக்க வேண்டிநிலை தவிர்க்க முடியாததாக அமையும். **-நன்றி - அருவி**

# நிலையான ஆட்சி அமைப்பார்களா தலிபான்கள்?

- வருண்

தலிபான்கள், ஆப்கனைக் கைப்பற்றி, கிட்டத்தட்ட 25 நாள்கள் கடந்துவிட்டன. ஆனால், இன்னும் முறையான ஆட்சி அமைக்க முடியாமல் திணறிவருகிறது தலிபான். பஞ்ச்ஷிர் படைகள் ஒருபுறம் குடைச்சல் கொடுக்க, மறுபுறம் தலிபான்களுக்கு உள்ளேயே ஆட்சியமைப்பதில் மோதல் உண்டானது. பிரச்னைகளை எப்படியாவது சமாளித்து ஆட்சியமைத்துவிடலாம் என்று நினைத்த மூத்த தலிபான் தலைவர்களுக்கு, ஏமாற்றமே மிஞ்சியது. அதை உலக நாடுகளுக்குக் காட்டிக்கொள்ளாமல் சமாளிக்க, இடைக்கால அமைச்சரவையை அறிவித்திருக்கிறார்கள் தலிபான்கள். முழுமையான, முறையான ஆட்சியமைக்க தாலிபன்கள் திணறுவதற்கான காரணங்கள் என்னென்ன?

ஆப்கனில் இனி தாங்கள்தான் எல்லாம் என்று நினைத்துக்கொண்டிருந்த தலிபான்களுக்கு, பஞ்ச்ஷிர் படையினர் பேரதிர்ச்சியைத் தந்தனர். ஆப்கனின் 33 மாகாணங்களை எளிதாகக் கைப்பற்றிய தலிபான்களுக்கு, பஞ்ச்ஷிர் மாகாணம் மிகப்பெரிய சவாலாக இருந்தது. ஆப்கன் தலைநகர் காபூலின் வடக்கு எல்லையில் அமைந்திருக்கிறது பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கு. தலிபான்களின் முந்தைய ஆட்சியான 1996-2001 காலகட்டத்திலிருந்தே, அவர்களை எதிர்த்து நிற்கிறார்கள் பஞ்ச்ஷிர் மக்கள்.

1980-களில் நடைபெற்ற ரஷ்யாவுக்கு எதிரான ஆப்கன் கிளர்ச்சியில், பஞ்ச்ஷிர் மக்களை ஒன்று திரட்டி கெரில்லா படை ஒன்றை உருவாக்கினார் அகமது ஷா மசூத். ரஷ்யா வெளியேறிய பிறகு, தாலிபன்களின் பழைமை வாதத்தை விரும்பாத அகமது ஷா மசூத், அவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தார். அன்றிலிருந்து இன்றுவரை தாலிபன்களுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே இருக்கிறது பஞ்ச்ஷிர் படை.

தற்போது அகமது ஷா மசூத்தின் மகன் அகமது மசூத் தலைமையிலான "ஆப்கானிஸ்தான் தேசிய எதிர்ப்பு முன்னணி" தலிபான்களுக்கு எதிராகப் போராடிவருகிறது. கடந்த செப்டம் பர் 4 ஆம் திகதியன்று இரு தரப்புக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்ட தாகச் செய்திகள் வந்த நிலையில், "நாங்கள் பஞ்ச்ஷிர் பகுதியைக் கைப்பற்றிவிட்டோம்" என அறிவித்தது தாலிபன். ஆனால், அகமது மசூத், ஹஹதாலிபன்கள் பொய் சொல்கிறார்கள். பஞ்ச்ஷிரின் எல்லை யைக்கூட தாலிபன்கள் தாண்ட வில்லை. எல்லையில் நடைபெற்ற மோதலில் 700 தாலிபன்களை நாங் கள் கொன்றுவிட்டோம்" என்றார்.

இரு தரப்பும் சொல்வதில், எது உண்மை என்பதை உறுதிசெய்ய முடியாமல் சர்வதேச ஊடகங்களே குழம்பிப்போயின. இதற்கிடையில், "மத குருமார்களின் யோசனையின் படி, தாலிபன்களுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் தயார்" என்று சொல்லியிருந்தார் அக மது மசூத். ஆனால், அதற்கு எந்த வொரு பதிலையும் தாலிபன் தரப்பு தரவில்லை.

தொடர்ந்து, பஞ்ச்ஷிர் படைகளைச் சமாளிக்க தாலிபன்களுக்கு பாகிஸ்தான் துணை நிற்பதாகச் செய்திகள் வெளியாகின. இதையடுத்து ஆப்கன் தலைநகர் காபூலின் பல்வேறு இடங்களில் மக்கள் போராட்டம் வெடித் தது. "பாகிஸ்தானே... ஆப்கனைவிட்டு வெளியேறு" என்ற முழக்கத்தோடு வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங் கினார்கள் மக்கள். தாலிபன்களையும், அவர்களை ஆதரிக்கும் பாகிஸ்தானை யும் எதிர்த்து நடை பெற்றுவரும் இந்தப் போராட்டங்களில், பெரும்பாலும் பெண்களே முன்னிற்கிறார்கள்.

"பெண்கள் பங்கெடுக்கும் போராட்டம், எங்கள் பலத்தின் அடையாளம். போராடுபவர்களில் பலரும் தேசிய எதிர்ப்பு முன்னணியைச் சேர்ந்தவர்கள்" என்றிருக்கிறார் அகமது மசூத். மக்கள் கூட்டத்தைக் கலைக்க, வான் நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள் தாலிபன்கள். ஒருசில இடங்களைத் தவிர, மற்ற இடங்களில் மக்கள் கலையவில்லை. மேலும், போராட்டத்தைச் செய்தியாக்கும் பத்திரிகையாளர்களையும், கேமரா மேன்களையும் தாலிபன்கள் பிடித்துச் சென்றதாகவும் தகவல்கள் சொல்லப்படுகின்றன.



**தலைவலியான ஹக்கானி குழு!**

ஒருபுறம் பஞ்ச்ஷிர் படையும், போராடும் மக்களும் தலிபான்களுக்கு தலைவலியை ஏற்படுத்த, மற்றொருபுறம் அவர்களுக்குள்ளேயே சண்டைகள் மூண்டன. 1980-களில் ரஷ்யப் படையை எதிர்க்க உருவான இஸ்லாமிய ஆயுதக் குழுக்களில் ஒன்றுதான் ஹக்கானி. ஜலாலுதீன் ஹக்கானியால் தொடங்கப் பட்ட இந்தக் குழு, நாளடைவில் தாலிபன்களோடு கைகோத்தது. ஜலாலு தீன் ஹக்கானியின் மகனான சிராஜூதின் ஹக்கானிதான் தற்போது தாலிபன்களின் துணைத் தலைவராகவும், ஹக்கானி பிரிவின் தலைவராகவும் செயல்பட்டு வருகிறார். ஹக்கானி பிரிவினருக்கும், தாலிபனின் முல்லா அப்துல் கானி பரா தர் உட்பட முக்கியத் தலைவர்க ளுக்குமிடையே ஆட்சியமைப்பது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தப் பட்டிருக்கிறது.

"உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் வகையில், ஆப்கனின் அனைத்து இனக்குழுக்களும் இணைந்து ஓர் அரசை ஏற்படுத்த வேண்டும்" என்றது முல்லா பராதர் தரப்பு. ஹக்கானி தரப்போ, "பெரும்பான்மையாக இருக்கும் சன்னி பஷ்தூன்கள் மட்டுமே இடம்பெறக் கூடிய ஒரு தூய அரசுதான் அமைய வேண்டும். அதிகாரத்தை யாருடனும் பகிர்ந்துகொள்ள முடியாது" என்றிருக்கிறது. இதனால் இரு தரப்புக்கும் மோதல் ஏற்பட, ஒருகட்டத்தில் அது துப்பாக்கிச்சூடு வரை சென்றிருக்கிறது.

சமாதானம் ஏற்படுத்துவதற்காக, பாகிஸ்தான் அரசின் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ பிரிவின் தலைவர் ஃபைஸ் "மீது ஆப்கனுக்குச் சென்றிருப்பதாகச் செய்திகள் சொல்லப்பட்டன. செய்தி வெளியான இரண்டு நாள்களில் ஆப்கனில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டிருக்கிறது. "ஆப்கன் ஆட்சியமைக்கும் விவகாரத்தில் பாகிஸ்தானின் தலையீடு இருப்பதால், இது இந்தியாவுக்குப் பெரும் பின்னடைவு" என்று எச்சரிக்கிறார்கள் காபூல் அரசியலை உற்று நோக்குபவர்கள்.


"சீனாவும் பாகிஸ்தானும் மட்டுமே தலிபான்களை முழுமையாக அங்கீகரித்திருக்கின்றன. அமெரிக்கா ஆப்கனிலிருந்து வெளியேறிவிட்டதால், குறைந்தபட்சம் கொஞ்ச காலத்துக்காவது தலிபான்களுக்கு எதிராக நிற்காது. மேற்கத்திய நாடுகளுக்கோ இதில் எந்தவொரு கவலையும் இருக்காது. இஸ்லாமிய நாடுகள் தலிபான்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை, போலவே எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. தாலிபன்கள் ஆட்சியமைத்தால் அது இந்தியாவுக்கு மட்டுமே பெருந்தொல்லையாக அமையும். எனவே, தாலிபன்கள் ஆட்சியமைப்பதற்கு எதிராக இந்தியாவைத் தவிர வேறெந்த வெளிநாட்டிலிருந்தும் பெரிதாக அழுத்தம் தரப்படாது.

இப்போதே தலிபான்கள் இடைக்கால ஆட்சி அமைத்துவிட்டதால், ஹக்கானி குழுவோடு சுமுகமாகச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. மக்கள் போராட்டம், பஞ்ச்ஷிர் பிரச்னையை அடக்கிவிட்டால், முறையான தாலிபன் ஆட்சி அமைந்துவிடும் என்றே தெரிகிறது. ஆனாலும், அந்த ஆட்சி எத்தனை காலத்துக்கு நீடிக்கும் என்பது கேள்விக் குறியே!" என்கிறார்கள் சர்வதேச அரசியல் நோக்கர்கள். ■



# வீடுகளிலிருந்தே நல்லூர் கந்தனை தரிசிக்க வழிவகுத்த “ஓம்” தொலைக்காட்சி

# 10 ஆவது அகவையில்



## ஆன்மிகத் தேடலில் முக்கிய பங்கு



டான் குழுமத்தின் சேவைகளில் ஓம் தொலைக் காட்சிச் சேவையானது இலங்கையில் உள்ள இந்து ஆலைய நிகழ்வுகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றது. இந்த இக்கட்டான கொரோனா சூழலில் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் உள்ள நம்மவர்களும் இந்த கோவில் நிகழ்வுகளை ஓம் தொலைக்காட்சி மூலமாக கண்டு மகிழ்கின்றார்கள். அந்த வகையில் 10 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் தொலைக்காட்சி மேலும் சிறப்பாகச் செயற்பட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். ஆன்மீகத் தேடலில் இது முக்கிய பங்கை வகித்து மக்களை ஆற்றுப்படுத்துகின்றது.

**எஸ்.மகேசன், யாழ். அரசாங்க அதிபர்.**

## அருகிலிருந்து பார்ப்பது போன்ற உணர்வு



தமிழர் தம் பண்பாட்டின் அடையாளமாய் உலகளாவிய ரீதியில் கவனத்தை ஈர்க்கும் பெருமை பெற்றது நல்லூர் கந்தசுவாமி ஆலயம். இவ் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ தினங்கள் உலகம் முழுவதும் வாழுகின்ற ஈழத்து இந்துக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு விதத்தில் முக்கியத்துமிக்கன.

உலகப் பெருநெருக்கடியினால் ஊர்கூடித் தேர் இழுக்க முடியாது போனாலும், எம்பெருமானின் திருவருட் கடாட்சத்தினால் மகோற்சவம் இடம் பெற்றமை மனத்திருப்தியைத் தருகிறது. இத்தகு நெருக்கடி நிலைமையிலும் – உற்சவ காலத்தில் நேரடியாக முருகப் பெருமானைத் தரிசிக்க முடியாமல் போன மனக்குறையைத் தீர்த்து வைத்தது “ஓம்” தொலைக்காட்சி தான்.

அத்தனை திருவிழாக்களையும் அருகிருந்து பார்ப்பது போல மிகத் துல்லியமாகவும், தெளிவாகவும் வீடுகளில் இருந்தவாறே காணச் செய்தமைக்கு மனமார்ந்த நன்றிகள். எம்பெருமான் முருகனுடைய அருளும், ஆசியும் எங்கும் நிறையட்டும்.

**பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா துணைவேந்தர், யாழ். பல்கலைக் கழகம்.**

## மக்கள் மனதை ஆற்றுப்படுத்தும் விதத்தில் அமைத்த ஒளிபரப்பு



ஓம் தொலைக்காட்சி ஆற்றிவரும் உன்னதபணி பாராட்டுக்குரியது. வீட்டிலிருந்தவாறே திருக்கோவில்களை சிறப்பாகத் தரிசிக்கும் பேற்றினை தரும் டான் நிறுவனத்துக்கு நம் சமூகம் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது. குறிப்பாக நல்லைக் கந்தனின் திருவிழாவை மக்கள் நேரில் தரிசிக்க முடியாத துயரில் இருந்த வேளை, மக்கள் மனதை ஆற்றுப்படுத்தும் விதத்தில் ஓம் தொலைக் காட்சி காலை மாலை மிக அழகாகத் திருவிழாவைத் தரிசிக்க வைத்தமை பெருமைக்குரிய விடயமாகும். ஓம் தொலைக் காட்சியின் உன்னதபணிக்கு சைவ மக்கள் சார்பில் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

**- கலாநிதி ஆறு.திருமுருகன்**

## ஆன்மீக நிறைவை தருகிறது



ஈழத்தமிழர்கள் பொதுவாக ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். சதா சர்வகாலமும் இறைவனை நினைத்துருகி எந்தச்செயலைச் செய்தாலும் எது நடைபெற்றாலும் அது அவனால்தான் செய்யப்படுகின்றது என்ற நினைப்புடன் செய்து அச் செயலின் பலனை இறைவனுக்கு சமர்பணம் செய்து வாழ்ந்து வருவது ஈழத்தமிழர்களின் தொன்று தொட்டு வாழும் ஆன்மீக வழிபாட்டு முறை. இவ்வாறான ஈழத்தமிழர்களின் ஆன்மீக பேராவாவிற்கும் அவர்களின் ஆன்மீக மன நிம்மதிக்கும் நிறைவைக் கொடுக்கும் தொலைக்காட்சியாக ஓம் தொலைக்காட்சி செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக உலகத்தின் எந்த ஒரு மூலையில் இருந்தாலும் தான் வாழ்ந்த மண்ணில் தனது ஊர்கோவில் திருவிழா வினை பார்த்திடும் பாக்கியம் கிடைத்திடாதோ என்று ஏக்கத்துடன் வேறு நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற எமது ஈழத்தமிழ் உறவு களின் ஏக்கத்தினை தீர்த்து வைத்து அவர்களுக்கான ஆன்மீகத் திற்கான ஒரு உறவுப்பாலமாக ஓம் தொலைக்காட்சி ஈழத்தில் இருந்து செயற்படுகின்றது.

**வி.மணிவண்ணன்,யாழ். மாநகர முதல்வர்**

## கந்தன் ஆசிகளைப் பெற்றோம்



முருகன் தெய்வமாகக் கொண்ட திருத்தலங்களில் நல்லூர் கந்த சுவாமி கோவிலும் முக்கியத்துவமும் வாய்ந்ததாகும். கோயிலாகும். முருகனை நேரில் சென்று தரிசிப்பதற்கு இந்த கொரோனா காலம் சந்தர்ப்பத்தை தரவில்லை. இருந்த போதிலும் மக்கள் தமது வாழ்விடங்களில் இருந்து முருகப் பெருமானை தங்களது இதயத்தில் இருத்தி வழிபாட்டு வந்திருக்கின்றார்கள். ஓம் தொலைக்காட்சி இதற்கு வழிவகுத்தது. திருவிழாக்கள் இடம்பெற்ற காலத்தில் நல்லூர் கந்தனின் சன்னிதானத்தில் இடம்பெற்ற பூசைகளும் ஆலய வழிபாடுகளும் ஒளிபரப்பு செய்தது. இதனால், நாங்கள் எல்லோரும் அந்த பிராத்தனையில் பங்கு கொண்டு நல்லூர் கந்தன் ஆசிகளை ஓம் தொலைக்காட்சி ஊடாக பெற்றுக்கொண்டோம்.

**-மாவை சேனாதிராஜா தலைவர், இலங்கை தமிழரசி கட்சி**

## இறைவனை ஈர்க்கும் பக்திவலை



உலகின் முதலாவது பக்தித் தொலைக்காட்சி என்ற பெருமை பத்தாவது அகவையைக் காணும் ஓம் தொலைக்காட்சிக்கு உண்டு. இலங்கை மண்ணில் இருந்து உலகெங்கும் ஒளிபரப்பாகும் ஓம் தொலைக்காட்சி இத்தகைய பெருமையைக் கொண்டிருப்பது நம்மெல்லோருக்கும் மகிழ்ச்சி தருவதாகும். ஓம் தொலைக்காட்சியின் ஐந்தாவது ஆண்டு விழா நல்லூர் சங்கிலியன் பூங்காவில் பெருமையுறும் விழாவாக முன்னெடுக்கப்பட்டதுடன் அதன் அடையாளமாக என்னை ஆசிரியராகக் கொண்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. இவ்வாறு இந்துக்களின் வாழ்வோடு இணைந்த வகையில் ஓம் தொலைக்காட்சியின் பயணம் அமைகிறது. இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களுக்கும் பக்திசார் கலைஞர்களுக்கும் அடையாளமாக விளங்கும் ஓம் தொலைக்காட்சி சூரிய சந்திரர் உள்ளவரை தனது சேவையை நல்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்**

## வீடுகளில் இருந்தே தரிசனம்



தற்போதைய பொருந்தொற்று காலப்பகுதியில் வீட்டிலிருந்தப் படியே நல்லூர் கந்தனின் தரிசனத்தை பார்ப் பதற்கு வாய்ப்பளித்த ஓம் தொலைகாட்சி அலை வரிசைக்கு வாழ்த்துக் களை தெரிவித்துக்கொள் கின்றேன். வீட்டியிருந் தபடியே நிகழ்வுகளை நேரில் பார்ப்பது போன்ற உணர்வை இதன்மூல மாக எம்மால் பெற்றுக் கொள்ள முடிந்தது. இது ஒரு மகப்தான சேவை. இந்தச் சேவை மேலும் தொடர வேண்டும்.

**வா.தியாகேந்திரன், அறக்கொடை நிறுவனர்**

## நம் ஆன்மீக வரலாற்றின் ஆவணங்கள்



டான் குழுமத்தின் ஆன்மீக அலைவரிசைகளில் இந்து சமய அலைவரிசையான “ஓம்” ரீவி பத்தாண்டுகளை நிறைவுசெய்வது காலப்பதிவாகும் கணம் குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். ஓம் ரீவி தன் கமராக் கண்களுக்குள் சிறைப்பிடிக்கும் ஒவ்வொரு காட்சியும் நம் ஆன்மீக வரலாற்றின் ஆவணங்கள். அவை மறைந்து போகாது பொக்கிசங்களாய்ப் பேணப்பட வேண்டும். அதனை டான் குழுமம் கருத்தில் எடுக்க விண்ணப்பம் செய்கின்றேன். இந்து சமய இருப்புக்கு சற்று அச்சுறுத்தல்கள் எழும் காலத்தில் அதன் அதிர்வுகளை ஒளி ஒலி கதிர்களாக உலகம் முழுவதும் எடுத்துச் செல்லும் ஓம் ரீவியின் பணி நின்று நிலைத்தோங்கி நீண்டு செல்ல இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**இ.சர்வேஸ்வரா விரிவுரையாளர் -யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொதுச் செயலாளர் - யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்**

## மெய்சிலிக்க வைத்த நேரலை



டான் குழுமத்தின் “ஓம்” தொலைப்காட்சி சனல் அதன் சைவ சமய சேவையின் பத்து ஆண்டு நிறைவை பூர்த்தி செய்வதையிட்டு எமது பாராட்டுக்களையும் வாழ்ததுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். பல்வேறு ஆலயங்களின் திருவிழாக்களை சிறப்பற ஒளிபரப்பாவதுடன் சமயப் பெரியார்களது சொற்பொழிவுகளை ஒளிபரம்புவது மிகச்சிறந்த சமயச் சேவையாகும். இவற்றுள் மிகச்சிறந்தது நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவங்களின் நேரலை ஒளிபரப்பாகும். அதிலும் இந்த ஆண்டின் நேரலை ஒளிபரப்பு ஆலயத்தில் நாம் நேரடியாக சமூகமாக இருந்து முருகனைவீ ட்டில் இருந்து கொண்டே தருசிப்பது போன்ற உணர்வைத் தந்து மெய்சிலிக்க வைத்தது. இதற்காக எமது விசேட நன்றியும் பாராட் டுக்களும்

**சீ.வீ.கே.சிவஞானம் அவைத் தலைவர், வடமாகாண சபை.**

## மக்கள் மனங்களை ஆன்மீக வழியில் ஆற்றுப்படுத்தும் ஓர் அரும்பணி



இலங்கையில், இந்து மதம் சார் முதல் தமிழ் ஆன்மீக அலைவரிசை என்ற பெருமைக்குரிய, டான் தொலைக்காட்சியின் “ஓம்” அலைவரிசை தனது பணி தொடங்கி பத்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்திருப்பது மனமகிழ்வளிக்கிறது. அதிலும் குறிப்பாக, இப்பெருந்தொற்றுக் காலத்தில் சுகாதார விதிமுறைகளுக்கமைய நடைபெற்று முடிந்த நல்லூரான் பெருந்திருவிழாவில் கலந்துகொள்ள முடியாமல்போன காலச்சூழலை நினைந்துருகி நின்ற அடியவர்களுக்கு ஒரேயொரு ஆறுதலாய் அமைந்தது. இவ்வாறாக, காலத்தின் தேவை கருதி, மக்கள் மனங்களை ஆன்மீக வழியில் ஆற்றுப்படுத்தும் ஓர் அரும்பணியை சீர்மையாய் செய்து வரும் ஓம் அலைவரிசையின் வளர்ச்சிக்காக, அதன் பத்தாவது ஆண்டு நிறைவில் எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.


**சிவஞானம் சிறீதரன்,பாராளுமன்ற உறுப்பினர்,**

## திருவிழாக்கால பூஜைகளை கண்முன் கொண்டுவந்த சேவை



தமிழர்களின் சமய, கலை, கலாசார, விழுமியங்களை பறைசாற்றும் விதத்திலும் கட்டிக்காக்கும் வகையிலும் தொடர்ந்து சேவையாற்றிவரும் ஓம் தொலைக்காட்சி 10 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவிப்பதில் நான் பெரும் மகிழச்சியடைகின்றேன். உலகம் முழுவதும் கொவிட் தொற்றினால் பெரும் பாதிப்புக்களை சந்தித்துள்ள நிலையில் ஆலயங்களில் பக்தர்கள் ஒன்றுகூடி திருவிழாக்களை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. இந்த இக்கட்டான நிலையில் இடம்பெறும் திருவிழாக்கால பூஜைகளை எமது கண்முன் கொண்டுவரும் சேவையினை ஓம் தொலைக்காட்சி மேற்கொண்டு வருகின்றது. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 25 நாட்கள் திருவிழாவையும் பாரெங்கும் தமிழ் மக்கள் பார்க்கச் செய்த பெருமை இந்த தொலைக்காட்சியை சாரும்.

**விஜயகலா மகேஸ்வரன், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர்**




### நல்லூர் கந்தன் உற்சவ நேரடி ஒளிபரப்பை சிறப்பாக வழங்குவதற்கு பங்களிப்புச் செய்தவர்கள்



நிகழ்ச்சி நெறிப்படுத்தல் - த.கீர்த்தீபன்



கமரா: -ம.விபூசன்



நா.ராஜேந்திரன்



வர்ணனை: - காரை எம்.பி.அருளானந்தன்



செ.லோகேஸ்வரன்

# பயணங்கள்!

மாலி


தாண்டிக்குளம்

## ‘ஆளுக்கு ஆறு ரோச் லைற் பற்றரிகள் கொண்டுபோகலாம்...’

உலகம் எதிர்பார்த்திராத கொரோனா, எதிர்பாராததாகவே இங்கு நீண்ட காலம் தங்க வைத்துவிட்டது. கொரோனாவைப் பொறுத்தவரை, லண்டனைவிட இலங்கை பரவாயில்லை என்றுமிருந்தது. ஆனால், இப்போது அதுவல்ல நிலைமை,

யாழ்ப்பாணத்தில் தடுப்பூசி கிடைக்காதிருந்தபோது, கொழும்பு சென்றிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் அங்கு ‘அஸ்ட் ராசெனெக்கா’ முதலாவது ‘டோஸ்’ போட்டுக்கொள்ள நண்பர் ஒருவர் அநுசரணையானார்.

யாழ்ப்பாணத்தில் அஸ்ட்ரா செனெகா பொதுமக்களுக்கு வழங்கப் படாததில், இரண்டாவது ‘டோஸுக் கும் அதற்காக மாத்திரம் கொழும்பு செல்ல நேர்ந்தது.

ஒரு நாள் சாயந்தரம் புறப்பட்டு, இரவு 2:30 மணிக்கு கொழும்பு விகார மாதேவி பூங்காவில் 24 மணிநேரமும் செயல்பட்ட தடுப்பூசி முகாமில் இரண்டாவது ‘டோஸ்’ போட்டுக் கொண்டாயிற்று.

மறுநாள் நண்பகல் கொழும்பிலிருந்து புறப்பட்டு, சாயந்தரம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததில், ஓர் 24 மணி நேரத்தில் சென்று திரும்பிய பயணம். இதைவிட விரைவாகவும்கூட, இப்போது திரும்பிவிடலாம்.

25 வருடங்களுக்கு முன்னரான ஒரு பயணம், அப்போது ஒரு காலத்தின் பதிவாக இருந்தது.

1995 பெப்ரவரி -மார்ச் மாதம். இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த காலம்.

லண்டனில் வதியும் என்னிடம் இலங்கைக் கட்வுச் சீட்டு, இலங்கை தேசிய அடையாள அட்டை இரண்டும் இருந்தன. எனினும், யாழ்ப்பாணத்துக்கு பத்திரிகையாளனாக என்னுடைய பயணத்துக்கு வசதியாக, இலங்கை அரசாங்கத்தின் அநுசரணையோடு செல்ல விரும்பினேன்.

கொழும்பில், தகவல் திணைக்கள பணிப்பாளருடன் தொடர்புகொண்டபோது, பாதுகாப்பு அமைச்சில் அனுமதி பெறவேண்டும் என்று தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சுக்கு சென்றேன். அங்கு, வெளிநாட்டு அமைச்சின் சிபாரிசு தேவை என்று சொன்னார்கள்.

வெளிநாட்டு அமைச்சின் பிரச்சாரப் பகுதி பணிப்பாளரது சிபாரிசைப் பெற்றுக்கொண்டு, திரும்பவும் பாதுகாப்பு அமைச்சுக்கு சென்று, அதனைக் கொடுத்தபோது, இராணுவ ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் பிரிகேடியர் முதநாயக்க அழைத்தார்.

வவுனியா இராணுவ தளபதிக்கு எனது பயணம் பற்றி தெரிவித்துள்ள கடிதத்தின் பிரதியை என்னிடம் தந்துவிட்டு, கிளாலி வரையிலும் பயணம் எப்படியிருக்கும் என்பதையும் கூறினார். லண்டனில் எனது சஞ்சிகை ‘நாழிகை’ பற்றி விசாரித்தவர், அரசியல் நிலைமைகளையும் பொதுவாக பேசினார்.

“சிலவேளைகளில் திரும்பி வரும் வேளை, பயணத்தில் சிரமமெதுவும் இருக்காது. ஆனையிறவு பாதையோ அல்லது பூநகரி பாதையோ திறக்கப்பட்டுவிடவும் கூடும்” என்று சிரித்துக் கொண்டு அவர் கூறினார்.

வவுனியா செல்லும் இரவு தபால் புகையிரதம் இரவு 11 மணியளவில் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படுகிறது. முன்னரெல்லாம் வாரத்தில் குறித்த சில தினங்களே கிளாலி படகு சேவை நடைபெறும். அதற்கு ஏற்ற விதத்தில் கொழும்பி லிருந்து புறப்பட்டுச் செல்வார்கள். மோதல் தவிர்ப்பு ஏற்பட்டிருந்த அந் நாள்களில் வாரத்தில் ஐந்து, ஆறு நாள்கள் பொதுவாக படகு சேவை நடைபெற்றது. எனவே, அன்று இரவே புறப்பட்டுவிடலாமென எண்ணிய போது, புகையிரத உறங்கலிருக் கையும் கிடைத்தது; புறப்பட்டேன்.

கொழும்பில் புதுப்புது கட்டடங்களுடன் பெருமளவு மாற்றம் ஏற்பட்டிருந்தாலும், கோட்டை புகையிரத நிலையம் அப்படியேதான் இருக்கிறது. உள்ளே நுழைந்ததும் எத்தனையோ நினைவுகள். மிகுந்த கூட்டமாக இருந்தது. ரயில் புறப்படுவதற்கு முன்னதாக அந்த புகையிரத நிலையத்துக்கே உரித்தான ‘அந்த தொனியில்’, அந்த அறி விப்பு: “முதலாம் மேடையிலிருந்து வவுனியா செல்லும் இரவு தபால் புகையிரதம் ....”

மணியடித்து, ரயில் புறப்பட்டது.

கண்மூடி விழித்தால் யாழ்ப்பாணம். அது அந்தக் காலம். அப்போது, தபால் புகையிரதத்துக்கு பின்னர் ‘இன்ரர் சிற்றி’ ரயிலும் ஒன்று புறப்பட்டு, தபால் புகையிரதத்துக்கு முன்னதாகவே யாழ்ப்பாணம் போய்ச் சேரும்.

உறங்கலிருக்கைதானென்றாலும், உறக்கம் அவ்வளவாக வரவில்லை. மற்றைய பெட்டிகளில் பெரும் நெரிசல் என்பதும் தெரிந்தது.

காலை 6 மணியளவில் ரயில் வவுனியாவை அடைந்தது. வடபகுதிக்கு செல்வோருக்காக வவுனியாவுக்கு அப்பால் மேலும் இரண்டொரு மைல்கள் தொலைவிலுள்ள தாண்டிக்குளம்வரை ரயில்கள் செல்கின்றன. அங்குதான் இறங்கவேண்டும்.

புகையிரத மேடை என்று பெரிதாக எதனையும் அங்கு காணவில்லை. புகையிரதம் சென்று நின்றதும் அநேகமாக ஒவ்வொரு பெட்டிகளினதும் அருகாக வான்கள் பல வந்து நின்றன. அவற்றில் ஒன்றில் அவசர அவசரமாக ஏறி, இடம்பிடித்துக்கொண்ட திருப்தி. வான் புறப்பட்டது. இரண்டு நிமிடங்கள் ஆகியிருக்கும். இறங்கச் சொன்னார்கள்.

என்ன அது? ஆம், இடம் வந்துவிட்டது. தாண்டிக்குளம் இராணுவ சோதனைத் தளம். அதுவரைக்கும்தான் அந்த வான் சேவை. 40 ரூபா. விஷயம் தெரிந்தவர்கள் நடந்தே வந்தார்கள்.

இரண்டு பெரிய பந்தர்கள். ஒன்றில் ஆண்களும் மற்றையதில் பெண்களுமாக விரைந்துசென்று, கியூவில் உடைமைகளை வைத்துவிட்டு நின்றார்கள். “இராணுவத்தினரின் சோதனை 8 மணிக்கு ஆரம்பமாகும். அப்படியே ஒவ்வொருவராக அப்பாலே செல்லலாம்” என்று எனக்கு முன்னால் நின்றவர் சொன்னார். அதற்கிடையில் பலரும் காலைக்கடன்களை அங்கு முடித்துக்கொண்டார்கள். மலசலகூடம், குடிதண்ணீர், தேநீர்க்கடை எல்லாமே அங்கு இருக்கின்றன. “ஆளுக்கு ஆறு ரோச் லைற் பற்றரிகள் கொண்டுபோகலாம். அந்தக் கடையில் இருக்கிறது, வாங்கிக்கொள்ளுங்கோ” என்று சிறுவன் ஒருவன் கூவி நடந்துகொண்டிருந்தான். பென் ரோச் பற்றரிகளுக்கு அநுமதி இல்லை. என்னிடம் அவை இருந்தன. கூடவே கமெரா, பிலிம் சுருள்கள், ரேப் றெக்கோடர், நாடாக்கள் இருந்தன.

சற்று தள்ளி ஒரு கொட்டிலிலிருந்த இராணுவ உத்தியோகத்தரிடம் சென்று, என்னிடமிருந்த பாதுகாப்பு அமைச்சு கடிதத்தைக் காண்பித்தேன்.

தனக்கு இதுபற்றி தெரியாது என்றும், வவுனியா தளபதிக்கு முகவரியிடப்பட்டிருப்பதால் அவரைச் சென்று கண்டுவரும்படியும் அங்கிருந்து 4, 5 மைல்கள் தொலைவிலுள்ள இராணுவ முகாமுக்கு என்னை வண்டியொன்றில் அனுப்பினார். அங்கு சென்று தெரிவித்ததும் சோதனை முகாம் பொறுப்பாளருக்கு தகவல் அனுப்பினார்கள். திரும்பி வந்தபோது ‘கியூ’ விரைவாகவே நகர்ந்து கொண்டிருந்தது. அந் நாள்களில் அவ்வளவு கெடுபிடிகள் இல்லைப்போல் தெரிந்தது.

நான் சோதனையின்றியே செல்லலாம் என்றார் ஒருவர். இன்னொருவர், “இல்லையில்லை, பார்வையிடத்தான் வேண்டும்” என்றார், பார்த்தார்கள்.

“பென் ரோச் பற்றரி, பிலிம் சுருள்கள்...” என்றார் பின்னையவர். “சரி சரி” என்றார் மற்றையவர்.

அது முடிந்து அப்பாலே செல்ல, சிறிதுதூரம் தள்ளி இ. போ. ச. பஸ் வண்டிகள் நின்றன. சில மைல்கள் தூரம் அந்த பஸ்ஸில் பிரயாணம். 5 ரூபா வாங்கினார்கள். பஸ்ஸிலிருந்து இறங்கியதும் இன்னொரு சோதனைத் தளம், கியூ.

அங்கு உடைமைகள் எதனையும் திறந்து பார்க்கவில்லை. அதையும் தாண்டிச் செல்ல, சிறிது தூரத்தில் இன்னொன்று. சிவில் உடையிலும் சிலர் நின்றார்கள். அதற்கப்புறம்....

சுமார் மூன்று மைல்கள் No Man's Land. அது, சமரசம் உலாவும் நிலம். நம்முடைய உடைமைகள் நமக்கேதான் சொந்தம். எவரும் பிணக்குக்கோ, துணைக்கோ வரமாட்டார்கள். சுமந்து, நடந்து செல்லவேண்டியதுதான். அரை வாசித் தூரம் போய்விட்டால், பின்னர் மீதத்துக்கு சைக்கிள்களில் செல்லலாம் என்றார்கள். ஆனால், அதுவரைக்கும்.....

பெண்கள், வயதானவர்கள், இப்படி ... அனைவருமே தலையிலும் தோள்களிலும் இடுப்பிலும் கைகளிலுமாக தங்கள் பொருள்களை மாறிமாறி சுமந்து, ஓரங்களில் அடிக்கொரு தடவை ஓய்வெடுத்து, நடந்துகொண்டிருந்தார்கள்.

அதிகம் தாமதித்துவிடவும் முடியாது. ஒரு தடைதாண்டல் போட்டிதான். சில தினங்களாகவே அங்கு பெய்துகொண்டிருந்த கடுமையான மழையின் தூறலும் வேறு இடையிடையே இருந்தது.

அரைவாசித் தூரம் நடந்தாயிற்று என்பதனை உணர்த்தி, காட்டு மரங்கள் நடுவே வீதி ஓரமாக தேநீர்க் கடையொன்றிருந்தது. சைக்கிள்கள் எதுவும் கண்ணில் தெரியவில்லை. “எல்லாம் புறப்பட்டுப் போய்விட்டன. சிறிது நேரத்தில் அவை வந்துவிடும்” என்றார்கள்.

பத்து மணியளவில் ஆகிக்கொண்டிருந்தது. ஏதாவது சூடாகக் குடிக்கவேண்டும் போலிருந்தது. கடையில் இடியப்பம், தோசை போன்ற பலகாரங்களும் இருந்தன. ஆனால், சாப்பாடுபற்றி நாட்டமிருக்கவில்லை. இந்தியாவுக்கும் சென்றபடியால், அநேகமாக எல்லா நோய்தடுப்பு முன்னேற்பாடுகளுடனுமே சென்றிருந்தேன். தேநீர் ஒன்று அருந்தினேன்.

நம்முடைய உடம்புக்கு திடீரென்று இவையெதுவும் ஒத்துக்கொள்ளாதனவாக ஆகிவிடுமோ என்ற இந்த பயம் - எண்ணம், வெளிநாடுகளிலிருந்து செல்பவர்கள் குறித்து அங்கு பொதுவா கவே பேசப்படுகின்ற ஒன்றாக, பின்னர் செங்கை ஆழியானின் சிறுகதை ஒன்றில் வாசித்தேன்.

கடையடிக்கு சைக்கிள்கள் திரும்பி வந்தபாடில்லை. நடந்து சென்று கொண்டிருப்பவர்கள் இடையிலே மறித்து ஏறிச் செல்கிறார்கள் என்பது தெரிந்தது. எனவே, அந்த ‘யுக்தி’யோடு மேலும் சிறிதுதூரம் நடந்து வென்று கொண்டேன். இளைஞர்கள் பலர் இளைக்க இளைக்க, வியர்வை சிந்த மிகும் துரிதமாகவே அந்த சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். சுமார் ஐந்நூறு சைக்கிள்கள் நாளொன்றுக்கு நூறாக, மாறிமாறி இச் சேவையில் ஈடுபடுவதாக என்னை ஏற்றிச்சென்ற அந்த இளைஞர் கூறினார். இதுதவிர்ந்த வேளைகளில், வேறு ஏதாகினும் இயக்க வேலைகளில் ஈடுபடுவதாக அவர் சொன்னார். இவர்கள் பெறும் கட்டணத்தில் ஒரு பகுதியை புலிகளுக்குச் செலுத்துகிறார்கள்.

இவற்றைக் கூறியபடி, மூச்சு வாங்கினாலும் விரைவாகவே சைக்கிளை ஓட்டிக்கொண்டிருந்தார். பின் கரியரில் எனது பெட்டி. முன் ‘பாரி’ல் நான் இருந்தேன். அந்தக் கிடங்குகளில் வீழ்ந்து, எழுந்து கடகடவென்று சைக்கிள் வேகமாகவே சென்றபோது, இறங்கி நடந்தே போய்விடலாமா என்றுதானிருந்தது. நீண்ட காலம் பழக்கமின்மையால் தொடைகள் வலித்தன.

எனினும், அந்த இளைஞனுடனான கதையில் வலியைச் சமாளித்துக் கொண்டு, விடுதலைப் புலிகளின் தாண்டிக்குளம் சோதனை முகாமை - ‘எல்லை முகாமை’ அடைந்தாயிற்று. அப்போது ஒரு புது உணர்வு நிச்சயமாகவே ஏற்படுகிறது. புது நாடொன்றின் உணர்வுதான். அது, குடிவரவு - குடியகல்வு சோதனை முகாமும்கூட.

(அடுத்த வாரம்)

# திரை விமர்சனம்

| | | |
|---|---|---|
| திரைப்படம் | : | லாபம் |
| இயக்கம் | : | எஸ்.பி.ஜனநாதன் |
| நடிப்பு | : | விஜய் சேதுபதி, ஸ்ருதி ஹாசன் |
| இசை | : | டி இமான் |
| வெளியான நாள் | : | 09.09.2021 |




பெருவயல் கிராமத்தில் விவசாய நிலங்களை அபகரித்து, மக்களை அடிமையாக்கி வைத்து இருக்கிறார் ஜெகபதி பாபு. பல வருடங்களுக்கு பிறகு பெருவயல் கிராமத்திற்கு வரும் விஜய் சேதுபதி, ஜெகபதி பாவுவை எதிர்த்து விவசாய சங்க தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுகிறார்.

இதனால் கோபமடையும் ஜெகபதி பாபு, விஜய் சேதுபதியை அழிக்க நினைக்கிறார். அதே சமயம் விஜய் சேதுபதி கிராம மக்களை திரட்டி கூட்டு பண்ணை திட்டத்தை செயல்படுத்த நினைக்கிறார். இறுதியில் ஜெகபதி பாபு, விஜய் சேதுபதியை அழித்தாரா? விஜய் சேதுபதி பல வருடங்கள் கழித்து ஊருக்கு வர என்ன காரணம்? கூட்டு பண்ணை திட்டம் நிறைவேறியதா? என்பதே படத்தின் மீதிக்கதை.

நாயகனாக நடித்திருக்கும் விஜய் சேதுபதி, விவசாய சங்க தலைவராக வலம் வருகிறார்.

விவசாயத்தின் நன்மை, விவசாயிகள் பணம் சம்பாதிப்பது பற்றி படம் முழுக்க பேசுகிறார். ஒரு கட்டத்தில் அதிகம் பேசுவது போல் தோன்றுகிறது.

நடனக் கலைஞராக வரும் ஸ்ருதி ஹாசன், சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். விஜய் சேதுபதியை காதலிப்பது, அவருக்கு உதவுவது என நடிப்பில் கவர்ந்து இருக்கிறார். நகைச்சுவை என்ற பெயரில் அவர் செய்வதைத்தான் ஏற்க முடியவில்லை.

ஜெகபதி பாபு வழக்கமான வில்லனாக வந்து செல்கிறார். விஜய் சேதுபதி நண்பர்களாக வரும் கலையரசன், டேனி, ரமேஷ் திலக் உள்ளிட்ட பலர் கொடுத்த வேலையை செய்து இருக்கிறார்கள்.

விவசாயிகள் நிலை, அவர்கள் மீதான சுரண்டல்களே கதை என்றாலும் சொன்ன விதத்தில் குழப்பம் இருக்கிறது. இதே கதை கதையில் முன்னர் வந்த படங்களின் தாக்கங்களையும் உணர முடிகிறது.

டி இமான் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம். பின்னணி இசை ஓரளவிற்கு கைகொடுத்து இருக்கிறது. ராம்ஜியின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம் சேர்த்து இருக்கிறது.

லாபம் விவசாய பிரச்னையை பேசும் மற்றொரு தமிழ் திரைப்படமே.



விஜய் அன்ரனியுடன் காளி படத்தில் நடித்தவர் ஷில்பா மஞ்சுநாத். இப்போது நட்டி நட்ராஜ் உடன் இணைந்து வெப் என்ற படத்தில் நடித்து வருகிறார். அவ்வப்போது போட்டோஷூட் எடுத்து அதை சமூகவலைதளத்தில் வெளியிட்டு வருகிறார் இவர்.

தற்போது, கவர்ச்சியான சில படங்களை வெளியிட்டுள்ளார். எங்களாலும், ‘சிக்ஸ் பேக்’ காட்ட முடியும் என்ற தோரணையில் இந்த போட்டோஷூட்டை எடுத்துள்ளார் ஷில்பா.




அரிமா நம்பி, இருமுகன் படங்களை இயக்கிய ஆனந்த் சங்கர் இயக்கத்தில் விஷால் நாயகனாக வும், ஆர்யா வில்லனாகவும் நடித்துள்ள படம் எனிமி. அவர்களுடன் மிருணாளினி ரவி, மம்தா மோகன்தாஸ், பிரகாஷ்ராஜ், தம்பி ராமையா என பலர் நடித்துள்ள இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து இறுதிக்கட்ட பணிகள் நடந்து வருகிறது.

இந்த நிலையில் எனிமி படம் எப்போது திரையரங்குகளுக்கு வரப்போகிறது என்று எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில் தற்போது ஆயுத பூஜை தினத்தில் படம் வெளியாக இருப்பதாக அறிவித்துள்ளார் விஷால். 50 வீத இருக்கைகள் அனுமதிக்கப்பட்டபோதும், எனிமி கண்டிப்பாக வெற்றி பெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ் சினிமாவில் சிறந்த கதைகளை தேர்வு செய்து நடித்து வருகிறார் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ். இவர் நடிப்பில் சமீபத்தில் திட்டம் 2, பூமிகா ஆகிய படங்கள் வெளியாகின. இந்த நிலையில் அக்சன் கிங் அர்ஜூனு டன் இணைந்து கிரைம் கதை ஒன்றில் நடிக்கவுள்ளார்.

இந்தப் படத்தை தினேஷ் லட்சுமணன் இயக்க, ஜி. எஸ். ஆர்ட்ஸ் சார்பில் ஜி.அருள்குமார் தயாரிக்கிறார். அர்ஜூனுக்கு நிகராக ஐஸ்வர்யாவுக்கும் முதன்மையான பாத்திரம் கதையில் வழங்கப்பட்டுள்ளதாக தயாரிப்பாளர் கூறியுள்ளார்.






“அண்ணாத்த“ முதல் பார்வை மற்றும் படத்தின் அசைவு காட்சி ( motion Poster) நேற்று முன் தினம் வெளியானது.

திருவிழா பின்னணியில் கோயில் மணிகள், வாள் களின் பின்னணியில் ரஜினி பட்டு வேட்டி, சேர்ட்டுடன் நிற்பதுபோல் முதல்பார்வையும், றோயல் என்பீல்ட் மோட்டார் சைக்களில் கையில் வாள் ஏந்தியபடி காணொலியின் இறுதியில் கோபத்துடன் நடந்து செல்வது போலவும், கோபத்துடன் வசனம் பேசுவது போலவும் அமைந்திருந்து அசைவு காட்சியும் அமைந்திருந்தன.

யூ - ரியூப்பில் அசைவு காட்சி வெளியான ஒரு சில மணி நேரத்திலேயே 15 இலட்சம் பார்வைகளை கடந்துள்ளது. அண்ணத்த படம் தீபாவளிக்கு வெளியா கின்றது.



தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக வலம்வரும் விஜய் சேதுபதி, தெலுங்கில் வில்லனாக அறிமுகமான படம் உப்பென்னா. இந்த படத்தில் நாயகி கீர்த்தி ஷெட்டிக்கு தந்தையாகவும், கொடூர வில்லனாகவும் மிரட்டி இருந்தார்.

இந்நிலையில், நடிகர் விஜய் சேதுபதி தமிழில் நடிக்க உள்ள புதிய படத்தில், அவருக்கு ஜோடியாக தெலுங்கு நடிகை கீர்த்தி ஷெட்டியை நடிக்க வைக்க படக்குழு முயற்சி செய்துள்ளது. இதை அறிந்த விஜய் சேதுபதி, கீர்த்தி ஷெட்டியுடன் நடிக்க மாட்டேன் என சொல்லிவிட்டாராம். ஏனெனில், தனக்கு மகளாக நடித்த நடிகையுடன் ஜோடியாக நடிப்பதை அவர் விரும்பவில்லையாம்.



# ஐ.பி.எல்லுக்கான பலி!




இங்கிலாந்து - இந்திய அணிகள் மோதவிருந்த ஐந்தாவது டெஸ்ட் போட்டி ரசிகர்களால் அதிகம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தொற்று அச்சம் காரணமாக இந்தப் போட்டி நிறுத்தப்பட்டது. இந்திய அணியின் தலைமை மற்றும் உதவி பயிற்றுவிப்பாளர்களுக்கு ஏற்பட்ட கொரோனா தொற்றே இதற்குக் காரணம். எனினும், வீரர்கள் எவருக்கும் தொற்று இல்லை என்பதால் போட்டியை தொடர்ந்து நடத்தவே இங்கிலாந்து விரும்பியது.

ஆனால் போட்டியில் ஆடுவது, எதிர்வரும் 19ஆம் திகதி டுபாயில் ஆரம்பமாகும் ஐ.பி.எல். தொடருக்கு சிக்கல் ஆகிவிடும் என்று இந்திய கிரிக்கெட் கருதியது. அத்துடன், தொற்று பாதிப்பு ஏற்பட்ட நிலையில், வீரர்களுக்கும் தொற்று ஏற்படுமானால் பல ஆயிரம் கோடி ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டு விடும். எனவே, ஐந்தாவது போட்டியை இரத்து செய்ய வேண்டும் என்று ஐ.பி.எல். அணி உரிமையாளர்கள் வற்புறுத்தினர்.

இதனால், இந்திய அணி போட்டியில் ஆடுவதற்கு பின்னடித்தது. இங்கிலாந்து அணியை சமாளிக்க அவர்கள் கேட்ட 300 கோடி இந்திய ரூபாயை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 810 கோடி ரூபாயை வழங்கவும் இந்திய அணி சம்மதித்தது. ஆனால், தொடரை 2 - 2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைவதை இந்திய சம்மதிக்கவில்லை. இதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு ஜனவரியில் இந்தத் தொடரை நடத்துவதற்கு இந்தியா சம்மதித்தது.

இதனால், ஐந்தாவது போட்டி இடைநிறுத்தப்பட்டு, இந்திய வீரர்கள் ஐ.பி.எல். தொடருக்காக டுபாய் செல்லத் தயாராகி வருகின்றார்கள்.

இதனிடையே, உயிர்குமிழி பாதுகாப்பை மீறி இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி லண்டனில் தனது புத்தக வெளியீட்டை நடத்தினார் என்றும், இதில் பங்கேற்க கோலி உட்பட பல வீரர்களை அழைத்து சென்றிருந்தார் என்றும் இதுதான் கொரோனா தொற்றுக்கு காரணமாக இருந்தது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆக, உயிர்குமிழி பாதுகாப்பை இந்திய வீரர்கள் நேர்மையாக பின்பற்றவில்லை, இதனால் பரவிய தொற்றால் ஐ.பி.எல். தொடர் பாதிக்கக்கூடாது என்பதற்காக ஐந்தாவது டெஸ்ட் போட்டி பலியிடப்பட்டுள்ளது என்பதே உண்மை...!



## மீண்டும் வரமாட்டேன்

மின்னல்வேக ஓட்ட வீரர் என்ற பெருமையை பெற்றவர் உசைன் போல்ட். ஒலிம்பிக் போட்டிகளில் 8 தங்கப் பதக்கங்களை வென்றவர். களத்திலிருந்து ஓய்வு பெற்றுவிட்ட அவர் மீண்டும் விளையாட்டில் பங்கேற்க வருவதற்கு விரும்பினார். ஆனால், மிகவும் தாமதமாகி விட்டது. எனினும், மீண்டும் போட்டிகளில் பங்கேற்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டதாகக் கூறியுள்ளார்.

ஜமைக்காவை சேர்ந்த 35 வயதான உசைன் பேல், 2017ஆம் ஆண்டில் உச்சத்தில் இருந்தபோதும் தனது தடகள போட்டியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

எனினும், அவர் இம்முறை நடந்து முடிந்த ரோக்கியோ ஒலிம்பிக் தொடரில் பங்கேற்க விரும்பினார் என்று கூறப்பட்டது. ஆனால், அவரின் பயிற்றுவிப்பாளர் அவர் மீண்டும் தடகளத்திற்கு அடியெடுத்து வைப்பதற்கு மறுப்பு தெரிவித்து விட்டாரென போல்ட் கூறியிருக்கிறார்.

2019இல் ரோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் எனது விருப்பத்தை பயிற்றுவிப்பாளருக்கு கூறினேன். ஆனால், அதில் பங்கேற்க அனுமதிக்க மறுத்து விட்டார். 2017இல் நான் ஓய்வு பெறப்போகிறேன் என்று கூறியபோது எனது பயிற்றுவிப்பாளர் என்னை உட்கார வைத்து, "நீங்கள் ஓய்வுபெறும்போது எல்லாம் முடிந்து விடும். மீண்டும் ஓடுவதற்கு மைதானத்துக்கு வரமாட்டேன் - ஓய்வு பெறத் தயாராக இருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்துங்கள் என்றார்.

ஆனால், ஓய்வுபெற்ற பின்னர், 2019இல் பயிற்றுவிப்பாளரிடம் சென்று ஒலிம்பிக்கில் பங்கேற்க விரும்புகிறேன் என்று தெரிவித்தேன். ஆனால், அவர் என்னை அந்த முயற்சி வேண்டாம் என்றார். அதனால், மீண்டும் வரவில்லை. ஆனால், மீண்டும் வரவேண்டும் என்ற ஆசை எனக்குள் அப்போது பிரகாசமாகியிருந்தது என்று கூறியுள்ளார்.

## சாதிப்பாரா ஜொகோவிச்

அமெரிக்க ஓப்பன் சுற்றின் இறுதியாட்டத்துக்கு முன்னேறியிருக்கிறார் பிரபல வீரரான ஜொகோ விச். நாளை திங்கட்கிழமை நடக்க வுள்ள இந்தப் போட்டியில் ஜொகோவிச் புதிதாக இரு சாதனை களை படைக்கக் காத்திருக்கிறார்.

ஒரே வருடத்தில் நான்கு கிராண்ட்ஸ்லம்கள், ஒலிம்பிக் தங்கம் என்ற ஜொகோவிச்சின் கோல்டன்ஸ்லம் கனவை ரோக்கியோ ஒலிம்பிக்ஸில் தகர்த்தார் ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ்.

இந்தநிலையில் அமெரிக்க ஓப்பன் அரையிறுதியில் ஸ்வெரேவை மீண்டும் எதிர்கொண்டார் ஜொகோவிச். மிகவும் பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 4-6, 6-2, 6-4, 4-6, 6-2 என வென்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார் ஜொகோவிச்.

இந்த வருடம் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன், பிரெஞ்சு ஓப்பன், விம்பிள்டன் ஆகிய மூன்று பட்டங்களையும் ஜொகோவிச் வென்றுள்ளார். தற்போது அமெரிக்க ஓப்பன் பட்டத்தையும் வென்றால் ஒரே வருடத்தில் நான்கு கிராண்ட் ஸ்லம் பட்டங்களை வென்ற வீரர் என்கிற பெருமையை அடைவார். இதற்கு முன்பு ஆண்கள் டென்னிஸில் 1969இல் ராட்



லேவர் ஒரு வருடத்தில் நான்கு கிராண்ட் ஸ்லம் பட்டங்களையும் வென்றுள்ளார்.

இதேபோன்று ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 21 கிராண்ட் ஸ்லம் பட்டங்களை வென்ற முதல் வீரர் என்ற மற்றொரு சாதனையையும் ஜொகோவிச் படைக்கவுள்ளார்.



இளம் வீராங்கனைகளான பிரிட்டனின் எம்மா ரடுசனு, லேலா பெரனாண்டஸ் இருவரில் ஒருவருக்கு அமெரிக்க ஓப்பன் டென்னிஸின் வெற்றிக் கிண்ணம் இன்று கிடைக்கும். வெறும் 18 வயதே ஆன, பிரிட்டனின் எம்மா முதன் முறையாக மிகப் பெரிய போட்டி ஒன்றின் இறுதிப் போட்டிக்கு நுழைந்துள்ளார். இதே போலவே 19 வயதான கனடாவின் லேலா பெர் னாண்டஸுக் கும் இது முதல் இறுதிப் போட்டிதான்.

1999ஆம் ஆண்டின் பின்னர் செரீனா வில்லியம்ஸ் மார்ட்டினா ஹிங்ஸ் ஆகியோர் முதன்முறையாக பதின்ம வயது வீராங்கனைகளாக அமெரிக்க ஓப்பன் டென்னிஸில் மோதினர். இப்போது சரியாக 23 ஆண்டுகள் கடக்கும் நிலையில் பதின்ம வயதே ஆன எம்மாவும், லேலாவும் இறுதி யாட்டத்தில் மோதுகின்றனர்.

பிரிட்டனை பொறுத்தவரை அந்த நாட்டை சேர்ந்த வீராங்கனை ஒருவர் கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பெரிய போட்டியில் ஆடுவது, கடந்த 44 ஆண்டுகளில் முதல்தடவையாகும். அத்துடன், 53 வருடங்களில் முதல் தடவையாக அமெரிக்க ஓப்ப னுக்கு முன்னேறியுள்ளார் இந்த பிரிட்டிஷ் வீராங்கனை.

அரையிறுதியில் அனுபவ வீராங்கனையான மரிய சக்கரியை இலகுவாக - 6-1, 6- 4 என்ற செற்களில் இலகுவாக வென்று இறுதியாட்டத்துக்கு நுழைந்துள் ளார் எம்மா.

பிரிட்டனை சேர்ந்தவராக எம்மா இருந்த போதிலும் இவர் கனடா நாட்டிலேயே பிறந்தி ருந்தார். இவரின் தந்தை ருமேனியாவை யும் தாய் சீனாவையும் சேர்ந்தவர்கள். இதுவரை எந்தப் போட்டிகளிலும் சம்பியன் பட்டத்தை பெறாத இந்த வீராங்கனையின் ஆட்டத்தால் பிரிட்டன் ரசிகர்கள் பெரும் உற்சாகம் அடைந்துள்ளார்கள்.!

இதேபோல், மற்றோர் அரையிறுதியில் முன்னணி வீராங்கனை சபலெங்காவை 7 -6, 6-4, 6-4 என்ற செற்களில் வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியிருந்தார் லேலா பெர்னாண்டஸ். இவரின் தந்தை பெர்னாண்டஸ் ஒரு தொழில்முறை உதைபந் தாட்ட வீரர் ஆவார். தாய் பிலிப்பைன்ஸ் வம்சத்தில் வந்த கனடிய பிரஜை என்பது குறிப்பிடத்தக்கது.



# பதின்மங்களின் போர்!

**செப்டம்பர் மாதம் பதினோராம் திகதி மகாகவி பாரதியாரின் நினைவு தினம். இந்த வருடம் அது நூறாவது நினைவு தினம்.**

**"முப்பத்தொன்பது ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்த அந்தக் கவிவேந்தர், தமிழ் மொழியும், தமிழ் இனமும் இவ்வுலகில் வாழும் வரை நிலைத்திருக்கக்கூடிய கவிதைகளை விதைத்துச் சென்றிருக்கிறார்.**

# பாட்டுக்கொரு புலவன் பாரதி

பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

தமிழ்கூறும் நல்லுலகம் எல்லாம் நன்றிக் கடனோடு கைகூப்பித் தொழுது அந்தக் கவியரசருக்கு அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

***பாட்டுக்கொரு புலவன் பாரதியடா அவன்
பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போயினேனடா அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா***

என்றெல்லாம் தன் பாட்டுத் திறத்தினால் இந்த உலகைப் பாலித்திட வந்துதித்த மகாகவி பாரதியாருக்குப் பாமாலை சூட்டினார்கள் புலவர் பெருமக்கள். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மைவாய்ந்த தமிழ் இலக்கியத்தின் வரலாற்றுப்பாதையில் மிகப் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

யேசு கிறீஸ்துவின் தோற்றம் உலக வரலாற்றைக் கிறீஸ்துவுக்கு முன் கிறீஸ்துவுக்குப் பின் என்று பகுத்திட வைத்தது. பாரதியின் தோற்றம் தமிழ் இலக்கிய வராலாற்றைப் பாரதிக்கு முன் பாரதிக்குப் பின் என்று வகுத்திட வைத்தது.

தமிழ் இலக்கியச் செல்வங்களைப் பாமர மக்களின் பார்வைக்குக்கூடக் கிட்டவிடாது புலவர்கள் கட்டிவைத்திருந்த பாரிய அணையை உடைத்து தமிழ் இலக்கிய வெள்ளத்தை பாமரர்களை நோக்கிப் பாயவிட்டவர் பாரதியார்.

அந்த முண்டாசுக் கவிஞர் வெறும் விடுதலைக் கோசங்களைக் கவிதையாக்கப் பிறந்தவரல்ல. பாரதி தமிழ் இலக்கியத்தை வளம்படுத்த வந்துதித்த தமிழன்னையின் தவப் புதல்வர்.

கவிதைகளையும் காப்பியங்களையும் ஆக்குகின்ற வல்லமை பெற்ற புலவர்களிடம் மட்டுமே கட்டுண்டு கிடந்த தமிழ் அன்னையின் விலங்கை உடைத்து அவளைத் தரணியெங்கும் உலாவரச்செய்த முதல்வர்.

தமிழின் சுவையைப் பாமர மக்களும் படித்துணரக்கூடியதாய் பாட்டெழுதிய புரட்சிக் கவிஞர்.

பாரதி தோன்றிய காலம் அந்நியருக்குப் பாரதநாடு அடிமைப்பட்டிருந்த காலம். வெள்ளைக்காரனால் பாரததேசத்தின் வளங்கள் கொள்ளையிடப்பட்டுக் கொண்டிருந்த நேரம். ஆதனால், தேசத்தின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணிக்கவேண்டிய காலத்தின் கட்டாயம் பாரதிக்கு இருந்தது. எந்த மனிதனுக்கும் விடுதலை வேட்கை இயல்பாக எழவேண்டுமென்றால் சொந்தநாட்டில் சுயநலமற்ற பற்று இருக்கவேண்டும். நாட்டு மக்களில் பாசம் இருக்கவேண்டும். பாரதிக்கு அவையெல்லாம் மிகவும் அதிகமாகவே இருந்தன. பாரதி பாரதநாட்டு மக்களை வெகுவாக நேசித்தார். பாரத நாட்டைத் தெய்வமாகவே பூசித்தார். உலகில் எந்த நாடுமே தன் சொந்த நாட்டுக்கு நிகரல்ல என்ற இறுமாப்பு அவருக்கு இருந்தது. அந்த அளவுக்கு அவர் இந்திய நாட்டைத் தன் சிந்தையிலே இருத்தி இன்புற்றார். அதனால் தான் "பாருக்குள்ளே நல்ல நாடு பாரதநாடு" என்று பெருமிதத்தோடு பாமாலை சூடினார்.

தமிழ் மொழியின்மீதும் தமிழ் நாட்டின்மீதும் பாரதிக்கு அளவுகடந்த பக்தி இருந்தது. ஆனால், அதற்குச் சற்றும் குறைவுபடாத வகையில் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிலும் பக்தி அவரது நெஞ்சிலே நிறைந்திருந்தது. காலத்தின் தேவை அதுவாக இருந்ததே அதற்குக் காரணமாக அமைந்தது. அடிமைப்பட்டுக்கிடந்த இந்தியாவின் அனைத்து இந்திய மொழி களையும் அவர் உயர்வாக மதித்தார். அனைத்து இனங்களையும் அவர் சமமாக நினைத்தார். அனைத்துப் பகுதிகளும் ஒன்றுபட உழைத்தார். அந்த நோக்கத்தை உணர்த்தும் கருத்துக்களைத் தன் பாடல் களிலே விதைத்தார். எத்தனை இனங்கள் இருந்தாலும் எல்லோரும் இந்தியரே, எத்தனை பூசல்கள் எழுந்தாலும் எல்லோரும் சொந்தங்களே என்று அவர் எண்ணினார்.

அதனால்தான், "ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அந்நியர் வந்து புகலென்ன நீதி" என்று அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போர்க்கொடி ஏந்தினார் பாரதியார்.

பாரதியாரின் இன்னுமொரு தோற்றம் அவரது சுதந்திரவேட்கை சுட்டெரிக்கும் அனலாகக் கொழுந்துவிட்டெரியும் சீற்றம். பலர் நினைப்பதைப்போல பாரதியார் வெறும் கவிஞர் மட்டுமல்ல. அவர் ஒரு பேரறிஞர். பன்மொழிப்புலவர். தமிழ் மொழியில் மட்டுமன்றி, ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலும் மிகுந்த பாண்டித்தியம் மிக்கவர் பாரதியார்.

பாரத தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தில் பாரதியாரின் பங்கு மகத்தானது. அவர், சுதேச மித்திரன் என்ற நாளிதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். இந்தியா என்றபெயரில் வாரப்பத்திரிகையொன்றை நடாத்தினார். பாலபாரதம், கர்மயோகி என்னும் ஆங்கிலப்பத்திரிகைகளிலும் எழுதினார். இந்திய சுதந்திரத்திற்காகப் பாரதியார் எழுதிய கட்டுரைகள் அந்தப் பத்திரிகைகளில் வெளிவந்தன. அவை மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. சுதந்திர தாகத்தை வளர்த்தன. பாரதியாரின் எழுத்து வெள்ளையரின் ஆட்சிக்குப் பயத்தைக்கொடுத்தது. அதனால் பாரதியாரின் பத்திரிகைமீது ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். பாரதியாரைக் கைதுசெய்வதற்குப் பிடியாணை பிறப்பித்தார்கள். பாரதியார் அஞ்சவில்லை. அச்சம் என்பதே அவரது அகராதியில் கிடையாது. ஆட்சியாரைப் பார்த்துச் சிரித்தார். தனது எழுத்துக்களால் பிருத்தானிய சாம்ராஜ்யமே கலங்குவதைக்கண்ட அவர் கலகலவென்று நகைத்தார். "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை" என்று பாடினார்.

பாரதியார் தமிழ்நாட்டில் தொடர்ந்து இருந்தால் நிச்சயமாக அவரைக் கைதுசெய்து சிறையிடுவார்கள். அது பாரதியாரின் உயிருக்கே ஆபத்தாக முடிந்துவிடும் என்று கவலையடைந்த பாரதியாரின் நண்பர்கள் அவரைப் புதுச்சேரிக்கு அனுப்பிவைத்தார்கள். பிரான்சிய ஆதிக்கத்தின் கீழ் இருந்த புதுச்சேரியில் தனது இந்தியா பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிட் டார். கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம் என்னும் இலக்கியக் கவிதைகளை இயற்றினார். இருந்தாலும் தமிழ் நாட்டிற்குச் செல்வதற்கே பாரதி யாரின் மனம் துடித்தது.

***"இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு
சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுந்து
அழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல் விளைந்தெனை
அழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத் தொழுதிடல்
மறக்கிலேனே! "***

என்று துடித்தெழுந்தார்.



சுதந்திரவேட்கை அவரது நெஞ்சைத் தகித்தது. அடிமைமோகத் தில் வீழ்ந்து கிடப்பவர்கள் மீள்வதெப்போது? இந்திய நாடு விடுதலைபெறு தெப்போது? மக்களின் துன்பங்கள் எல்லாம் மறைவ தெப்போது? என்ற சிந்தனைகளிலேயே பாரதியார் எப்போதும் மூழ்கியிருப் பார். கடவுளிடம்கூட நாட்டு விடுதலை யையே கேட்டு நிற்பார்.

"என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்
என்றுமடியும் எங்கள் அடிமையின் மோகம்" என்ற

தனது ஏக்கத்தைப் பாடலாக வடித்த பாரதியார்,

"பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ
பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ?" என்று

கலங்கினார்.

விடுதலைப் போராட்டமென்றால் சோதனைகள் நிறைந்திருக்கும். இழப்புக்கள் நிறைந்திருக்கும். இந்திய விடுதலைப்போரில் ஏற்பட்ட இழப்புக்கள் எழுத்தில் அடங்காதவை. பாரதியாரைப்போன்ற உணர்ச்சிமிக்க அறிஞர்களுக்கு உள்ளத்தில் ஏற்பட்ட வேதனைகள் சொல்லில் அடங்காதவை. ஆங்கில ஆட்சியாளர்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டார்கள். அறிஞர் களையும், தலைவர்களையும், தொண்டர்களையும் சிறையிலே அடைத்தார்கள். சித்திரவதை செய்தார்கள்.

மாபெரும் அறிஞரான கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம்பிள்ளை சிறையிலே செக்கிழுத்தார். சுப்பிரமணிய சிவா சிறையிலே தொழுநோய்க்கு ஆளானார். அரவிந்தர் துறவியானார். எத்தனையோ இளைஞர்கள் சிறைக்கூடங்களிலே சித்திரவதைக்கு ஆளானார்கள். ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்தார்கள். இத்தனை விலைகொடுத்து வளர்க்கப்பட்ட சுதந்திரப்போராட்டம் ஒரு காலகட்டத் தில் முடங்கிவிடுமோ என்ற கவலை பாரதியாரை வாட்டியது. என்னசெய்வதென்று தெரியாமல் அவரது திண்ணிய நெஞ்சம் வாடியது. இறைவனை நாடியது. கவியுள்ளம் பாடியது. பாரதத்தின் வரலாற்றில் சோதனை மிகுந்த பக்கங்களாகப் பொறிக்கப்பட்டுள்ள அந்த நிகழ்வுகளையெல்லாம் உணர்வுபூர்வமாகப் பாடிவர் பாரதியார் அவர்கள்.

"தண்ணீர்விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்ப யிரைக் கண்ணீரால் காத்தோம் கருகத்திருவுளமோ.."

என்று உள்ளம் உருகி இறைவனை இறைஞ்சினார்.

**(16 ஆம் பக்கம் பார்க்க....)**

# அந்நியன்

க. கலாமோகன் (பிரான்ஸ்)

திடுதிப்பென என்னை நான் ஓர் அந்நியனாகக் கருத வெளிக்கிட்டேன். எல்லோர் மனத்திலும் பயப்பீதி படிந்து கொண்டுதானா இதற்குக் காரணம்? சர்வதேசப் புரட்சி வேண்டாம் என்று துள்ளிக்குதித்த என் மனக் கோலங்கள் கலங்கிப்போயின. விசா உள்ளவர்களை யும் பிடித்து அனுப்புகின்றார்களாம் எனக் காதில் விழுந்தது. பாவம்! விசா இல்லாதவர்களினதும் அத்தோடு கள்ள வேலைசெய்பவர்களினதும் நிலை எப்படியிருக்கும்? மனம் ஒரு நிலையில் நிற்கவில்லை. சில தினங்களின் முன்னர் எனக்கு அந்நியோன்னியமானவையாகப் பட்டவை அனைத்தும் அந்நியமானவை யாகப்பட்டன. சுரங்க ரயில்கள், அதனூடு ஒட்டப்பட்டுள்ள விளம்பரப் போஸ்டர் கள், தூங்கியும் தூங்காதபடியும் பயணம் செய்கின்ற பலவித நிறங்கள், அங்கொன் றும் இங்கொன்றுமாகத் தேடியெடுத்த காதலிகள், ஆசையோடு வாங்கிய இலக் கியப் புத்தகங்கள், விருந்துண்ண விடுக் கப்பட்ட அழைப்பு கள், குடித்து மகிழ்ந்த பார்கள், ஆடி மகிழ்ந்த டிஸ்கோத்தெக் குகள், பார்த்து மகிழ்ந்த நாடகங்கள், கேட்டு மகிழ்ந்த இசை நிகழ்ச்சிகள், சந்தடி மிகுந்த சிறிய வீதிகள், நெடுஞ் சாலைகள், மலிவு விலையில் வயிறார உண்டு கழித்த அல் ஜீரியச் சாப்பாட்டுக் கடைகள், ரகசிய மாக உள்ளிட்டுத் தப்பிவந்த சிவப்பு வீதிகள்... இவைய னைத்தும் திடு திடுப்பென அந்நியமாகிப் போய் நானும் என்னை அந்நியனாக உணர்ந்து கொண்டேன்.

தேர்தல் (1993 மார்ச்சில் நடந்த தேர்தலே இங்கு குறிப்பிடப்படு கின்றது) நடந்த சில தினங்களினுள் பாரிஸினைப் பீதி கவ்வி விட்டது. யாரோ ஒருவரைத் தொடர்பு கொள்ள போன் பண்ணினால் யாரோ ஒருவர் என்னுடன் பேச வெளிக்கிட் டார்.

"அண்ணை நிபூஜியளையும் பிடிச் சனுப்புறாங்களாம். இது மெய்யே?"

"நான் அப்பிடி நினைக்கேல்லை. சிலவேளை அப்பிடி நடந்தாக்கூட ஆச்சரியப்பட ஒண்டுமில்லை. ஏனெண்டா, வெளிநாட்டுக்காறரைத் தாக்கிப் பேசித்தான் வலதுசாரியள் ஆட்சிக்கு வந்தவை"

"ஓம் அண்ணா, உந்த அல்ஜீரி யரும், ஆபிரிக்கரும் இஞ்சை படுமோசம். உவங்கள்தான் இங்கை களவு, கொள்ளை யளிலை நம்பர் வண். உவங் களைப் பிடிச்சு அனுப்பி னாத்தான் பிரான்ஸ் உருப்படும் பிற கேன், நிபூஜியளான எங்களையும் பிடிச்சு அனுப்பவேண்டும்?"

"எங்கடையாக்களும், இங்கு நிபூஜியா மாறினாப் பிறகு தூள்வித்துக் காட்டேல்லையோ? உம்மடை மரு மோன் மூண்டு வரிசத்துக்கு முன்னம் தூள் வித்து உப்பவும் உள்ளுக்கை இருக் கிறதை மறந்து போட்டீரோ?" எனக் கேட்க, "அவன் தூள் வித்தவனெண்டு உமக்கு எப்பிடித் தெரியும்?" என்றவாறு, ஒரு லெவல்தனத்துடன் போனைவைத் துக் கொண்டதை உணர்ந்து கொண் டேன்."

ஒவ்வொரும் தங்களுக்குச் சாதகமாக எதுவும் இருந்துவிட்டால் போதும் என்ற விதத்தில் நடந்துகொள்வதையும், மற்றவர்கள் எக்கேடு கெட்டுப் போனா லும் பரவாயில்லை என்ற போக்கிலேயே ஓடிக்கொண்டிருப்பதையும் அவதா னித்து நான் சலித் துப்போன தினங்கள் ஏராளம். தேர்தல் வரும்போது மட் டும்தான் பலருக்குத் தாம் தமது தேசத்தை விட்டு பிரிந்து அந்நிய தேசத்தில் வாழ்வதாக நினைவே வரும். மூன்று வருடங்களாக எந்தவித விசாவும் இல்லாமல் ஒழித்து வாழ்க்கை நடத்திய கானா நாட்டுச் சிநேகிதன் நினைவுக்கு வந்து போனான். அவன் களவு, அவன் குற்றம் செய்திருப்பான். அவனை நாட்டை விட்டுத் துரத்திவிட லாம் என்று எங்களவர் ஞானோபதேசம் செய்திடுவார்கள்.

முடிவில் அவனுக்கு ஒரு விசா கிடைத்துவிட்டது. அதுவும் கள்ளப்பெயரில். ஒரு தடவை அவனை வீதியில் கண்டு, பெயர் சொல்லி அழைத்தபோது, தனது பெயர் மாற்றப்பட்டு விட்டதாகவும், இனிமேல் தன்னைக் கண்டால் புதுப்பெயரால் அழைக்குமாறு கெஞ்சலுடன் வேண்டிக் கொண்டான்.

Saint Lazare விபச்சாரிகளும் ஒரு தடவை வந்துபோயினர். கானா தேசத்துக் கறுப்புச் சகோதரிகள், இளம் பெண்கள் "Come Brother" என அழைத்து விபச்சாரம் செய்யும் இயல்பினர். இவர்களுக்குள்தான் நான் அக்கூஷைச் சந்தித்தேன். எவ்வளவோ பேர் வரிசையிலே நின்று, தங்களது உடல் களை விற்கத் துடித்துக் கொண்டிருந்த போதும் இவள் மட்டுமே, இவளின் துருதுருத்த விழிகள் மட்டுமே என்னை ஒரு தடவை இழுத்து நிறுத்தின.

"என்னோடு வருகின்றாயா?"

மிகவும் அழகாக உடுத்தியிருந்தாள். அவளோடு பேசவேண்டும், எங்காவது உணவகத்திற்கு அழைத்துச் சென்று அவளின் கதையைக் கேட்கவேண்டும் என மனதுக்குள் ஓர் உந்தல் ஏற்பட்டது.

"Brother, Come". பிரெஞ்சு மொழி பேசாததால், புதிதாக வந்தவள் என நினைத்துக்கொண்டேன். அவளது விழிகளினுள்ளும் இரக்கம் இருந்ததா?

"உன்னோடு பேசத்தான் எனக்கு விருப்பம்."

அவள் தலையாட்டிச் சம்மதம் தெரிவித்த வேளையில், ஒருவன் வந்து அவளை அழைத்துச் சென்றான். வீதியின் மூலையில் அவள் வரும்வரை காத்திருந்த வேளையில் மனதுள் இரக்கம் கசியத்தொடங்கியது. சில நிமிடங்களில் அவள் திரும்பி வந்து, என்னிடம் மன்னிப்புக் கேட்டாள். பேசத் தொடங்கியபோது அவளும் என்னைப்போல அகதியென்பதையும், அந்த வீதியில் கியூவில் நிற்கின்ற அனைத்து கானா விபச்சாரிகளும் அகதிகளேயென்பதும் தெரியவந் தது. சிலநிமிடங்கள் வரை நாங்கள் பேசியிருப் போம்.

பொலீஸ் வான் ஒன்று வீதிக்குள் உள்ளிட்டதும் அனைத்துப் பெண்களும் ஓடி ஒளிந்தார்கள். இவளும்தான். என்னையும் சற்றே பயம் பிடித்தாட் டியதால் வீதியை விட்டு விலகி மூமுக்குச் சென்றுவிட்டேன். இரண்டு தினங்களின் பின்னர் அக்கூஷைத் தேடி Saint Lazare பகுதிக்குச் சென்று, தேடினேன். நீண்ட நேரம் காத்திருந்தும் அவளைக் காணவில்லை. எங்கேபோய்விட்டாள் அக்கூஷ்? ஒருத்தியிடம் சென்று பெய ரைச் சொல்லி அவளை விசா ரித்தேன்.

"சுகமில்லை, மூன்று நான்கு தினங்களின் பின்னர்தான் வருவாள்" எனச் சொல்லப்பட்டது. மீண்டும் தேடிப்போனேன். அவளைக் காணவில்லை. அவளைப் பற்றிய தகவல்களையும் பெறமுடியவில்லை. ஒருவேளை, அவளைப் பிடித்துக் கானாவிற்கு அனுப்பிவிட்டார்களோ? என்னுள் ஒரு நம்பிக்கைக் கீற்று. ஒவ்வொரு நகரங்களிலும் அவ ளைத் தேடுவது எனது இயல்பாகி விட்டது. Saint Lazare வீதியும் இப்போது வெறுமை யாகிவிட்டது.

அங்கே இப்போது அதிக விபச்சாரிகள் இல்லை. எல்லோரையும் பிடித்துக் கானாவிற்கு அனுப்பிவிட்டார்கள் போலும். என்னை நான் அந்நியனாக நினைத்துக்கொண்டு எனக்குப் பழக்கமான அந்த அல்ஜீரிய Barஇற்குள் நுழைந்தேன்.

வீடியோ கேம் ஒன்றில் வியட்நாமி யரைச் சுட்டு மகிழ்ந்து கொண்டிருந் தனர் சில பிரெஞ்சு இளைஞர்கள். உலகில் சாந்தியும் சமாதானமும் தழைத் தோங்குவதற்கான நல்ல பயிற்சிதான்? இறப்பவர்கள் எப் போதுமே வியட் நாமியராகத்தான் இருந்தனர். அவர்கள் இறந்து போகும் வண்ணம்தான் Game தயாரிக்கப்பட்டி ருந்தது. என்னால் எனது மனதினை ஒரு நிலைக்கு கொண்டு வர முடியாதிருந்தது. இன்னொரு ஆப்பிரிக்கச் சிநேகிதி அனுப்பின கடிதத்தை எடுத்து மீளவும் வாசித்தேன். சில வரிகளிலிருந்து என்னை அவள் விரும்புவது போலப்பட்டது. விருப்பங்கள் அநித்தியமானவை என எனக்கு அடிக்கடி பட்டாலும் விரும்பாமலிருக்க முடிவதில்லை. ஒரு பியரை வாங்கி குடித்தேன். "உனது பதிலை மிகவும் விரைவாக எதிர்பார்க்கின்றேன்" என்று எழுதியிருந்ததற்கு அருகில் ஒரு மலரி னைக் கீறியிருந்தாள். பிரான்ஸினை விட்டுத் தப்பியோடி, அவளது கறுப்பு நிலத்தில் வாழ்ந்தாலென்ன என்ற ஒரு எண்ணம் மேலெழுந்தது. அங்கு மட்டும் நிம்மதி கிடைத்துவிடுமா? எங்குமே நாம் கண்காணிக்கப்படுகின்றோம். Barஇல் படுத்துக் கிடந்த நாய் குரைத் தது. முதலாளி குரைத்தவுடன் அது அடங்கிவிட்டது.

நான் மீண்டும் குடித் தேன். இதுவும் ஒரு வகை யில் தப்பியோடுவதற் காகத்தான்.

ஜாக்குலின் வந்து கன்னத்தில் முத்தமிட்டு என்முன் அமர்ந்தாள். அவளுக்கு என்னுடன் பேசுவதன்றால் பெரு விருப்பம். அவள் பிரெஞ்சுக்காரி. சில காலங்கள் சர்வதேசப் புரட்சிக்காகப் போராடிவிட்டு இப்போது, ஒரு தறி கெட்ட வாழ்க்கை நடத்துகின்றாள். குடிக்க வெளிக்கிட்டால்.

Barபூட்டப்படும்போதும் அது நிற்காது. சில வேலைகளில் டீபச முதலாளியுடன் சண்டையும் வேறு பிடிப்பாள். லெபனான்காரன் ஒருவனை மணம் புரிந்து, மூன்று பிள்ளைகளும் பெற்றபின்னர் இப்போது பிரிந்துள் ளாள். அவன் அங்கே, இவள் இங்கு பிள்ளைகளுடன்.

"சர்வதேசப் புரட்சி பேசிய உனது தோழர்கள் எங்கேபோய்விட்டார்கள்? வலதுசாரி அரசாங்கம் வெளிநாட்டவர் களை வேட்டையாட வெளிக்கிட்டுள் ளது என்பது உனக்குத் தெரியுமா?" நான் கேட்டேன்.

"உலகப் பாட்டாளிகள் ஓரணியில் திரளவேண்டும். அவர்கள் திரளுவார் கள். அப்போது உலகப் புரட்சி நடக் கும்..." என்றாள்.

"இங்கேவெளிநாட்டவர்களைத் துரத்துகின்றார்கள். இங்கேயுள்ள பாட்டாளிகளை ஒன்று திரட்டி, இந்த மனித வேட்டையை முதலில் நிறுத்த லாமே?" என நான் கேட்டேன்.

"கம்யூனிஸக் கட்சி பல பிழைகளை விட்டுவிட்டது. அதனைத் திருத்திவி டுக்க முடியாது. எல்லோரையும் நான்காம் அகிலத்தில் சேர்க்கவேண் டும்." என்றாள்.

ஜாக்குலின் நல்லவள். உலகப் பாட்டாளிகள் அனைவரையும் நான்காம் அகிலத்துக்குள் சேர்த்தபின்பு தான் அவளால் சில சமூக யதார்த்தங்களைப் பற்றிக் கூடச் சிந்திக்கமுடியும்.

"ட்ரொட்ஸ்கியுடன் நான்காம் அகிலமும் செத்துவிட்டது."

"இல்லை நாங்கள் அவரது இலட்சியத்துக்காகப் போராடிக் கொண்டுள்ளோம்"

"நாங்கள் என்கின்றாயே, உங்களில் எவ்வளவு பேர் உள்ளனர்."

"18 - 20 பேர்"


"சர்வதேசப் புரட்சி நடத்த உந்தத் தொகை சற்றே அதிகமாகிவிட்டது" என நான் சொன்னதும் அவள் கோபத்துடன் என்னை விட்டு அகன்றாள். நான் மீண்டும் சில பியர்களைக் குடித்துவிட்டு ரூம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வழியில் கனகலிங்கத்தைக் கண்டேன். அவன் பிரான்ஸ் வந்து 10 வருடம். வந்த நாளிலிருந்து அவனது கனவு யாராவது ஒரு பிரெஞ்சுக் குடும்பம் தன்னைத் தத்தெடுக்க வேண்டுமென்பதுதான். கனவு எப்படியோ பலித்துவிட்டது.

மூன்று வருடத்துள் பிரெஞ்சுக்கார னாகிவிட்டான். ஆம், பிரெஞ்சு நாஷ னலிற்றி. எவரையும் அலட்சியமாகவே பார்ப்பான். தமிழர் பேசும் பிரெஞ்சு அக்சென்ரை நக்கலடிப்பான். போராட்டத்தை விமர்சிக்காது விட்டாலும், போராட்டத்துக்காக உண்டியல் குலுக்குவோரைக் கண்டால் ஓடி ஒளிந்துவிடுவான்.

"என்ன, நிபூஜியளின்ரை விசா வுக்கு பிரச்சனை வருமாமெண்டு கேள்விப்பட்டேன்" எனத் தொடங்கினேன்.

"எனக்குப் பிரச்சனையில்லை..."

(16 ஆம் பக்கம் பார்க்க)



(14 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

# பாட்டுக்கொரு புலவன் பாரதி

பாரதியார் மிகவும் நேர்மையானவர். உள்ளத் தூய்மையானவர். கள்ளங்கபட மாகப் பேசாதவர். எதையும் எவரிடமும் நேருக்கு நேர் நின்று பேசும் துணிவு மிக்கவர். அதனால் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ற கள்ள மனம் கொண்டோரை அவர் வெறுத் தார். அதிலும், விடுதலை வேட்கை கொண்டவர்கள் போல வெளியிலே காட்டிக்கொண்டு, வெள்ளையருக்கு வால்பிடிக்கும் நடிப்புச் சுதேசிகள் நாட்டில் மலிந்துவிட்டதை அறிந்து வேதனைப்பட்டார்.

***நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத் திறமும் இன்றி***
***வஞ்சனை செய்வாரடி கிளியே வாய்ச்***
***சொல்லில் வீரரடி***

***மானம் சிறிதென்றெண்ணி வாழ்வு***
***பெரிதென்றெண்ணும்***
***ஈனர்க்கு உலகந்தன்னில் கிளியே, இருக்க***
***நிலைமையுண்டோ?***

***சிந்தையில் கள் விரும்பி சிவசிவ என்பதுபோல்***
***வந்தே மாதரமென்பார் கிளியே, மனதில்***
***அதனைக் கொள்ளார்.***

என்றெல்லாம் மனம்நொந்து கவலைப்பட்டார் பாரதியார்.

மூட நம்பிக்கைகளில் மூழ்கிக்கொண்டு, முன்னேறாமல் முடங்கிக்கிடக்கின்ற மனிதர்களை நினைத்து உள்ளம் துடித்தவர் பாரதியார். மந்திரம், மாயம், பேய், பிசாசு என்றெல்லாம் மனிதர்கள் பயந்துகொண்ட வாழ்வதை எண்ணி நெஞ்சுபொறுக்க முடியாமல் வாடினார். மூட நம்பிக்கைகளைச் சாடினார். முத்தான கவிதைகளைப் பாடினார்.

***எண்ணிலா நோயுடையார் - இவர்,***
***எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்***
***கண்ணிலாக் குழந்தைகள்போல் -பிறர்,***
***காட்டிய வழியில் சென்று மாட்டிக்கொள்வார்***
***நண்ணிய பெருங்கலைகள் - பத்து,***
***நாலாயிரங்கோடி நயந்துநின்ற***
***புண்ணிய நாட்டினிலே - இவர்,***
***பொறியற்ற விலங்குகள் போலவாழ்வார்***

என்று நெஞ்சம் குமுறிப் பாடியவர் பாரதியார்.

இந்தியாவின் இயற்கை அழகு அவரின் நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டது. எல்லோரும் அந்த அழகினைப் பருகி ஆனந்தமாக வாழவேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார்.

அதனால்தான், சேரநந்நாட்டுப் பெண்களை அவர் இரசித்தார். அவர்களோடு சுந்தரத்தெலுங்கினில் பாட்டிசைக்க நினைத்தார். சிங்க மராட்டியர்களின் கவிதைகளிலே இலயித்தார். வங்கத்தில் ஓடிவரும் நீரைக்கொண்டு மையத்து நாடெல்லாம் பயிர் செய்வொமென்று இசைத்தார்.

இயற்கை அழகிலே தன் நெஞ்சைப் பறிகொடுத்து இரசித்து நிற்பதோடு பாரதிக்குத் திருப்தி ஏற்படவில்லை. அந்த இயற்கை வனப்பையும், வனப்பின் வளத்தையும் மென்மேலும் சீர்படுத்தி உலகுக்குப் பயன்படுத்த உன்னுகின்ற உயர்ந்த உள்ளம் அவருக்கு இருந்தது. வளம்மிக்க எதிர்கால இந்தியாவை மனதிற்குள் கற்பனை செய்தவர் பாரதியார்.

தொழில்கள் பெருகவேண்டும், தொழிற்சாலைகள் உருவாகவேண்டும், பயிர் வளம் பெருகவேண்டும், பஞ்சம் அகலவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்.

“வெள்ளிப்பனிமலையின் மீதுலாவுவோம் அடி மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்” என்றும், “ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்” என்றும் பாடிய பாரதி அத்தோடு நிறைவடைந்துவிடவில்லை.

புறக்கும் விமானங்கள் செய்வோம், உலகைக் கலக்கும் கப்பல்கள் செய்வோம் என்றும் பாடினார். ஆம்! “ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்” என்பது பாரதி பாடிய வரிகள். உலகையே நடுங்க வைக்கக்கூடிய கப்பல்களைச் செய்வோம் என்று அவர் சூழுரைத்தார். ஏனென்றால், எதிர்கால இந்தியாவை ஒரு வல்லரசாக வளர்த்தெடுக்கவேண்டும் என்ற சிந்தனை பாரதிக்கு அன்றே இருந்திருக்கிறது. அன்றைய பாரதியின் சிந்தனைதான் பின்னாளில் பாரதத்தின் செயற்பாடாக எழுந்தது.

இந்திய நாட்டில் வாழும் எல்லா இனத்தவரையும் தன் சொந்தச் சகோதரர்களாகவே பாரதியார் நினைத்தார். வெறும் நினைப்பில் மட்டுமல்ல. தனது உள்ளார்ந்த உணர்விலும் அவர் அப்படித்தான் இருந்தார்.

***எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம்***
***எல்லோரும் இந்திய மக்கள்***
***எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் விலை***
***எல்லோரும் இந்நாட்டு மன்னர் - நாம்***
***எல்லோரும் இந்நாட்டு மன்னர் - ஆம்***
***எல்லோரும் இந்நாட்டு மன்னர்***

என்று பாடி, மூன்று சொற்களிலேயே ஜனநாயகம் என்பதற்கான முழுமையான வரைவிக்கணத்தைக் கூறினார் பாரதியார். ஆம்! எல்லோரும் இந்நாட்டு மன்னர். அதுதானே ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடு.

***கனியும் கிழங்கும் தானியங்களும்,***
***கணக்கின்றித் தருகின்ற நாட்டில்***
***தனியொருவனுக்கு உணவில்லையெனில்***
***ஜகத்தினை அழித்திடுவோம் என்று,***
***இனியொரு விதிசெய்வோம் அதை, எந்த நாளும்***
***காப்போம் என்று ஓங்கிக் குரல் கொடுத்தார்.***

ஆம்! பாரதியார் பாரத நாட்டிலே தீராத பக்தி கொண்டவர்

பாரத மக்களிடத்தில் மாறாத பாசம் கொண்டவர்.

எல்லா உயிர்களிடத்திலும் இயல்பிற்கும் மீறிய நேசம் கொண்டவர்.

மகாகவி பாரதியார் ஒரு சுதந்திரப்போராட்ட வீரர் என்பதும், சமுதாய சீர்திருத்தவாதி என்பதும், தமிழ் அறிஞர் என்பதும், எதற்கும் தலைவணங்காத தன்மானத் தமிழர் என்பதும் எந்தளவுக்கு உண்மையோ அந்த அளவிற்கு அவர் ஒர் இறைபக்தர் என்பதும் உண்மையாகும். காளியைத் தனது தெய்வமாக வழிபட்டவர். காளியோடு நேருக்கு நேர்நின்று பேசுவது போல, வாதிடுவதுபோல அவரது வணக்கமுறை அமைந்திருந்தது. அதேவேளை விநாயகக் கடவுளை வேண்டியும் அவர் பாடல்களைப் பாடியுள்ளார். விநாயகர் நான்மணிமாலை என்று வெண்பாவிலும், கலிப்பாவிலும், விருத்தப்பாவிலும், அகவல்பாவிலும் அழகிய பக்திப்பாடல்களை அவர் இயற்றியுள்ளார்.

பாரதியார் வறுமையால் மிகவும் வாடியவர். தனது குடும்பத்தைச் சரியாகப் பராமரிக்க முடியவில்லையே என்ற கவலை அவருக்கு இருந்தது. ஆனால் வெறும் குடும்ப பாரத்தைச் சுமப்பதற்காக தான் பிறப்பெடுக்கவில்லை என்பதில் அசைக்க முடியாத உறுதி அவருக்கு இருந்தது. இந்த உலகிற்காகத் தான் சாதிக்கவேண்டியவை எவ்வளவோ இருப்பதாக அவர் கர்வப்பட்டார். அது வெறும் கர்வம் மட்டுமல்ல. பொறுப்புணர்ச்சியோடு கூடிய அக்கறையும் அந்தக்கர்வத்தில் நிறைந்திருந்தது. அதனால்தால் பாரதியார் அதிகநாள் வாழ விரும்பினார். தனக்கு நூறுவயதுவரை ஆயுள்தருமாறு இறைவனை வேண்டினார். வறுமையில் வாடுவது தனது சாதனைகளுக்குத் தடையாக உள்ளது என்ற வேதனைப் பட்டார். அதனால் செல்வம் வேண்டும் என்றும் இறைவனை வேண்டினார்.

எனக்கு வேண்டும் வரங்களை இசைப்பேன் கேளாய் கணபதி என்று தொடங்கும் விருத்தத்தின் இறுதியில் கனக்குஞ் செல்வம், நூறு வயது இவையும் நீ தரக்கடவாயே என்று வேண்டுகின்றார்.

முருகக் கடவுளிடமும் மாறாத பக்தி கொண்டவர் பாரதியார். முருகா முருகா என்றும் வேலவா என்றும் அழைத்து அவர் பாடியுள்ள கவிதைகளைப் படிக்கும் போதும், கேட்கும்போதும் உள்ளம் உருகிநிற்கும்.

“தோகைமேல் உலவும் கந்தன் சுடர்க்கரத்திருக்கும் வெற்றி வாகையே சுமக்கும் வேலை வணங்குவது எமக்கு வேலை” என்று பாடியவரும் பாரதியாரே. முருகப்பெருமானின் அருட்செயல்களையும், ஆறுமுகங்களின் அழகினையும், வள்ளியை மணம்புரிந்த கதையினையும் தனக்கேயுரிய தனித்துவச் சிறப்புடன் பாரதியார் தந்திருக்கும் பாடல் அவர் முருகன்மேல் வைத்திருந்த பக்தியை நன்கு புலப்படுத்துகின்றது. அத்துடன் இந்தப் பாடலில், சொல்லினைத் தேனில் குழைத்து உரைக்கின்ற வள்ளி என்று வள்ளியின்யின் பேச்சு இனிமையையும், பல்லினைக்காட்டி வெண் முத்தைப் பழித்திடும் வள்ளி என்று வள்ளியின் பற்களின் வெண்மை அழகையும் இலக்கியச்சுவையோடு பாடி முருகனை இறைஞ்சுகின்றமை பாரதியார் முருகபக் தியில் மிகவும் ஈடுபாட்டுடன் இணைந்திருந்தமையை எடுத்துக்காட்டுகின்றது

முருகப்பெருமானைக் காதலனாகவும் தன்னை அவனது காதலியாகவும் கற்பித்து அந்தக் காதலனிடம் கிளியைத் தூது அனுப்புவதாகப் பாரதியார் பாடிய பாடல் இசையுகில் மிகவும் பிரசித்தமானது. இறைபத்தியில் தம்மை இறுக்கமாகப் பிணைத்துக்கொண்ட அடியார்கள் இறைவன்மேல் தாம் கொண்ட பக்தியின் வெளிப்பாட்டினைக் காதலாகக் கற்பிப்பதும் அந்தக் காதலுக்காக உருகுவதும் இயற்கை. பக்தியின் உச்ச நிலையை அது காட்டுகின்றது. சமயகுரவர்கள், ஆண்டாள் முதலியோரிடமும் இத்தகைய உச்சநிலையின் வெளிப்பாட்டினைக் காண்கின்றோம். பாரதியாரும் அத்தகைய நிலையில், இறைபக்தியில் தன்னை மறந்து இன்புற்றிருக்கின்றார்.

முப்பத்தொன்பது ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்த அந்தக் கவிவேந்தர், தமிழ் மொழியும், தமிழ் இனமும் இவ்வுலகில் வாழும் வரை நிலைத்திருக்கக் கூடிய கவிதைகளை விதைத்துச் சென்றிருக்கிறார். ■

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

# அந்நியன்

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

“அது எனக்குத் தெரியும்.. ஏனெண்டா உமக்கு நாஷனலிற்றி... நாஷனலிற்றிக்குப் பிரச்சனை... வராது...”

“எனக்கெண்டா விசர் விசராக் கிடக்குது.”

“ஏன்?”

“எங்கடை சனம் கொஞ்சத்துக்கு வட்டிக்குக் குடுத்தனான். அதுகளைத் திருப்பி அனுப்பினா எல்லாம் நாறின மாதிரித்தான் இருக்கும்...”

கனகலிங்கத்தின் கவலை எனக்குள் இரக்கத்தையேற்படுத்தவில்லை. அவனை விட்டுப் பிரிந்து வந்தவேளையில், மூன்று நான்கு அடிதடிப் பொலிஸார் ஒரு பயங்கரவாதியைப் பிடிப்பதுபோல என்னைச் சுற்றி வளைத்தனர்.

“விசா?”

காட்டினேன்.

“இது உனது முகமா?”

“ஏன், இது எனது முகம்போல படவில்லையா?”

“வாயை மூடு.”

துருதுருப்பாகப் பரிசோதித்தனர். என்னைத் தமது பொலீஸ் வாகனத்துள் கொண்டு சென்று தலைமைப் பொலீஸ் நிலையத்துடன் தொடர்புகொண்டு, தேடப்படுவோர் பட்டியலில் எனது பெயர் இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்துவிட்டு, “சரி போகலாம்” என்றனர். ரூம் வந்தேன். வானொலியைத் திறந்தேன். மூன்று அந்நியர்கள் கொல்லப்பட்டுவிட்டனர் எனச் சொல்லப்பட்டது. ஒரு சிகரட்டைப் பற்றியபடி படுக்கையில் சரிந்தேன். போன் அலறியது.

“பல தடவைகள் உனக்கு அடித்தேன். எங்கே போயிருந்தாய். இன்று மாலை இருவரும் சந்திப்பதாக இருந்ததை மறந்துவிட்டாயா?”

“பிரெஞ்சு சிநேகிதி கேட்டாள்”

“உண்மை, மறந்து போய் விட்டேன்.”

“நான் வீட்டிலுள்ளேன். வருகின்றாயா?”

“நான் தூங்கப் போகின்றேன்.”

“இங்கு வந்து தூங்கலாம்தானே?”

“அது எனக்குத் தெரியும். இன்று நான் எனது ரூமில் தூங்க விரும்புகின்றேன்.”

“உனக்கு என்ன நடந்தது?” அவள் பதைபதைத்தாள்.

“நாளை பேசுவோம்” என்றபடி போனைவைத்தேன்.

என் மனக்கண்முன் இரண்டாம் உலகயுத்தத்தின்போது நடந்த மனித வேட்டை படமாக ஆடியது.

# 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் வினாத்தாள் ஆசிரியர் : கே.பாலகஜன்
கணக்கீடு - I நேரம் : 2 மணித்தியாலங்கள்

கல்வி tv CHANNEL

**16)** 31.03.2021 முடிவடைந்த காலப்பகுதிக்கான தேறிய இலாபம்

1. ரூபா.2080000
2. ரூபா.2180000
3. ரூபா.2480000
4. ரூபா.2400000
5. ரூபா.1440000

(............)

**17) மூலதன மீதிகளுக்கு வருடாந்தம் 10% வட்டி செலுத்தப்படுமாயின் 31.03.2021 இல் பங்குடமையின் மொத்த உரிமையாண்மை**

1. ரூபா.2180000
2. ரூபா.2820000
3. ரூபா.8080000
4. ரூபா.8580000
5. ரூபா.5080000

(............)

**18) LKAS 08 (கணக்கீட்டுக்கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள்** மற்றும் **வழுக்கள்)** இன் படி **கணக்கீட்டுக் கொள்கை மாற்றமொன்றாகக் கருதக் கூடியவையில் எது/எவை சரியானது/சரியானவை?**

A - ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் ஆயுட்காலத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள்

B - இருப்புக்களின் கிரயத்தினை FIFO முறையில் இருந்து WAC முறைக்கு மாற்றுகின்றமை.

C - வியாபார வருமதிகளின் மீது எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிகளில் ஏற்படும் அதிகரிப்பு

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. A, B ஆகியன மாத்திரம்
4. B, C ஆகியன மாத்திரம் 5. A, B, C ஆகியன எல்லாம்

(............)

**19) பின்வரும் தகவல்கள் கம்சியா PLC இன் இயந்திரம் கொள்வனவு தொடர்பாக ஏற்பட்ட கிரயங்களினை** உள்ளடக்கியதாகும்.

**இந்நிறுவனம் பெறுமதி சேர்வரிக்காகப் (VAT) பதிவு செய்யப்பட்ட வணிகமாகும்.**

| | ரூபா |
|---|---|
| **VAT உட்பட** செலுத்திய விலை | 972000 |
| கொண்டு வருவதற்கான போக்குவரத்துச்செலவீனம் | 60000 |
| நிர்மாணிப்புக்கிரயம் | 80000 |
| ஆரம்ப பரிசோதனைக்கிரயம் | 40000 |
| தொழிற்சாலை ஆரம்ப விழாச்செலவீனம் | 60000 |
| எஞ்சிய பெறுமதி | 50000 |

**ஆரம்ப பரிசோதனையின்** போது உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் ரூபா.30000 இற்கு **விற்பனை செய்யப்பட்டது.**
LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்)இன் படி **ஆரம்ப இனங்காணலின் போது இயந்திரத்தின் கிரயம், மற்றும் ஆரம்பத்தில் பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய பெறுமதி**

1. ரூபா.950000, ரூபா.1050000
2. ரூபா.1100000, ரூபா.950000
3. ரூபா.1050000, ரூபா.1000000
4. ரூபா.1130000, ரூபா.1020000
5. ரூபா.1172000, ரூபா.1030000

(............)

**20) LKAS 02** (இருப்புக்கள்) இற்கமைய கம்பனி சரக்கிருப்பை **உருப்படி** அடிப்படையில் பெறுமதியிடுகின்றது. **2021.03.31** இல் சரக்கிருப்பானது மூன்று வகையான **கையடக்கத்தொலைபேசி** உருப்படிகளைக் கொண்டுள்ளது. இத்தினத்தில் அவற்றின் **கிரயம்** மற்றும் **தேறிய தேறக்கூடிய நிகரப் பெறுமதி** ஆகியன பின்வருமாறு காணப்பட்டது.

| **வகை** | **இருப்பின் கிரயம் (ரூபா000)** | **தேறிய தேறக்கூடிய நிகரப் பெறுமதி (ரூபா000)** |
|---|---|---|
| Nokia | 900 | 960 |
| iphone | 720 | 600 |
| Samsung | 580 | 500 |

Nokia இருப்புக்களினை 2021.05.10 இல் ரூபா.860000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. (கம்பனியின் இயக்குனர்கள் 2021.05.15 இல் நிதிக்கூற்றுக்களுக்கு அதிகாரம் அளித்திருந்தனர்)
31.03.2021 இல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் இருப்பின் கிரயம், இருப்பின் கொண்டு செல்லும் பெறுமதி முறையே

1. ரூபா.2200000 , ரூபா.1960000
2. ரூபா.1960000 , ரூபா.1960000
3. ரூபா.2200000 , ரூபா.2060000
4. ரூபா.2200000 , ரூபா.2060000
5. ரூபா.2060000 , ரூபா.1960000

(............)

**21) வரையறுக்கப்பட்ட யுகிர்தன்** பொதுக்கம்பனி **2021.03.31** இல் முடிவடைந்த **காலப்பகுதிக்கான** நிதிக்கூற்றுக்களில் கம்பனியொன்றின் இயக்குனர்கள் **2021.06.30** இல் கையொப்பம் இட்டனர். நிதிக்கூற்றுக்கள் **15.07.2021** இல் இடம்பெற்ற **வருடாந்த பொதுக்கூட்டத்தில்** பங்குதாரர்களினால் **அங்கீகரிக்கப்பட்டது.** கம்பனியில் பின்வரும் நிகழ்வுகள் **31.03.2021** இற்கும் **30.06.2021** இற்கும் இடையே இடம்பெற்றுள்ளன.

A - **15.06.2021** இல் வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட இருப்புக்களின் சேதார இழப்பு ரூபா.50000

B - **2020 இல்** வேலையை விட்டு நீக்கிய ஊழியர் ஒருவரினால் கம்பனிக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் **26.08.2021** இற்கு முன் ரூபா.400000 இழப்பீடு வழங்க வேண்டுமென **20.06.2021** இல் தீர்ப்பு வழங்கப்பட்டது.

C - **31.03.2021** இல் இருப்பாகக் காணப்பட்ட ரூபா.40000 கிரயமான இருப்புக்கள் **15.06.2021** இல் ரூபா.36000 இற்கு **விற்பனை செய்யப்பட்டது.**

# நிவாரணம் வழங்காவிடின் ஊரடங்கு நீங்கியதும் பஸ்ஸை இயக்கமாட்டோம்

*தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை*

**கொழும்பு, செப். 12**

**“தனியார் பஸ் ஊழியர்களுக்கு அரசு உடனடியாக நிவாரணம் வழங்காவிட்டால், நாட்டில் தற்போது அமுலில் உள்ள ஊரடங்கு நீக்கப்பட்டாலும் பஸ்களை இயக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது.”**



- இவ்வாறு இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன ஊடகங்களிடம் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் காரணமாக பஸ்கள் இயக்கப்படாததால், சுமார் 50 ஆயிரம் பஸ் ஊழியர்களும், 11 ஆயிரம் பஸ் உரிமையாளர்களும் எந்த வருமானமும் இன்றி மிகவும் மோசமான நிலைகுத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்விளைவாக, அவர்களின் குடும்பத்தினர் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, அரசு இது குறித்து கவனம் செலுத்தி பஸ் ஊழியர்களுக்கு நிவாரணப் பொதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லையேல் ஊரடங்கு நீங்கிய பின்னர் பஸ்கள் இயங்காது என்றும் அவர் மேலும் கூறினார்.(இ)

# நான்கு கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் மூவர் சிக்கினர்



கொழும்பு, செப். 12

களனி மற்றும் கிரிபத்கொடை ஆகிய பிரதேசங்களில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில், நான்கு கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கிரிபத்கொட, களனிய, கடுவலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 262 கேரள கஞ்சாவும், கேரள கஞ்சா விற்பனையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 10 இலட்சம் ரூபா பணத்தையும் விசேட அதிரடிப் படையினர் இதன்போது கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் கெப் ரக வாகனத்தில் கேரள கஞ்சாவுடன் பயணித்த நிலையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்கேக நபர்கள் விசாரணைகளின் பின்னர் போதைப்பொருள் கடத்தல், விற்பனை செய்தல் மற்றும் உதவி புரிந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (இ)

## தமிழகத்தின்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் இருக்கிற அதே இனிமையோடு ஆளுநரும் அவரை எதிர்கொள்வார் என்று எதிர்பார்க்க லாம். தெற்கில் பாக் சலசந்தி அருகே நெருங்கிக் கொண்டிருக்கும் சீனாவின் நிழலால், வரும் காலங்களில் வரப்போகும் சவால்களை சமாளிக்கவே முன்னாள் உளவுத்துறையின் மூத்த அதிகாரியை டெல்லி அனுப்பி யிருக்கிறது என்றும் ஒரு வலுவான எண்ணம் எழுகிறது.

இந்த உரையாடலை முடிப்பதற்கு முன்பு, கோலி வூட்டும் தமிழ்நாட்டின் அரசியலும் கலந்த மிக சுவா ரஸ்யமான நிகழ்வு ஒன்றையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அண்ணாதுரை காலத்திலிருந்தே சினிமாவுடன் தமிழ்நாட்டு அரசியலும் இணைந்தே இருக்கிறது என்பதால் இது புதிதல்ல.

ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக்கொண்ட ‘தலைவி’ திரைப்படம் வெள்ளிக்கிழமை வெளியானது. ஜெயலலிதாவின் வேடத்தில் நடிகை கங்கணா ரணாவத் சிறப்பாக நடித்திருந்தார். காலை 11 மணிக்கு இந்தத் திரைப்படத்தைப் பார்க்கப்போவதாகவும், படத்தைப் பார்த்துவிட்டு அதுபற்றிய தன் கருத்துக்களைப் பத்திரிகையாளர்களிடம் தெரிவிப்பதாகவும் முன்னாள் அஇஅதிமுக அமைச்சர் டி. ஜெயக்குமார் ஒரு ‘ட்வீட்’டில் அறிவித்திருந்தார். செய்தியாளர்களிடம் அவர் பேசியது அஇஅதிமுகவின் செய்தித் தொலைக்காட்சியான ‘நியூஸ் ஜே’-யில் விரிவாக ஒளிபரப்பப்பட்டது. “மிக பிரம்மாண்டமாக இருந்தது. பல சந்தர்ப்பங்களில் அம்மாவின் அறிவு வெளிப்பட்ட காட்சிகளை நாங்கள் நல்ல விஷயமாக எடுத்துக்கொள்கிறோம். உதாரணமாக, பார்லிமெண்ட்டில் அம்மாவின் சிறப்பான உரையின்போது அனைவரும் கைதட்டிய காட்சி” என்று படத்தைப் பாராட்டிவிட்டு, பல குறைகளையும் முன்வைத்தார்.

எம்.ஜி.ஆரால் கிடைத்த வெற்றிக்காக அறிஞர் அண்ணா அவருக்கு ஒரு மந்திரிப் பதவியைக் கொடுக்க நினைத்தபோது எம்.ஜி.ஆர் மறுத்துவிட்டார். எம்.ஜி.ஆருக்காகவே சிறுசேமிப்புத் துணைத் தலைவர் என்ற அமைச்சரவை அந்தஸ்துக்கு நிகரான பதவியைப் பேரறிஞர் அண்ணா உருவாக்கினார். தலைவர் என்றைக்கும் மந்திரி பதவி கேட்டு அடம்பிடிக்கவில்லை. இது, அண்ணாவாகக் கொடுத்த பதவி. அண்ணா மறைவுக்குப் பிறகு கருணாநிதியை முதல்வராக்கியதே எம்.ஜி.ஆர்தான். ஆனால், இந்தப் படத்தில் கருணாநிதியிடம் எம்.ஜி.ஆர் அமைச்சர் பதவி கேட்டதுபோலவும், கருணாநிதி மறுத்ததால் எம்.ஜி.ஆர் கோபப்பட்டு திமுகவை உடைத்து அதிமுகவை உருவாக்கியதுபோலவும் காட்டுகிறார்கள். ஒரு படப்பிடிப்பின்போது, அம்மா, எல்லாரையும் கும்பிட்டு அங்கிருந்த நாய்க்கும் வணக்கம் சொன்னதுபோலக் காட்டுகிறார்கள். புரட்சித் தலைவருக்கு அவமரியாதை செய்வதற்காக இதை செய்ததாகவும் காட்டுகிறார். அது தவறு, ஏனென்றால், அம்மாவுக்கு எப்போதும் புரட்சித் தலைவர்மீது அபார மரியாதை உண்டு. “இது போன்ற தவறான காட்சிகளை நீக்கிவிட்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால், வரலாறு மறைக்கப்படக்கூடாது” என்று பேசினார்.

கட்சி விசுவாசத்தால் நண்பர் ஜெயக்குமார் இவ்வாறு உள்ளக்குமுறலை வெளிப்படுத்தியிருக்கிறார் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், கட்சியைப் பற்றியும் ஜெயலலிதாவைப் பற்றியும் நன்கு அறிந்தவன் என்கிற முறையில், நான் ‘தலைவி’ பட இயக்குநர் பக்கமே சாயக் கூடும். ஏனென்றால், இந்தப் படத்தின் கதைக்கான நிறைய ஆய்வுகளைக் கடும் முயற்சியோடு செய்திருக்கிறார்கள். இந்தப் படத்தில் காட்டப்பட்ட பல நிகழ்வுகள் ஏற்கனவே அச்சிடப்பட்ட புத்தகங்களில் வெளிவந்துவிட்டன. இதேபோன்ற காட்சிகள், மணிரத்தினத்தின் ‘இருவர்’ படத்திலும் இடம்பெற்றிருக்கின்றன

# மரண அறிவித்தல்கள்

**மலர்வு**
**01 - 06 - 1932**



**உதிர்வு**
**11 - 09 - 2021**

## வைத்திலிங்கம் தம்பிஐயா ராஜநாயகம்

*(ஓய்வுபெற்ற தபால் அதிபர், JP)*
*வண்ணார்பண்ணை - அளவெட்டி*

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தம்பிஐயா ராஜநாயகம் அவர்கள் நேற்று (11.09.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற லிங்கேஸ்வரியின் அன்பு கணவரும், கௌரி, ஜெகதா அவர்களின் அன்புத் தந்தையும், கமலானந்தன், ஸ்ரீகுசன் ஆகியோரின் மாமனாரும், தர்மிசா, மிருஷா, கோகுல்ராஜ், நவராஜ், விதுஷா, நிஷ்வராஜ், ஓவியா, இலக்கியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

நேற்று (11.09.2021) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**0779328221**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**மலர்வு**
**28 - 09 - 1938**



**உதிர்வு**
**10 - 09 - 2021**

## சின்னையா சுப்பிரமணியம்

யாழ். சுன்னாகம் வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Evry ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சுப்பிரமணியம் நேற்று முன்தினம் (10.09.2021) வெள்ளிக்கிழமை காலமானார் .

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னையா – தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேல் – சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நீலாம்பிகை (ராணி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிறேமினி, பிறேமானந்தன் ( ஆனந்தன் – பிரான்ஸ் ), சோபியா ( பிரான்ஸ் ), திரேசா ( ஜேர்மனி ), சகிலா ( லண்டன் ) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

காலஞ்சென்ற நடராசா, லங்கநாதன் (குஞ்சு – சுவிஸ்), ராசேந்திரம் (இலங்கை), பஞ்சலிங்கம் (பஞ்சு – கனடா), அரியரட்ணம் (அரியம் – இலங்கை ), யோகராணி ( இலங்கை ), ராஜேஸ்வரி ( இலங்கை ), சரோஜா ( ஜேர்மனி ) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரன் ( பிரான்ஸ் ), அசோக் (ஜேர்மனி), பிரபா (லண்டன்), ரவீந்திரன் (இலங்கை), அனுசியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிதாஸ், கபிர்த்தன், சாயினி, சாகித்தியன், மதுமிதா, யாபேஸ், லக்சனா, ஜீவிதா, அபினாஸ், சயிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**சந்திரன் (மருமகன்) - 0033624970566**
**ஆனந்தன் (மகன்) - 0033628738090**
**அசோக் (மருமகன்) - 004915904696853**
**லங்கநாதன் (சகோதரன்) - 0041767924454**
**ராசேந்திரம் (சகோதரன்) - 0771753538**
**பஞ்சலிங்கம் (சகோதரன்) - 0016477082404**
**ராஜேஸ்வரி (சகோதரி) - 0778789881**
**சரோஜா (சகோதரி) - 0049208479229**
**அரியரட்ணம் (சகோதரன்) - 0778789881**
**யோகராணி (வாசன் - சகோதரி) - 0031649393119**

# சுகாதார தரப்பினரை பாதுகாத்தால்தான் மக்களையும் நாட்டையும் காப்பாற்ற முடியும்

## தொழிலாளர் தேசிய சங்கம் சுட்டிக்காட்டு

**(நுவரெலியா நிருபர்)**

"நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பது சுகாதாரத் தரப்பினரே. எனவே, அவர்களை முதலில் பாதுகாக்க வேண்டும். அவர்களது பாதுகாப்பை உறுதிசெய்யாவிட்டால் மக்களையும் நாட்டையும் காப்பாற்ற முடியாது."

- இவ்வாறு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் உப தலைவருமான மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சுகாதாரத் தரப்பினர் பல சந்தர்ப்பங்களில் பல எச்சரிக்கைகளை விடுத்தார்கள். இந்தக் கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பல நடைமுறைகளையும் பின்பற்றுமாறு கூறினார்கள். குறிப்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதிகள் அறிக்கையொன்றைக் கூட வெளியிட்டிருந்தனர்.

இதில் பல்வேறு விடயங்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. அதில் நாட்டை முடக்குதல், போக்குவரத்துத் தடையை ஏற்படுத்துதல், சுகாதாரத் தரப்பினரைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

இன்று சுகாதாரத் தரப்பினர் செய்கின்ற சேவைகளை நாம் வெறும் வார்த்தைகளால் கூற முடியாது. சர்வதேச பரிந்துரைகளை அமுல்படுத்தியிருந்தால் இன்று சுகாதாரத் தரப்பினரைக் காப்பாற்றியிருக்கலாம்.

காலதாமதமாக எடுக்கப்பட்ட முடிவுகள் காரணமாகத்தான் நாம் இன்று இந்த நிலைக்கு வந்துள்ளோம். மூன்றாவது தடைவையாக வந்த இந்தக் கொரோனா அலை எம்மைப் பாரியளவில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது" - என்றார். (இ)



# மத்திய வங்கியின் ஆளுநராக அரசியல்வாதியை நியமிப்பதா?

## கேள்வி எழுப்புகின்றது எதிர்க்கட்சி

கொழும்பு, செப். 12

அரசியல்வாதியொருவரை, அதிலும் அமைச்சுப்பதவி வகித்த ஒருவரை உடனடியாகவே மத்திய வங்கியின் ஆளுநராக நியமிப்பதென்பது அந்தக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய வங்கியானது அரசிடமிருந்து பிரிந்து சுயாதீனமாக செயற்படவேண்டும் என்பதே அதன் கொள்கைகளில் முதன்மையானதாகும். ஆனால் இப்போது மத்தியவங்கி அரச திணைக்களமொன்றைப்போல மாறியிருக்கின்றது என்று பலரும் விமர்சிக்கின்றார்கள்.

அவ்வாறிருக்கையில் அரசியல்வாதியொருவரை, அதிலும் அமைச்சுப்பதவி வகித்த ஒருவரை உடனடியாகவே மத்திய வங்கியின் ஆளுநராக நியமிப்பதென்பது அந்தக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்-என்றார்.

இலங்கை மத்தியவங்கியின் ஆளுநர் பொறுப்பிலிருந்து பேராசிரியர் டபிள்யு. டி.லக்ஷ்மன் விலகவுள்ள நிலையில், அப்பதவிக்கு தற்போதைய இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்படவிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்த 11 வயது சிறுமிக்கு கொரோனா தொற்று

யாழ்ப்பாணம், செப். 12

எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியினைச் சேர்ந்த 11 வயதுச் சிறுமி ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

கரம்பகம் பகுதியில் தாயாருடன் தனித்து வாழ்ந்த 11 வயதுச் சிறுமி ஒருவர் நஞ்சு அருந்தியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது தாயார் தன்னைத் தண்டித்ததாலேயே தான் நஞ்சு உட்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை அவர் உயிரிழந்தார் என யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

### கொரோனா...

இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 152 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 157 பேரில் 87 பெண்களும், 70 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஆண் ஒருவர், 03 பெண்கள் என 04 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 06 ஆண்கள், 17 பெண்கள் என 23 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 130 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 63 ஆண்களும், 67 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

### மோட்டார்...

தெரியவருவதாவது:

மந்துவில் பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய வயோதிபப் பெண் தனது மகனுடன் மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு அண்மையில் நடைபெற்ற உறவினர்களின் திருமண வீடு ஒன்றுக்காக சென்றிருந்தார்.

அப்போது நிலை தடுமாறி கீழே வீழ்ந்தபோது அவருடைய தலை கல் ஒன்றில் மோதியதால் தலையில் காயம் ஏற்பட்டிருக்கிறது.

அவர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

இருந்தபோதிலும் அவர் உயிரிழந்தார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

### பயங்கரவாதத்தை...

கரவாதத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு நேற்று முன்தினம் 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த பல அப்பாவி மக்களின் உயிர் மற்றும் உடலுறுப்புக்களின் இழப்புக்கு வழிவகுத்த அமெரிக்காவின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்று 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

அமெரிக்காவின் சமகால வரலாற்றில் மிகவும் வேதனையான நிகழ்வை அவர்கள் நினைவுகூரும் இத்தருணத்தில், அமெரிக்க மக்கள் மற்றும் அரசாங்கத்துடனான தனது ஒற்றுமையை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்துகின்றது.

கொடூரமான இந்தத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதற்கு இலங்கை விரும்புகின்றது-என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### சர்வதேச...

தளமாகக் கொண்ட கான்செப்ட் குளோபல் என்ற நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெற அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடனுக்கு 2 வருட சலுகைக் காலமும், திருப்பிச் செலுத்தும் காலம் 12 வருடங்களாகவும் உள்ளதாகவும் இந்த கடன் 3 சதவீத ஆண்டு வட்டி வீதத்தில் பெறப்படும் என்றும் எரிசக்தி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு சுமார் 330 மில்லியன் டொலர் கடன்பட்டிருப்பதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

கூட்டுத்தாபனம் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், இரு அரச வங்கிகளுக்கிடையே நிலுவையில் உள்ள கடன் கடிதங்களை தீர்க்க முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

### யாழ்ப்பாணத்தில்...

செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள்,

சுந்தரலிங்கம் மகேஸ்வரி (வயது 76), முருகேசு நமசிவாயம் (வயது 80) என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசு உடனே...

தேர்தலொன்றை நடத்தினால்தான் நாட்டை யார் ஆட்சி புரிய வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடு தற்போது மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கின்றது. எவ்வாறாயினும் நாட்டை வழிநடத்த எதிர்க்கட்சியினராகிய நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

தற்போதைய அரசின் பொறுப்பற்ற, திறமையற்ற மற்றும் முறையான கொள்கை இல்லாமையே நாடு நாளுக்கு நாள் பாதாளத்தை நோக்கிச் செல்வதற்குச் காரணமாகும்.

இந்த அரசுக்கு நாட்டை மீட்டெடுப்பதற்கான திறன் இல்லை" - என்றார். (இ)

### மக்களும்...

தாவது:-

"நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்படுவது மிகப் பலவீனமான மட்டத்தில் இருக்கின்றது.

இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கை முறையாகச் செயற்படுத்தாமல் நீடிப்பதில் பயனில்லை.

ஊரடங்கின்போது அதிகமான வாகனங்களையும் மக்களையும் வீதிகளில் காண்கின்றோம். இவ்வாறான ஊரடங்கால் பயனில்லை.

மக்கள் சுதந்திரமாக வீதிகளுக்கு வரும் பலவீனமான ஊரடங்குடன் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது.

அத்தியாவசிய தேவைகள் இன்றி வீதிகளில் நடமாடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார். (இ)

### யாழ். பல்கலை...

திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அவருடைய மரணத்துக்கான காரணம் வெளியாகவில்லை.

சுன்னாகம், கந்தரோடையைச் சேர்ந்த சாருகா திருலிங்கம் என்ற குறித்த மாணவி உடுவில் மகளிர் கல்லூரியில் முதன்மையான மாணவியாகத் திகழ்ந்துள்ளார்.

இவர் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தவர் என்றும், அண்மையில் வெளியாகிய பல்கலைக்கழக பரீட்சை முடிவுகளிலும் நிறைவான புள்ளிகளைப் பெற்றிருந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரின் பெற்றோர் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### நேற்று 2,796...

யல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 83 ஆயிரத்து 274 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,605 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 11 ஆயிரத்து 233 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

### பஞ்ஷீரில்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

"CH-4 ட்ரோன்களுக்கு பூமியில் இருந்து நேரடியாக ரேடியோ தொடர்பு கொள்ளும் விதத்தில் இடையூறுகளின்றி இருக்க வேண்டும். அது மிகவும் சிக்கலானது, ஆனால் அது சாத்திய மில்லை என்று கூற முடியாது" என்கிறார் ஜஸ்டின்.

ஆப்கனில் தாக்குதல் நடத்துவதால் பாகிஸ்தானுக்கு அதில் என்ன ராஜீய பலன் கள் இருக்கின்றன? என கேள்வி எழுப்புகிறார் இஸ்லாமாபாத்தைச் சேர்ந்த பாதுகாப்பு பகுப்பாய்வாளர் முனைவர் மரியா சுல்தான். இப்போது இருக்கும் சூழலில் நேரடியாக ஆப்கன் விவகாரங்களில் தலையிடுவது பாகிஸ்தானுக்கு ராஜீய ரீதியில் எப்படி பலனளிக்கும் என தெளிவாகத் தெரியவில்லை என்கிறார் ஜஸ்டின்.

பி.பி.சி.

ஈழநாடு
Eelanadu




# அரசு எடுத்த தவறான முடிவுகளால் வருமானத்தை இழந்துள்ளது நாடு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 12

**“அரசு எடுத்த தவறான முடிவுகளால் நாடு இன்று பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இந்த அரசு ஆட்சிக்கு வந்த 2019 ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து பெரும் வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.”**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஜனாதிபதியின் வெற்றிக்குப் பின்னர் அரசு எடுத்த தவறான வரிக் குறைப்பின் முடிவின் விளைவாக நாடு வருவாயை இழந்துள்ளது. 12 சதவீத வரியை 8 சதவீதமாகக் குறைத்ததால் அரசு கிட்டத்தட்ட 6 இலட்சத்து 700 பில்லியன் ரூபாவை இழந்தது. இதன் விளைவாக, அரசுக்கு வருவாய் குறைந்துள்ளதால் ஈடு செய்யும் முகமாக, அரசு 1,250 பில்லியன் ரூபாவைத் தற்போது அச்சிட்டுள்ளது.

இதன்விளைவாக, பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளதோடு பணவீக்கமும் அதிகரித்துள்ளது. இன்று அந்நியச் செலாவணிக் கையிருப்பு கிட்டத்தட்ட 2.9 பில்லியன் ரூபாவாகக் குறைந்துள்ளது.

இன்று எந்த உலக நாடுகளும் அரசுக்கு நிதி உதவியை அல்லது கடன் தொகையை வழங்க ஒப்புக்கொள்வதாக இல்லை.

நமது பொருளாதாரப் பிரச்னைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனவே தவிர, அவற்றில் எதுவுமே குறைவதாக இல்லை. அதனைத் தீர்ப்பதற்கான முயற்சிகளையும் காணமுடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

கொரோனா ஆரம்பம் முதலே இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. கட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்பட்டன. அடுத்து, சில அரச சார்பு நண்பர்களுக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்காகவும், அவர்களுக்கு அனுமதிப்பத்திர முறைமையுடன் சலுகைகளும் வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. அரசுடன் இருந்தவர்களுக்கு இந்த வழியில் இறக்குமதி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது

இதனால் எதிர்பார்த்த டொலர் கையிருப்பு அதிகரிக்காமல் குறைவடைந்ததால், பல்வேறு விடயங்களைக் காலத்துக்குக் காலம் கொண்டு வந்தனர். உரங்களுக்கான இறக்குமதிக்குத் தடைவிதித்தனர். எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பெற்றோலியத்துறை அமைச்சர் கேட்டதாக அரசு கடந்த காலங்களில் பலமுறை கூறியுள்ளது. அது குறித்த மாறுபட்ட அனைத்து விதமான கதைகளையும் அரசு உருவாக்கியது.

எண்ணெய் விலையை அதிகரித்தது ஜனாதிபதிதான். பெற்றோலியத்தைப் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் என்று அவர் ஒரு அறிக்கையையும் வெளியிட்டார்.

டொலர்கள் பற்றாக்குறை பற்றி அவர் கூறவில்லை. டொலர்கள் பற்றாக்குறையின் கதையைப் பெற்றோலியத்துறை அமைச்சர் கூறினார்.

அரசால் இவற்றை ஈடுசெய்ய முடியாதபோது, ஜனாதிபதி பல்வேறு மாற்று விடயங்களைக் கூறினார். மஞ்சள் இறக்குமதி செய்வதை நிறுத்தியபோது, நம் நாட்டில் மஞ்சள் பயிரிடப்போவதாக கூறப்பட்டது. டொலர் பற்றாக்குறையுள்ளதாகச் சொல்லவில்லை” - என்றார்.

# பிறந்து எட்டு நாள்களேயான குழந்தைக்கும் கொரோனா!

திருகோணமலை, செப். 12

திருகோணமலை - மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்ட பிறந்து 8 நாள்களேயான குழந்தைக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மஹதிவுல்வெவ - தெவனிபியவர பகுதியில் வசித்து வரும் 23 வயதுடைய பெண்ணின் குழந்தை காய்ச்சல் காரணமாக நேற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இந்நிலையில், அங்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அண்டிஜன் பரிசோதனை மூலம் குறித்த குழந்தைக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த குழந்தையின் தாய்க்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அண்டிஜன் பரிசோதனையில் அவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

# தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 69,288 பேர் கைது!

கொழும்பு. செப். 12

நாட்டில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மொத்தமாக 69 ஆயிரத்து 288 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியச்சர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள காணொளிப்பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரைக் கைதுசெய்யும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 639 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 40 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்படி கடந்த மாதம் 20ஆம் திகதி தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலப் பகுதியில் இருந்து இதுவரையான காலப்பகுதியில், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 13 ஆயிரத்து 83 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 1,445 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மொத்தமாக 69 ஆயிரத்து 288 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அநாவசியமான முறையில் மேல் மாகாண எல்லையைக் கடக்க முற்பட்ட 190 வாகனங்களில் பயணித்த 357 பேர் நேற்று (நேற்றுமுன்தினம்) திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.” - என்றார். (இ)

# கொரோனா நோயாளர்கள் வீட்டில் மரணிப்பதைத் தடுக்க நடவடிக்கை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, செப். 12

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் மரணமடைவதைத் தடுப்பதற்கு உள்ளூர் சுகாதார அதிகாரிகளால் மாற்றுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

வீட்டில் ஏற்படும் கொரோனா இறப்புகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள் குறித்த கேள்விக்குப் பதிலளிக்கும் விதமாகவே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுவதற்கு முன்னர் இறக்கும் கொரோனா நோயா ளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரு கின்றது. தொற்றுநோயியல் பிரிவினால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி, அனைத்து கொரோனா இறப்புகளில் 19.5 வீதமானவை வீட்டிலும் வைத்தியசாலையில் சேர்க்கப்படுவதற்கு முன்பும் நிகழ்கின்றன.

செப்ரெம்பர் 3ஆம் திகதி வரையான நிலவரப்படி, கொரோனாவின் மூன்றாம் அலையின்போது 1,339 தொற்றாளர்கள் தங்கள் வீடுகளில் இறந்துள்ளனர். மேலும் 573 பேர் வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளனர்.

கம்பஹா மாவட்டத்திலேயே இவ்வாறான இறப்புக்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன. முடக்கத்தின்போது அம்பு லன்ஸ் வாகனங்களை அழைப் பதில் சிரமங்கள் இருக்கலாம். இதுவே வீட்டில் சம்பவிக்கும் இறப்புகளுக்குப் பிரதான கார ணம்” - என்றார். (இ)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 4 பேர் கைது

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்., செம்மணிப் பகுதியிலுள்ள சிறுகாட்டில் நூதனமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நால்வரைப் யாழ். பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

செம்மணிப் பகுதியிலுள்ள சிறு பறட்டை காட்டில் கோடா ஊற வைத்து வீட்டு பாவனைப் பொருட்களின் உதவியுடன் வடித்து ஊரடங்கு நேரம் சந்தைப்படுத்திய நால்வரே நேற்று அதிகாலை ஒரு மணிக்கு மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இதன்போது 20 லீற்றர் கசிப்பு மற்றும் 60 லீற்றர் கோடாவுடன் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

*6.00 மணி* : பக்திப்பாடல்கள்
*6.30 மணி* : வணக்கம் டான்
*6.35 மணி* : மதம் சார்பான நற்சிந்தனைகள்
*6.55 மணி* : இன்றைய பலன்
*7.30 மணி* : இன்றைய பத்திரிகைகளில்
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை (நேரலை)
*10.00 மணி* : A.P.I.I.T NCUK PROGRAMME



*10.30 மணி* : அறிந்தும் அறியாமலும்
*11.00 மணி* : BEAT BOX
*11.30 மணி* : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

*12.00 மணி* : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
*1.00 மணி* : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



*1.30 மணி* : வீக் என்ட் மூவி-சந்திரமுகி
*4.30 மணி* : காட்டூன் தமிழ்
*5.00 மணி* : COFFE WITH பிரமுகர்
*6.00 மணி* : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்
*7.00 மணி* : SPOTLIGHT - மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற இராசமாணிக்கம் சாணக்கியன்



*8.00 மணி* : இரவுச் செய்திகள்
*09.00 மணி* :செல்லாடுகளம் -மாசற்ற மாநகரம்
*10.00 மணி*:-நேர்கொண்ட பார்வை-முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினர்- இதாயத் சத்தார்



**DAN COMEDY HD**

**காலை**

*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரடிவெடி
*10.00 மணி* : ஒரு பட கொமடி
*11.00 மணி* : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

*1.00 மணி* : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : குண்டக்க மண்டக்க
*5.00 மணி* : ஒரு பட கொமடி
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**

*8.00 மணி* : ஒரு படக்கொமடி
*9.00 மணி* : சிரிப்போ சிரிப்பு
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை
*7.00 மணி* : ஓய்வெடு நிலவே

**இரவு**

*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

*5.15 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*6.00 மணி* : தரம் 07 - தமிழ்
*6.45 மணி* : தரம் 08 - தமிழ்
*7.30 மணி* : தரம் 09 - கணிதம்
*8.15 மணி* : தரம் 10 - கணிதம்
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

*12.00 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*1.00 மணி* : தரம் 07 - தமிழ்
*2.00 மணி* : தரம் 08 - தமிழ்
*3.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
*3.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*4.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*5.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
*5.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
*6.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

*7.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**

*5.00 மணி* : சிவாய மந்திரம்
*6.00 மணி* : சுப்ரபாதம்
*6.30 மணி* : சுப்ரபாதம்
*07.00 மணி* : இன்றைய சிந்தனை
*07.05 மணி* : இன்றைய நாள்
*07.30 மணி* : மங்கள இசை
*08.00 மணி* : அருளுரை
*08.30 மணி* : திருவாசகம்
*09.00 மணி* : திருவிழா-01
*10.00 மணி* : பாடல்கள்
*10.30 மணி* : பஜனை
*11.00 மணி* : பக்திமலர்

**பகல்**

*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : திருவிழா-02
*6.00 மணி* :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

*7.00 மணி* : செய்திகள்
*7.30 மணி* : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**

*7.00 மணி* : நாளொரு நற்சிந்தனை
*7.30 மணி* : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
*8.00 மணி* : ஜெபமாலை
*09.30 மணி* : மன்றாடு
*10.00 மணி*: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
*10.30மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

*12.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*01.00 மணி* : திருப்பலி (மட்டக்களப்பு)
*03.00 மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)
*04.00 மணி*: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
*05.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*06.00 மணி* :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
*7.00 மணி* : ஞானவழி
*7.30 மணி* : படம்

**Pirai Television**

**காலை**

*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய பாடல்
*8.00 மணி* : கலந்துரையாடல்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : மனதோடு பேசலாம்
*10.30 மணி* : கண் வசண்ணம் கை வண்ணம்
*11.00 மணி* : சுவனப்பாதை
*11.30 மணி* : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : இஜ்லாமிய வரலாறு
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*3.30 மணி* : பள்ளிவாசல் ஆவணப்படம்
*4.00 மணி* : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
*5.00 மணி* : இறை தென்றல்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : இஸ்லாமிய வரலாறு